[illegible]

தொகுதி 6 இதழ் 7

1933 மார்ச்

DL

00211, M27 SN

M33.6.7

186924

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF S...
16 FEB 1934
MADRA...

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு சு. § ஆங்கீரச-மாசி 1933-பிப்ரவரி § திங்கள் எ.

உள்ளுறை

| | | பக்கம். |
|---|---|---|
| க. | சட்டம் | 241 |
| உ. | மதிப்புரை | 244 |
| ௩. | கோயில்நுழைவு | 246 |
| ச. | வர்ணதர்மம் | 249 |
| ரு. | பண்டைத் தமிழ்நாடு | 261 |
| சு. | ஓர்விண்ணப்பம் | 267 |
| எ. | விஞ | ,, |
| அ. | மகாத்மாக்களும் ஆலயசேவையும் | 268 |
| கூ. | கற்புங் கல்வியும் | 269 |
| ௰. | பூனா ஒப்பந்தத்தில் ஆலயப்ரவேசம் அடங்கவில்லை | 270 |
| கக. | ஆஸ்திகர்களே! | 272 |
| கஉ. | ஸ்ரீமான் காந்தியின் பத்துக்கேள்விக்கும் பதில் | 273 |
| க௩. | என்னே! துயிலின்பரிசு | 277 |
| கச. | ஓர் வேண்டுகோள் | 280 |
| கரு. | சங்கரலிங்க உலா | |

ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

சென்னைப் பதிவு எண் 2302.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:**—தை௨௮௳ குன்றக்குடியிலிருந்தும், திருவேலன்குடியிலிருந்தும் முருகவேள் தேனாற்றுக்கு எழுந்தருளி, தீர்த்தங்கொடுத்து, பழநியா யூருணி மண்டபப்படி தெப்போற்சவமும் கொண்டருளினர். அணியணியாக அன்பர் குழாங்கள் வந்து தரிசித்து இன்புற்றனர். ௨௯௳ தனவணிக நகரத்தார்கள் குன்றக்குடிவாழ் குமாரநாயகருக்குச் சர்க்கரைக் காவடிகள் கொண்டுசேர்த்தனர்.

இவ்வூர்த் தபாலாபீசுக்கு இருந்த இன்ஷியூரென்ஸ் லிஸ்டம், முன்னொரு சமயம் இந் நாட்டில் தபாற்கொள்ளை நடந்தகாலமுதல் நிறுத்தப்பட்டிருந்து, 1—2—1933 முதல் ஏற்படுத்தப் பெற்றிருப்பதுடன், சேவிங்ஸ்பாங் லிஸ்டமும் வைக்கப் பெற்றுளது.

சிவாலயத்திலும் குமாரவிநாயகர் திருக்கோவிலிலும் பதஞ்சலிக்கருளிய பரமநாடகதினமாகிய குருவாரபூசம் அந்திப்போதில் அபிடேகாராதனைகள் நடைபெற்றன. இம்மதி ௧௧௳ மகாசிவராத்திரி நான்கு யாம பூஜைகளும், குமார விநாயகர் திருக்கோயிலில் ௨௭௳ மகாமகதினத்தில் நடராஜரபிடேகமும் சிறப்பாக நடைபெறும்.

குடியிற்சிறந்த குமரன் கூடத்தகாதவர்களுடன் கூடி அவர்களின் துர்ப்போதனைகட்குள்ளாகி மதுவெறி காமவெறி மயக்கத்திலாழ்ந்து சூதாட்டத்திலும் துணிந்து யாதொரு பிரதிப்பிரயோஜனம் இல்லாமலும் துர்விநியோகத்துக்காக ஆகாவரி உடைமைகளைப் பெற்று ஒன்றுக்குப் பத்து நூறாக அவரவர் வேண்டிய வேண்டியபடிக்கும் எழுதிக்கொடுத்து ஏமாந்து, குடிகேடர்களுக்குக் கொண்டாட்டத்தை யுண்டுபடுத்தித் திரிகிறான். ஒழுங்கான நிலைமை யுடையவர்கட்கே ஒரு நூறு ஐம்பது பத்து ஐந்து கூட வாங்கக்கொடுக்க அரிதாயுள்ள இக்காலத்தில், ஒழுங்கும் நிலைமையுமில்லாத ஒரு குடிகாரனிடத்தில் பெருந்தொகைகளுக்குப் பல ஆதாவுகள் பிறப்பித்துக் கொள்வோர் எவ்வளவு உண்மையுடையவர்களென்பதும், அவர்களின் பேராசை என்னுமென்பதும் பின்னரே தெரியும்.

பசும்பால் எருமைப் பால் ஒரு ரூபாவுக்குப் பட்டணம்படி இரண்டு. பக்கத்தூர்களில் படிமூன்று.

**காரைக்குடி:**—31—1—1933 ல் நகரசபை கூடியதில், முனிஸிபல் ஆபீசு தேவைக்குக் கூடியவரை சுதேசி சாமான்களையே வாங்குவதெனவும், வியபிசார விடுதிகளை யொழிக்கவேண்டு மெனவும் தீர்மானங்கள் நிறைவேறினவாம். இவை நன்மைக்கு ஏதுவே.

**வண்டிவரி:**—மோட்டார் அல்லாத வண்டிகளுக்கு எடுபட்டுப்போன சுங்கவரி மீண்டும் விதிக்க, பல முனிஸிபாலிட்டிகளும் ஜில்லாபோர்டுகளும் வேண்டுகின்றனவாம். இது சட்டசபைக்கூட்டத்தில் கொண்டுவரப்படுமாம். சபைஅங்கத்தினர்கள் வருவாயிற் குறியாக இருப்பார்களே யல்லது, ஏழைவண்டிக்காரர்களுக்கு இரக்கங் காட்டுவது அருமையே.

**தஞ்சை:**—சைவசித்தாந்த இளைஞர் சங்கத்தின், 2—வது ஆண்டுவிழா அந்நகரசபைத் தலைவர் ராவ்பகதூர் சு. அ. சு. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் தலைமையில், தை ௨௪௳ பிற்பகல், மாயாண்டி சுவாமிகள் மடாலயத்தில், விரிவுரைகளுடன் சிறப்பாக நிறைவேறியது.


உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

ந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௬ } பலவான்குடி—ஆங்கீரச—மாசி { திங்கள் ௭.


உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## சட்டம்.

விதி விலக்குகளை வரன்முறை செய்வதே சட்டம் எனப்படும். இச் சட்டம் சனசமூகங்களிலேயும், அரசியலிலேயும், வேதாகமங்களிலேயும் உண்டு. இம் மூவகைச் சட்டமும் ஒன்றற்கொன்று உடன்பாடு கொண்டிருத்தலே ஒழுங்காகும். இம் மூன்றனுள், சனசமூகச் சட்டமானது அரசியல் சட்டத்தையும், கடவுளால்—கடவுட் பிரதிநிதிகளாகிய பெரியோர்களால் அருளிய வேதாகம உபநிடதச் சட்டங்களையும் தழுவிநடப்பது. இங்ஙனமாக, தெய்வீகச் சட்டத்தையும் இராஜீக சட்டத்தையுந் தழுவிநடக்கும் மக்கட் கூட்டத்தினர், அவ்விரண்டும் ஒன்றோடொன்று முரண்படாது இருத்தல் காரணமாக, இருவகையிலும் குற்றத்திற்கு ஆளாகாதவர்களாய் அவ்விரு சட்டத்தின் மாறுபடாத ஒரே தன்மைத்தான நெறியில் நிற்பவரானார்கள். இந் நிலைமையில், பிறந்துவளர்ந்து பெரியாரான காலமுதல் சட்டமறுப்பு இயக்கமே சாம்ராஜ்யம் என ஜனங்களிடையே போதித்து, அவ் வியக்கத்தைக் கையாளச் செய்து பார்த்ததில், அவ்வியக்கம் சிறைவாசத்துக்கு உதவியா யிருந்ததைத் தவிர்த்து உறுபயன் எதுவும் கிட்டாதாயிற்று. ஆகவே, இனி எந்தச் சட்டமறுப்பு இயக்கத்தைச் செய்யும்படி மக்களைத் தூண்டலா

மென்ற நோக்கத்தோடு, தெய்வீகச் சட்டத்தை மீறும்படி தூண்டலாயினர். அரசியல் சட்டத்தை மீறுவோர் உடனே தண்டிக்கப்படுதல்போல, தெய்வீகச் சட்டத்தை மீறுவோர் தண்டிக்கப்படுதல் கட்புலனுக்குப் பெரிதுங் காணப்படாமையால், தெய்வ நம்பிக்கை ஆலயநம்பிக்கை சிறிதும் இல்லாதவர்களும், தெய்வநிந்தனை ஆலயநிந்தனை செய்பவர்களும் சேர்ந்து இத் தெய்வச் சட்டமறுப்பியக்கஞ் செய்யலாயினர். தெய்வீகச் சட்டமறுப் பியக்கத்துக்கு உடந்தையாக அரசியற் சட்டமும் அமையவேண்டுமென, அரசியற் சட்ட மறுப்பியக்கங் காட்டிய அவர்களே வெட்கத்தை விடுத்து விழைவாராயினர்.

மனித வாழ்க்கையில் மதக்கொள்கை சிறந்த தென்பதை, மனிதராவார் எவரும் மறுக்கமுடியாது. அதுபற்றியே ஆங்கிலத்துரைத் தனத்தார், இப்பாரத நாட்டை அரசாளத் தொடங்கிய அக் காலத்திலேயே சாதி மதாசார விஷயங்களில் அரசியலார் தலையிடலாகாது." எனக் கேட்டுக்கொள்ளவும், உடன்படவும் நேர்ந்தது. அம்முறையே இதுவரையிலும் அரசியலார், சாதிசமய விஷயங்களிற் றலையிடாமலும், பாரத நாட்டினர் தங்கள் சாதி சமயாசாரங்களைத் தங்களின்பழமையான பழக்கவழக்க ஒழுக்கங்களின்படி யாதொரு விகற்பமும் இன்றி நடத்திக்கொண்டும் வருகின்றனர்.

மக்கட்குச் சுயராஜ்யவாழ்வுதர அவதரித்த மகாத்மா என்னும் பேர்பூண்டவர், தன்னை மக்கட் குழுவினர் பாராட்டியதிலிருந்து, தான் ஒரு நிகரில் பெரியாராக இறுமாப்புற்று, தானே திருமாலின் பதினோராவது அவதாரமாகக் கருதிக்கொண்டு, ஆலய நுழைவுக்கு அருகரல்லாத வர்க்கத்தினருக்கு, அரிஜனங்கள் என்றபெயர்தந்து, அவர்களை யெல்லாம் ஆலயத்துள் விட அரசியற் சட்டத்தை வேண்டியிரப்பாராம்; இன்றேல், உடல்விட்டிறப்பாராம். இவரது செயற்கருஞ் செயல்மிகச் சீரியதே.

ஒரு காலத்தில் அஹிம்சாதர்ம பரமோபதேசஞ் செய்தஇவர், பசுங்கன்றைக் கொல்வதும் தற்கொலை சூழ்வதும் மக்களைச் சிறைக்கூடம் புகுவிப்பதும் மக்கட்குள் விகற்பமூட்டுவதும் அரசியற் சட்டத்தை மறுத்து அரசினர்க் கிடர்புரிவதும், தம் தேவைக்குத் தக்க சட்டமெல்லாம் செய்யும்படி தூன்புறுத்துவதுமே, இவரது அஹிம்ஸா தருமம் போலும்.



இவ் வுடலோ டழியும் உலகவாழ்க்கைக்கு ஆதாரமாகிய சுயராஜ்ய வாழ்வு வாங்கித்தருவதாக மார்தட்டிய இவர், இம்மை மறுமைக் கேதுவாகிய சமயாசார சாம்ராஜ்யவாழ்வுக்கு உலைவையாது சும்மாவிட்டு விடுவதே போதியதாகும். இவர் சுயராஜ்யம் பெறு முன்னதாகவே, சுயராஜ்யம் வரப்போகிறதாகவும், வந்தவுடன் இன்னின்ன விதமாகத்தான் சட்டம் வகுப்பேன் என்றும் இப்போதே மனோராஜ்யம் பண்ணி வெளியிடுகிறார். இந்த மகாநுபாவர், எத்தனை யவதாரம் எடுத்தாலும் அபராதி யாவாரே யன்றி, அரசுரிமை பெறப் போகிறதில்லை.

இவர் விரும்பும் அரசுரிமை உயிரற்ற உடலை விரும்புவதுபோல, சுதர்மத்தை யிழந்து சுயராஜ்யம் பெறுதல் என்கையால், அது பாரதமக்கட்கு ஒரு சிறிதும் வேண்டுவதே யில்லை.

தன்னை அரியாகவும், நீசர்களைத் தனது பரிவாரங்களாகிய அரிசனங்களென்றும் கொண்டாற்றான், அரிசனங்களென்ற பெயர் அவர்கட்குப் பொருந்தும். அதுதான் கருத்து என்றாலும், அக் குழுவினுட் பெரும்பகுதியார் சிவசம்பந்தம் உடையராய்த் தங்களைச் சாம்பான்மார்கள் என வழங்கிக்கொண்டிருத்தலால், இவரிட்ட பெயர் 'பசுக்களை அரிந்துண்போர்' என்ற இழிவை நிலைநாட்டுவதென வெறுத்து ஒதுக்கவும் செய்வர்.

இதனால், இவர் கொண்ட தெய்வீகச் சட்டமறுப்பு இயக்கம், மேல்தரம் கீழ்த்தரம் என்ற இரு தரத்தினராலும் ஏற்கப்படாதென்பதும், தெய்வீகச் சட்டமறுப்புக்காக அரசியற் சட்டத்தை அவாவுவது சிரிப்புக் கிடமாமென்பதும், அரசியற் சட்டமறுப் பியக்கம்போல இவ் வியக்கமும் பயனில் செயலாய் ஒழியுமென்பதும் பெறப்படும்.

தனிச் சுதந்தரம் பெற அவதரித்த இவர், சமுதாயத்தினரின் சாதியாசார கலியாணங்களையும், சமயாசார ஆலயங்களையும், அரசியற் சட்டக் கட்டுப்பாட்டினுட் புகுத்திவிடத் துணிந்தது போற்றற் குரியதே. அரசியற் சட்டமானது தெய்வீகச் சட்டத்தைத் தழுவி யின்று இருத்தல்போல,என்றும் இருத்தலே நன்றாகும். ஒன்றற்கொன்று மாறுபடுவதாயின், ஜனசமூகம் இருவகைக் குற்றத்துக்கும் ஆளாக நேரும்.

மேலும், அருகரல்லாதவர்கள் ஆலயத்துள் நுழைவதால், ஆலயத்துக்காவது, உலகத்துக்காவது, உலகாளும் அரசர்க்காவது நன்மையாகாதென்பது, வைதிக தர்மநூற் றுணிபு.

ஆகையால், மநுதர்ம சாஸ்திரத்திற்கும் மகாராணியாரின் வாக்குறுதிக்கும் மாறுபடாதபடி, இப்போதுள்ளவாறே அரசாங்கத்தார் இருந்துவர வேண்டுமேயல்லாமல், பாரதமக்களின் சாதிசமயாசாரங்களில் தலையிடப்படாதென, ஆஸ்திக மக்கள் ஆங்காங்கு கூட்டங்கூடி, அரசினருக்குத் தெரிவித்துக்கொண்டால், புதிதாகக் கொண்டுவந்திருக்கிற மசோதாக்கள் சட்டமாகாது தள்ளப்பட்டொழியும். சநாதன தர்மிகள் இதுசமயத்தில் சோர்வுறாது ஊக்கத்துடன் முன்வந்து, தங்கள் தங்கள் சமயாதீன தர்மகர்த்தர்களை அறைகூவி, அவர்களையும் இது தங்கட்குரிய கடமையென உணரச்செய்து, மதத் துரோகிகளின் மசோதாக்கள் மறைந்தொழியும்படி தீவிரமாக முயன்றால், திருவருளும் துணை புரியும். தெய்வீகச் சட்டம் நிலைநிற்கவும், அச் சட்டத்தைத் தழுவி நடக்கவும் ஆஸ்திக மக்கள் முன் வருவார்களாக.

---

“அரையன்வா யுரைகள் வரைதரு முடங்க லதுவரக் காணின்மற் றவனுள், தரையின்வாழ் பவருண் ணடுங்கியோர்ந் ததன்வாய்ச் சாற்றிய முறைசெய்வா ரென்றாற், கரையில்பே ரின்பந் தரவெமக் கிறைசொல் கட்டுரை யென்னின்வே றென்னை, உரையுள வேதா கமமவ னெனக்கண் டுரைத்தவா புரிகுவ தல்லால்.”

# மதிப்புரை.

## விசுவநாதர் திருப்பணி முறையீடு.

இது, தேவகோட்டை தி—வகைப் பிள்ளையார் கோவிலின்கணுள்ள ஸ்ரீ விசாலாக்ஷியம்பா சமேத விசுவநாதர் கோயிற் றிருப்பணி விஷயமான முறையீட்டை, ஷெ யூரின்கணுள்ள இளையாற்றக்குடிக்கோயிற் பெருமரபூர் வகுப்பு மகா-ா-ா-ஸ்ரீ தி- வகையார்களது சமூகத்துக்கு, அவர்களுள் ஒருவரும்—செந்தமிழ்ப்புலமையிற் சிறந்தவரும்—சிவநேசச் செல்வரும்—சைவசமய சதாசார முடையவரும் ஆகிய வெ. ஆ. தி. மா. சிதம்பரச் செட்டியாரவர்கள், திட்ப நுட்பஞ் செறிந்த சொற்பொருளா லாக்கியளித்த சிறந்த செந்தமிழ் உரைநடைநூல். பாயிரமும், நூல்வரலாற்றுச் சருக்கம் முதல் வேண்டுகோட்சருக்கம் ஈறாகப் பதினாறு சருக்கங்களும் உடையது.



ஒவ்வொரு சருக்கமும், செட்டியாரவர்களா லியற்றப்பெற்ற கற்பனைத் திறனமைந்த கவியொன்றைத் தொடக்கமாகக் கொண்டு, காரணகாரிய இயல் வழாது அமைக்கப் பெற்றிருக்கிறது. “தி—வகையார்கள், ஷெ பிள்ளையார்கோவிலின்கணுள்ள ஸ்ரீ விசாலாக்ஷியம்பா சமேத விசுவநாதர் கோயிற் றிருப்பணியை, அருத்த மண்டபத்துடன் அமைத்தலே சுருதி யுக்தி யநுபவத்துக்குப் பொருத்தமாம்” என்னும் ஒரு முறையீட்டுக்கு அங்கமாகப் பரமசிவ மகிமை—பராசத்திமகிமை ஆதிய பலவற்றையும் இயைபாக வகுத்துக்கொண்டு, அவற்றைத் தென்மொழி வடமொழிக்கணுள்ள சிறந்த பல நூற்பிரமாணங்கள் காட்டி விளக்கியிருத்தல், செட்டியாரவர்களின் பன்னூலுணர்வு—சைவசமய சீலம்—சிவமே பொருளெனும் திடசித்தம்—திருக்கோயில் வழிபாடாதிய செம்மை நலன் பலவும் தெற்றெனவுணர்த்தும் பெற்றியுடையதாகும். ஒவ்வொரு சருக்கத்திலும் தங்கள் வகையார்களை முன்னிலைப்படுத்தி விளித்தலும் முடித்தலுமானவுரைகள் மிக்க விநயமுடையனவாக மிளிர்கின்றன. தி-வகைப் பிள்ளையார்கோயில் வரலாற்றுச் சருக்கத்தில், செட்டியாரவர்கள் தமது வமிசாவளியை வகுத்துரைத்திருத்தல், இவரது பரம்பரையே தீவிரதர சிவபக்தியைப் பெரும்பேறாகக்கொண்ட பெருமையுடையதாகும் என விளக்காநின்றது. இந் நூலை, ஆக்கியோர் தமது முறையீட்டை லட்சியமாகக்கொண்டு, சைவசமய வுண்மை—சிவபரத்துவம் ஆதியவைகளை வச்சிர ஸ்தம்பம்போல் நிலைநாட்டி, சைவநன்மக்கட்கு ஓர் நல் விருந்தாக நல்கியுள்ளார் என்பது மிகையாகாது. பல்வகைப் பொருளையும் பாங்குற விளக்கும் பன்னூற்றுக்கணக்கான பன்னூற் பிரமாணங்களைக் கொண்டுள்ளதால், இவ்வரியபெரிய நூலை, பன்னூற் றிரட்டெனப் பகருவோமா? தொன்னூற் றிரட்டெனச் சொல்லுவோமா? நன்னூற் றிரட்டென நவிலுவோமா? இந்நூல் திருப்பணி செய்யும் கிரமங்களைச் செவ்விதில் விளக்குமென்பது இதிலுள்ள திருப்பணிச் சருக்கத்தை நன்கு படித்துத் தெளியலாம். இத்தகைய ஒரு பெருநூலை உயர்ந்த கடிதத்திற் றிருந்தியமுறையி லச்சிட்டு யாவர்க்கும் இலவசமாக வழங்கிய திருவாளர் செட்டியாரவர்களின் வள்ளன்மை நம்மனோராற் போற்றத் தகுவதாம்.

ப—ர்.

---

உ

# கோயில் நுழைவு.

உலகன்பட்டி, சித்தாந்தசைவ நிலயம்,
உயர்திரு இலக்குமண சுவாமி அவர்கள்.

எண்ணிறந்த உயிர்கட்கும், பல்லாயிரங் கோடி அண்டங்கட்கும் சிவபிரானே நாயகராவர். அவரை வழிபடும் நெறிகள் அன்புநெறி யெனவும் அறிவுநெறி யெனவும் இருவகைப்படும். அன்புநெறி, அன்பு முற்பட்டும், அறிவு அதனுள் அடங்கியும் நிற்க, சிவாகம விதியைக் கடந்து செய்யும் செயல். அறிவுநெறி, அறிவு முற்பட்டும், அன்பு அதனுள் அடங்கியும் நிற்க, விதித்தவாறு செய்யும் செயல். இவற்றை முறையே பத்திமார்க்கம் விதிமார்க்கம் எனவும், வல்வினை மெல்வினை எனவும் பெரியார் கூறுவர். முன் மெல்வினை புரிந்தோரே பின் வல்வினை புரிதற் குரியராவர். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் வல்வினை புரிந்த கண்ணப்பர் முதலியோர் முற்பிறப்பில் மெல்வினைபுரிந்தோரே யாவர்.

நமது புண்ணியபூமியிலுள்ள சிவாலயங்கள் முற்றும் சிவாகமங்களில் விதித்தவாறே கட்டப்பட்டு பூஜைவிழாக்கள் நடத்தப்பெற்று வருகின்றன. அதனால்,அவற்றுட்புகுந்து வணங்குவோரும் விதிக்கப்பட்டவராகவேயிருத்தல்வேண்டும் என்பது தானேபெறப்படுகின்றது. விதிக்கப்பட்டவர்,சிவதீக்கை பெற்றவரும் தீக்கைபெறுதற்குரிய நால்வருணத்தவருமே யாவர் எனவும், பஞ்சமர் இருவினையொப்பு, மலபரிபாகம், தீவிரதர சத்திநிபாதம் பெற்றிருப்பின் ஞானதீக்கைக்கு உரியராவரே யன்றி, எவ்வாற்றானும்ஔத்திரி தீக்கைக்கு உரியராகார் எனவும், அதனால், சிவாலயத்துள் நுழைதற்கும்உரியரல்லர் எனவும் சிவாகமங்கள்கூறுகின்றன.என்னை? அப் புலைமக்கள் ஆவுரித்துத் தின்று கள்ளுண்டு களித்தலாலென்க. பஞ்சமருள் திருநாளைப் போவார், பெற்றான்சாம்பான் ஆகிய பெரியார்களைப் போல ஞானதீக்கை பெறுதற்குரிய பக்குவர்களாயிருப்பதும் மிகஅரிதினும் அரிதாம். இது பற்றியே, "தவஞ்செய்த நற்சார்பில் வந்துதித்து" என நமது மெய்கண்டசிவமும், 'தரையினிற் கீழைவீட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து' எனவும், 'இந்தப் பார்மேல் நாட்டிய நற்குலத்தினில் வந்தவதரித்து' எனவும் அருணந்தி சிவமும் கூறியருளினர். இத்திருவாக்குகள் இழிந்தபுலைச்சாதி என்றும் உள்ளது என்பதனையும், அதிற்பிறந்தோர் சிவதீக்கைபெற்றுஉண்மைச் சரியை, கிரியை, யோகங்களாகிய இறப்பில் தவஞ்செய்தற்குரியரல்லர் என்பதனையும் நன்கு வலியுறுத்துகின்றன.

'கன்மநெறி திரிவிதம்நற் சாதிஆயு போகக் கடனதென வரும்மூன்றும் உயிரொன்றிற் கலத்தல், தொன்மையதா மல்ல துண வாகா' என உமாபதி சிவமும், 'பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும், ஆறு முன் கருவுட் பட்ட தவ்விதி யனுப வத்தால், எறிடும்' என அருணந்தி சிவமும் அருளிச்செய்தவாறு, உயர்குலம், இழிகுலம், மிகுந்தபோகம், சுருங்கியபோகம், நிறைந்தவாணாள், குறைந்தவாணாள், ஆயவைகள் முன்னைவினைக் கீடாக இறைவனால் விதிக்கப்பட்டனவேயாம். அவற்றுள், சாதி ஒன்றைமாத்திரம் சமப்படுத்த முயலுவோர் ஏனைய இரண்டையும் அங்ஙனம் செய்யமுயலாதிருப்பது இயலாமை கருதிப்போலும். அவ்விரண்டும்



இயலாதாகவே இவ்வொன்றுமாத்திரம் இயலுமெனக் கொண்டஅன்னார் மதிவன்மை வியக்கத்தக்கதே.

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்.

என்ற கந்தபுராணச் செய்யுளும் ஈண்டு நோக்கற்பாலது. நமது மணிவாசகப் பெருமான் முறுகிவளர்ந்த அன்புமேலீட்டால் தன்னைத்தாழ்த்திக் கூறப்புகுந்த விடங்களில் இழிவுடைய நாயைச்சுட்டுவது போலவே, புலையரையும் சுட்டி '**புழுத்தலைப் புலையனேன்**' எனவும், 'நீசனேன்' எனவும், 'வஞ்சகப்பெரும்புலையன்' எனவும் கூறியுள்ளார்கள். இதனாலும் புலையர் இழிவுடையவர் என்பது பெறப்படுகின்றது. ஆளுடைய அரசும், 'ஆவுரித்துத்தின்றுழலும் **புலையரேனும்**' என்றருளிய வாக்கியத்தில் உம்மையால் புலையரைத் தாழ்த்திக் காட்டியிருக்கின்றனர்.

மணிவாசக அடிகள், 'சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும், ஆதமிலி நாயேன்' எனக் கூறியிருக்கின்றனரே யெனில், அது முறுகிவளர்ந்த அன்புமேலிட்ட விடத்தும்; ஞானநிட்டை கைவரப்பெற்ற விடத்தும், சாதிமுதலியன முன்னிற்காவெனக் கூறியதேயாம். சைவருட்சிலர் இதுபோன்ற வாக்கியங்களையும், திருநீலகண்டப் பெரும்பாணர் முதலியோர் சரிதங்களையும் எடுத்துக்காட்டி, சுத்தர்களாயின் எவ்வகைப்பட்ட இழிந்தசாதியாராயினும் சிவாலயத்துள் நுழையலாம் எனக்கூறிவாதிடுகின்றனர். அன்னார் தம்நிலை யாது? சிவானுபூதிச் செல்வர்களின் நிலை யாது? என்பதனையும், ஔத்திரி தீக்கைக்கு உரிமைபெறாதவர் சுத்தராவதெப்படி? என்பதனையும் ஒருசிறிதும் உணர்ந்திலர். இத் தகையினரை நோக்கியே, கண்ணுடையவள்ளலார்,

யானைமதப் பட்டா லலங்கார மன்றிநாய்
தானுமதப் பட்டாற் சரியாமோ—ஞானி
தடைமீறி னாலும் சதுராகும் கன்மி
கடைமீற லாகாது காண்.

எனக் கூறிப்போந்தனர். ஞானநிட்டை கைவரப்பெற்றோர்க்கே சாதி முதலியன ஒழிவுறும் என்பதை, "ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு நன்மையொடு தீமையிலை" என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாலும் நன்கறியலாம்.

திருநீலகண்டப் பெரும்பாணனர் இறைவன் திருவடிக்கண் இடையறா அன்பு செலுத்துபவர்; இறைவன் மனம் கனியப் பாடும் இசைத்திறம் வாய்த்தவர்; ஞானசம்பந்தமூர்த்திகளால் எதிர்கொண் டழைக்கப்படும் தகுதிபெற்றவர். அத்தகையினராயினும் அப் பெரியாரை 'ஆளுடைய பிள்ளையார் சீகாழியில் திருக்கோபுர வாயிலின்முன் நிறுத்தி இசைபாடச் செய்தனரே யன்றி, உட்புகுந்து பாடச் செய்யவில்லை. இதனை,

கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்பிடுவித்
தேயுமிசை யாழுங்க ளிறைவருக்கிங் கியற்றுமென
வாயபுகழ்ப் பிள்ளையா ரருள்பெற்ற வதற்கிறைஞ்சி
மேயதொடைத் தந்திரியாழ் வீக்கிமிசை விரிக்கின்றார்.

என்னும் சேக்கிழார்பெருமான் திருவாக்கால் அறியலாகும். திருநாளைப்

போவார் சரிதமும் தீண்டப்படாதார் கோயிலினுள் நுழைதல் கூடாதென்பதை வலியுறுத்துகிறது. பதியன்புவடிவாய்த் திகழ்ந்த நந்தனாரே புலையுடலோடு சபாநாதன் திருமுன் செல்ல இயலாது, இன்னல்தரும் இழிபிறவி யிது தடையென்று வருந்தி நின்றாரெனில், கோவூன் தின்று, மதுவருந்திக் களிக்கும் இழி புலையர்கள் எங்ஙனம் சிவாலயத்துள் நுழைதல் கூடும்? என்பதை மெய்யன்பர்கள் சிந்தித்துத் தேர்வார்களாக.

சிவாலயங்களில் சிவாகமவிதிக்கு விரோதமாகச் சிலதவறுகள் நடைபெறுவதால், புலையரையும் உள்விடலாம் எனச் சிலர்கூறுகின்றனர். நம்முடலில் ஒரு சிறுபுண்தோன்றினால் நல்ல மருந்தைத்தடவி அதனை ஒழிவுறச்செய்து இன்புறுகின்றோமேயன்றி, மேலும் பலபெரிய புண்களையுண்டாகச்செய்து துன்புறுவதில்லை. அஃதேபோல, சிவாலயங்களில் நிகழும் சிறியதவறுகளை ஒழிவுறச் செய்து இறைவனுடைய அறக்கருணைக்கு ஆளாகி இன்புறுதலைவிடுத்து, மேலும் கொடியதவறுகளை யிழைத்து மறக்கருணைக்கு ஆளாகித் துன்புற எண்ணுதல் அறிவுடையோர் செயலாகாது.

முற்பிறப்பில் செய்த தீவினையால் சாதிச்சண்டாளராயும், இப் பிறப்பில் செய்கின்ற தீவினையால் கன்மசண்டாளராயும் உள்ள புலைமக்கள் அனைவரையும் ஒருங்கே சிவாலயங்களுள் புகுவிக்க வேண்டும் என்று, காந்தியென்னும் பெயருடைய ஒரு சிவத்துரோகி பெருமுயற்சி செய்து வருகின்றார்: சில தீவினையாளர் அவர் கொள்கையைப் பின்பற்றி நிற்கின்றனர். காந்தி ஒரு சமணரேயாவர். என்னை? முன்னைச் சமணரைப் போல சிவாலயங்களைப் பழித்துக் கூறி நம் சமயவரம்பை அழிக்கமுயல்வதால் என்க. தீவினைவயத்தால் தனக்கு நேர்ந்த சிறைவாசத்தை நீக்கிக் கொள்ள இயலாத காந்தி, பிறருக்கு நன்மை செய்வதெப்படி? நம் நாட்டுமக்களடைந்ததுன்ப முழுதுக்கும் இக்காந்தியே காரணமாவர் என்பது நுண்ணறிவுடையாருக்கு நன்கு புலனாகும். இன்றும், இக்காந்தி கொள்கையைப் பின்பற்றுவோர் தப்பாது கேடுறுவர் என்பது சத்தியமாகும்.

சிவாலயங்கள் முற்றும் நம் சைவமக்களுக்கே உரியன ஆதலால், சைவ நன்மக்களனைவரும் ஒருங்கு குழுமி, கலங்காத சித்தத்துடன் அன்பு வீரமுடையராய் நின்று, காந்தியாலும், காந்தி பரிசனங்களாலும் வரும் தீங்கைத்தடுத்து, நம் சமயவரம்பை நிலைபெறச்செய்து, சிறப்புற்றுவாழுமாறு இறைவன் திருவருள் புரிவாராக.

இனி, சிவாலய மல்லாத பிறவிடங்களில் பத்திநெறியைக் கடைப்பிடித்து நின்று, "எவரேனும் தாமாக" என்னும் முதலையுடைய திருத்தாண்டகத்தைச் சிரமேற்கொண்டு,

"புலையரே யேனும் ஈசன் பொலன்கழ லடியிற் புந்தி
நிலையரேல் அவர்க்குப் பூசை நிகழ்த்துதல் நெறியே"

எனச் சிவ தருமோத்தரத்திற் கூறியவாறு, எக் குலத்தவ ராயினும் திருவெண்ணீறும், உருத்திராக்கமும் அணிந்து, இறைவன் திருவடிக்கண் மெய்யன்பு செலுத்துபவராயின், அவரைச் சிவமெனவேகண்டு வழிபடக்கடவர். அவ்வாறு வழிபாடு செய்வோரே உண்மைச் சைவரெனக் கூறப்படுவர். திருநீலநக்க நாயனார் திருநீலகண்டப் பெரும்பாணருக்குத் தம் மனைக்கண் ஓமகுண்டத்தின் அருகில் தங்க இடங்கொடுத்ததும் இப்பத்திநெறிபற்றியேயாம் என்பதனை, அவரை எடுத்துக்காட்டி வாதிடுவோர் உணரக்கடவர்.

---

உ

# வர்ண தர்மம்.

[ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள், 15—10—1932ல் திருமயிலாப்பூரிற் செய்த பிரசங்கம்.]

நம் தேசத்தில் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்ரர் என்று நான்கு வர்ணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த வர்ணங்களைத்தான் நாம் பெரும்பாலும் ஜாதி என்றும் சொல்லுகிறோம். அந்த நான்கு வர்ணங்களைப்பற்றிய விஷயங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வர்ணத்தாருக்கும் தனித்தனியே காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒருவர் செய்த காரியத்தை மற்றொருவர் செய்யக்கூடாது. ஒவ்வொருவருக்கும் பல விதமான நிர்ப்பந்தங்கள் உண்டு. ஒரு குடியானவன் பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு பூணூல் அணிந்து பவித்ரம் போட்டுக்கொண்டு வந்தால் நமக்குக் கோபம் வருகிறது. நிரம்ப மீறிப்போய் விட்டானென்று சொல்லுகிறோம். ப்ராம்மணன் சுருட்டுக்குடித்துக் கொண்டு பஞ்சகச்சம் கட்டிக்கொள்ளாமல் பூணூல் போட்டுக்கொள்ளாமல் வந்தால் அவனை அயோக்கியனென்று சொல்லுகிறோம். பறையனும் குடியானவனும்குடித்தால் அவ்வளவாகக் கோபித்துக் கொள்வதில்லை. ப்ராம்மணன் குடித்தால் ஜாதிப்ரஷ்டம் செய்யவேண்டும் என்றஎண்ணம் உண்டாகிறது. அவனை அதிகமாய்ப் பரிஹஸிக்கிறோம். இவ்வளவு சாதிக்காரர்களும் ஒரே மதத்தை உடையவர்களே யானாலும், நல்லகாரியமாயிருந்தாலும் கெட்ட காரியமாயிருந்தாலும் ஒருவர்செய்வதை மற்றவர் செய்தால் கோபம் வருகிறது. ப்ராம்மணன் கலப்பை எடுத்து உழுதால் ஆசாரமில்லை என்று சொல்லுகிறோம். பறையன் வேதாத்யயனம் செய்தால் காலம்கெட்டுப்போயிற்றென்றுகுறை கூறுகிறோம். இப்படி ஒரே மதத்தில் பலவித வித்யாசங்கள் இருக்கின்றன. ஒருவரோடு ஒருவர் உட்கார்ந்து சாப்பிடக்கூடாது, ஒரு ஜாதியாரைத் தொடக்கூடாது, ஒருவர்கிட்ட வரக்கூடாது, ஒரேவீட்டிற் குடியிருக்கக்கூடாது, கல்யாணம் பண்ணக்கூடாது, ஒருவர் செய்தகாரியத்தை மற்றொருவர் செய்யக்கூடாது என்று இப்படிஎவ்வளவோ வித்யாசங்கள் இருக்கின்றன. நாலு வர்ணம் என்று பெயரளவில் தான் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்கான பிரிவுகள் இருக்கின்றன. இப்படி இந்தமதமானது ஒரு விசித்ரமான மதமாக இருக்கிறது. முன்னொருநாள் லோகம் முழுவதற்கும் இந்த ஒரேமதம் இருந்தது என்று சொன்னேன். அவ்வளவு பெருமையுள்ளமதத்தில் இப்படி ஒன்றுக்கொன்றுவித்யாசப்படும் பல ஸம்ரதாயங்கள் இருக்கின்றன. மற்ற மதங்களிலும் விதிகளும் நிஷேதங்களும் உண்டு. ஆனால், அந்த மதத்திலுள்ள யாவர்க்கும் ஒரே விதமான விதிகள் ஒரே விதமான விலக்குகளே உண்டு. நமக்குள்ளேயோ ஒரே மதமாக இருந்தாலும் விதிகளும் நிஷேதங்களும் பல வகைகளாக இருக்கின்றன. ஒரு காரியத்தை ஒருவன் செய்தால் தர்மமாகிறது. அதையே வேறொருவன் செய்தால் அதர்மமென்கிறோம்.

இவ்விடத்தில் ஓர் உதாஹரணம் நினைவுக்கு வருகிறது. ஒரு பெரியவர் ஒரு பெரிய ஆச்சரியத்தைச் சொல்லுகிறார். நாமெல்லாம் மரணமடைவது ஆச்சரியமன்று; இந்த உடம்பில் இருக்கிற ஒன்பது ஓட்டைகளுக்குள்ளே உயிரானது போகாமல் நிற்கிறதே, அதுதான் பெரிய ஆச்சரியம் என்று அவர் சொல்லி இருக்கிறார்.

"நவத்வாரே சரீரேஸ்மின்னாயுஹ ஸ்ரவதி ஸந்ததம்
ஜீவதித்யத்புதம் தத்ர கச்சதீதி கிமத்புதம்"

அதைப்போலப்பலவிதமான ஸந்தேஹங்களுக்கும் வித்யாஸங்களுக்கும் இடமான இந்தமதமானது எவ்வளவோ வருஷங்களாக இருக்கிறதே என்பதை நினைத்து ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

பறையனும் சக்கிலியனும் தங்களுக்குள் வித்யாஸம் பாராட்டுகிறார்கள். எவ்விடத்திலும் வித்யாஸம் காணப்படுகிறது. கோயிலுக்குப் போனால் ப்ராம்மணன் அர்த்தமண்டபத்தின் வரைக்குந்தான் போகலாமாம். மற்றவர்கள் வெளியிலே நிற்கவேண்டுமாம். சிலபேர் த்வஜஸ்தம்பத்தினடியிலே நிற்க வேண்டுமாம். இப்படியே நம்முடைய வீட்டிற்குள்ளும் வித்யாஸம் இருக்கிறது. சில பேர் அன்ன ச்ராத்தம் செய்யலாம். சிலபேர் ஆமச்ராத்தந்தான் பண்ணவேண்டும். சில காரியங்களைச் சிலபேர் வேதோக்தமாகவே செய்யவேண்டும். அதேமாதிரி காரியத்தைச்சிலபேர் வேதோக்தமாகச் செய்தால் அவர்களுக்குக் கெடுதல் உண்டாகும். வேதத்தை விட்டால் சிலருக்குப் பாபம். வேதம் சொன்னால் சிலருக்குப் பாபம். இவ்வளவு வித்யாஸங்களும் பக்ஷபாதங்களும் என் இருக்கின்றன?

இந்த விஷயங்களை யெல்லாம் சொல்லிக்கொள்வது அவமானமாக இருக்கிறதென்று நாம் நினைக்கிறோம். இவை தொலைந்தால் நல்லதென்றும் நினைக்கிறோம். இந்த வித்யாஸங்கள் பல நல்ல அம்சங்களையுடைய நமது மதத்துக்குக் களங்கமாக இருக்கின்றன என்று சிலர் சொல்லுகிறார்கள். நன்றாக ஊன்றிப் பார்த்தால் முழுவதும் இப்படித்தான் வித்யாஸம் இருக்கிறது. நல்ல அம்சம் ஒன்றுகூட இல்லையென்றே சிலசமயம் தோன்றுகிறது. இப்படிப் பலபேருக்கு இந்த விஷயங்களில் மனஸ் உறுத்திக்கொண்டே இருக்கிறது. சில பேர் ஏதாவது தெரிந்து ஸமாதானம் செய்துகொள்ளுகிறார்கள். சில சமயங்களில் சிலபேர் இந்தமாதிரி வித்யாசங்களை எடுத்துக்காட்டி உறுத்தி உறுத்திச் சொல்லுகிறபோது நம்முடைய மனஸ் மிகவும் கஷ்டப்படுகிறது. சிலபேர் அவர்களோடு சேர்ந்தே விடுகிறார்கள். ஆனாலும், அனுஷ்டானத்தை விடுவதற்கு மனஸ் துணிவதில்லை. சண்டாளன் முதற்கொண்டு தன் அநுஷ்டானத்தை விடுவதினால் சிரமப்படுகிறான். இந்தமாதிரி விஷயங்களை யெல்லாம் யோசிக்கும்பொழுது ஒன்றுமே புரிவதில்லை.

நம்முடைய தேசத்தில் நம்மை வேறு தேசத்திலிருந்து வந்தவர்கள் ஆளுகிறார்கள். நாமெல்லாம் அவர்களுக்கு அடங்கி நடக்கிறோம். சில தேசங்களில் அந்த அந்தத் தேசத்தார்களே ஆண்டு வருகிறார்கள். நம்முடைய நிலைமையை ராஜாங்க ஸம்பந்தமான ப்ரஸங்கங்களைச் செய்கிறவர்களெல்லாம் அடிமைத்தனம் என்கிறார்கள். இந்த அடிமைத்தனத்திற்குக்



காரணம் நாம் நமக்குள் சிலரை அடக்கி அடிமையாக நடத்திய பாபமே என்கிறார்கள். இதை எல்லோரும் பல இடங்களில் கேட்டிருப்பார்கள்.

நம்முடைய தேச ஜனங்கள் வேறு பல தேசங்களுக்குக் கூலிவேலைக்காகவும் வியாபாரத்திற்காகவும் போயிருக்கிறார்கள். அந்த இடங்களில் நம்மவர்களை முனிஸிபாலிட்டியில் வெள்ளைக்காரர்கள் இருக்கும் இடங்களில் வஸிக்கவிட ஸம்மதிப்பதில்லை. வண்டியில்கூட ஏற்றுவதில்லை. வீடு முதற்கொண்டு தனி. ஸஞ்சாரத்திற்கும் தனியான இடம். இதற்கென்ன காரணம்? நாம் நமக்குள் சிலபேரை விலக்கிவைத்ததே காரணம் என்கிறார்கள்.

அந்தத் தேசங்களில் ஏறக்கூடாதென்ற வண்டியில் நாம் ஏறினால் அவர்கள் நம்மை அடிப்பார்கள்; அதுதான் அதற்கு ப்ராயச்சித்தம். ஆனால், நம் ஊரில் நம்மில் ஆசார ச்ரத்தையுள்ள முதியோர்கள் ஏறும் வண்டியில் ஏறக்கூடாதவன் ஒருவன் ஏறினால் தாங்கள் பட்டினி கிடந்து ஸ்நானம் செய்வார்கள். மேலே சொன்ன அந்த நாடுகளில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இங்கே ஒருவர் குற்றஞ்செய்ய மற்றொருவர் தாமே தண்டனையை ஏற்றுக்கொள்ளுகிறார்.

இந்த வித்யாஸம் ஸ்வல்பமாகத் தோன்றினாலும் உண்மையைப் பார்க்கும்பொழுது இதுதான் பெரிய வித்யாஸம்.

இப்பொழுது பெரியோர்களிடந்தான் நமது தர்மம் கொஞ்சம் இருந்துவருகிறது. நாம் சமையல் பண்ணவேண்டியிருந்தால் அடுப்பில் செத்தை, புல் முதலியவைகளைப் போட்டு மூட்டுகிறோம். மழைநாளாக இருக்கிறது. நெருப்பு அணைந்துபோய்விடும்போலிருக்கிறது. கொஞ்சம் நெருப்புப் பொறிகள் மாத்திரம் பாக்கி இருக்கின்றன. அவைகளால் என்ன பண்ணுவோம் என்று நாம் விட்டுவிட மாட்டோம். விசிறி ச்ரமப்பட்டு முயற்சிசெய்து மறுபடியும் பற்றவிடப் பார்ப்போம் அல்லவா? அதைப்போல் நம் முதியோர்களிடம் இருக்கும் ஆசாரத்தையும் தர்மத்தையும் எல்லோரிடத்திலும் பரவச் செய்யலாம் என்பது எனது பேராசை. அதனால்தான் நான் இதைச் சொல்லுகிறேன்.

நம்முடைய மதம் எவ்வளவோ யுகங்களாக நீடித்து வாழ்ந்து வந்திருக்கிறது. ஏதோ ஆதாரம் இருந்துதான் இந்த மதம் இவ்வளவு நாள் பிழைத்திருக்கிறது. எந்த மதமும் இவ்வளவு தீர்க்காயுஸோடு இருந்ததாகத் தெரியவில்லை. நம்முடைய மதத்தை நான் நம்முடைய கோயிலைப்போல நினைத்திருக்கிறேன். நம்முடைய கோயில்கள் மற்றவர்களுடைய கோயில்களைப்போலச் சுத்தமாக இல்லை. மற்ற மதத்தார்களுடைய கோயில்களோ வெள்ளையடித்துச் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய கோயில்களில் முளைத்திருக்கும் மரங்களுக்குக் கணக்கே கிடையாது. அவ்வளவையும் தாங்கிக்கொண்டு நமது கோயில்கள் நிற்கின்றன. மற்ற மதத்தார்கள் கோவில்களோ இரண்டு மூன்று வருஷத்திற்கு ஒரு தரம் ரிபேர் செய்யாவிட்டால் ஒரு க்ஷணநேரங்கூடத் தாங்காது. நம் கோயில்களெல்லாம் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கின்றன. பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு நம்முடைய பெரியோர்கள் பலமாக அஸ்திவாரம்

186929

போட்டிருக்கிறார்கள். ஆகையால்தான் கோயில்கள் நீடித்து நிற்கின்றன. நாம் எவ்வளவோ ப்ரதிகூலங்கள் செய்துவருகிறோம். பல ஆபாஸங்களைச் செய்கிறோம். அபசாரங்கள் செய்கிறோம். இவ்வளவுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு நம்முடைய கோயில் நிற்கிறது. லோகத்திற்குள் மிகப் புராதனமான கோயில்கள் இந்தியாவில்தான் இருக்கின்றன என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். சீமையில் இருந்து நம்முடைய கோயில்களைப் படம் பிடிப்பதற்காகப் பலபேர் வருகிறார்கள். ஒவ்வொரு க்ஷணமும் அழிவதற்குரிய காரணங்கள் பல இருந்தும் அவை அழியாமல் நிற்கின்றன. அவற்றை இடித்துவிடலாமென்றாலோ அதுவும் ச்ரமமாக இருக்கின்றது. கட்டுவதற்கு எவ்வளவு ச்ரமப்பட்டிருக்குமோ அவ்வளவு இடிப்பதற்கும் படவேண்டும்.

நம்முடைய மதமும் இப்படித்தான் இருக்கின்றது. நமக்குத் தெரியாமல் ஏதோ ஒன்று இதைத் தாங்கிக்கொண்டு நிற்கிறது. எவ்வளவோ வித்யாஸங்கள் இருந்தாலும் இந்த மதம் அழியாமல் நிற்கிறது. முப்பது வருஷ காலமாக 'எல்லாம் ஒன்றாக வேண்டும்-எல்லாம் ஒன்றாக வேண்டும்' என்ற பேச்சே எங்கும் இருக்கிறது.

ஒரு அரசர் இருக்கிறார். அவருக்குப் பல ப்ரஜைகள். ஒரு ப்ராம்மண குடும்பம் இருக்கிறது. அந்தக் குடும்பத்தில் அண்ணன் தம்பியாக இரண்டுபேர், மூத்தவர் வைதிகர்—சாஸ்திரிகள்—வேதாத்யயனம் செய்தவர். "மஹாப்ரபு தங்களுடைய க்யாதி எங்கும் பரவி இருக்கிறது. தங்களுடைய தர்மத்தை அபேக்ஷித்து நான் வந்தேன்" என்று ஸ்தோத்ரம் பண்ணிப் பல ப்ரபுக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு ஜீவனம் செய்துவருகிறார். இந்த வ்ருத்தியினால் அவருக்கு நிரம்பப் பணம் கிடைக்கிறது. வைதிகர் ஆகையால் அதிகமாகச் செலவுபண்ணமாட்டார். அவருக்குப் பணம் நிறையச் சேருகிறது. அவர் தம்பி இங்கிலீஷ் வாசித்தார். ஸப் மாஜிஸ்டிரேட் உத்யோகம் பண்ணுகிறார். இங்கிலீஷ் படிப்பினால் செலவு பண்ணும் விதங்களை நன்றாகத் தெரிந்துகொண்டார். அலங்காரம் செய்துகொள்ளவேண்டும். நல்லஉடுப்பு வேண்டும். வீடு பெரியதாயிருக்க வேண்டும் என்று செலவு செய்கிறார். டாக்டருக்குப் பணம் கொடுத்து மருந்து சாப்பிடுகிறார், இப்படிச் செலவு பண்ணுவதால் இவருக்குப் பணம் சேர்வதில்லை. "நம் அண்ணாவுக்கு மட்டும் எப்படிப் பணம் சேர்ந்தது?" என்று யோசித்துப் பார்த்தார். "நம் அண்ணாவைப்போல் நாமும் மஹாராஜாவின் ப்ரஜைதானே; ஏன் நாமும் அவர் செய்வதைப் போல் செய்யக்கூடாது? அவரைவிட நமக்குச் செல்வாக்கு அதிகம் இருக்கிறது" என்று நினைத்து இவரும் வாங்குந்தொழிலைச் செய்ய ஆரம்பித்தார். இது மேலதிகாரிகளுக்குத் தெரிந்தது. உடனே இவரை வேலையைவிட்டுத் தள்ளிவிட்டார்கள். இவர் மேலே அப்பீல் செய்தார். "நாங்கள் இருவரும் ஒரே அரசனுடைய ப்ரஜைதானே, எனக்கு ஒருவிதி, அவருக்கு மற்றொன்றோ?" என்று இவர் கேட்டார்.

இந்தக் கேள்விகளுக்கு நம்முடையசாஸ்திர ராஜ்யத்தில்தான் சரியான பதில் இருக்கிறது. இவர் கேட்டதோ கிறிஸ்தவ ராஜ்யத்தில். கிறிஸ்தவர்களோ எல்லாருக்கும் ஒரேவிதி என்று சொன்னாலும் இந்த விஷயத்தில் அவ்வாறு நடக்கமுடியவில்லை. வேறுவிதமாகச் செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் மதத்தில் பத்துக்கட்டளைகளும் (Commandments) எல்லோருக்கும் ஒரே விதந்தானே? லோக நிர்வாஹத்தில் மாத்ரம் ஒரே விதமென்னு முறையை ஏன் மறுக்கிறார்கள்?



அவர்களுடையமதம் சிலகட்டளைகளுக்குள் அகப்பட்டுவிட்டது. நம்முடைய மதத்துக்கு இன்னதுதான் வரையறை என்று சொல்ல முடியவில்லை. இதுதான் சாஸ்த்ரம் என்றும் தெரியவில்லை. அந்தச் சாஸ்த்ரங்களில் என்ன சொல்லியிருக்கிறதென்பதும் தெரியாது. விழுப்புடன் வந்தால் மேலே படக்கூடாது என்கிறோம். பறையன் வந்தால் விலகும்படி சொல்லுகிறோம். இவைபோன்றவை தாம் நமக்குத் தெரியும்.

லோகம் முழுவதும் எல்லா மதங்களும் இப்படி வித்யாஸங்களுள்ள மதங்களாகவே இருந்துவிட்டால் இது தப்பென்று தோன்றாது. மற்ற மதங்களெல்லாம் ஒரே மாதிரி தர்மத்தை அநுஸரித்துவர நம்முடைய மதம் மட்டும் இப்படி இருப்பதனால்தான் தப்பாகத் தோன்றுகிறது. அந்த மதங்கள் இவ்விதம் இருப்பது நம்மைச் சுட்டிக்காட்டித் தோஷம் கூறுவதுபோல் இருக்கிறது.

இஃது இருக்கட்டும். மதமென்றால் என்ன? ஆத்மா கடைத்தேறுவதற்கு என்ன வழியோ அதுதான் தர்மம்; அதுதான் மதம் எனப்படுகிறது.

உடம்பிற்கு இன்ன வ்யாதி வந்திருக்கிறதென்றும், அதைப் போக்க இது தான் மருந்தென்றும் வைத்யனுக்குத்தான் தெரியும். உடம்புக்கு வ்யாதி வராமல் காப்பவன் வைத்யன். உடம்பு இருப்பதனால்தான் வ்யாதி வருகிறது. நமக்கு உடம்பே வராமல் இருந்திருந்தால் வ்யாதியே வந்திருக்காது. வ்யாதிக்குக் காரணமும் இடமுமாகிய உடம்பே வராமல் இருக்க ஒரு வழி இருக்கிறது. அந்த வழியைச் சொல்லும் ஒரு வைத்யர் நான் சொல்வதை நம்பு என்று சொல்லுகிறார். அவர்தாம் தர்மசாஸ்த்ரக்காரர். அவருக்கு மனு என்று பெயர். தர்மசாஸ்த்ரக்காரரை வைத்யரென்று நான் மட்டும் சொல்லவில்லை; "மனு சொன்னதுதான் பேஷஜம்" என்று வேதமும் சொல்லுகிறது.

"யத்வை கிஞ்ச மநுரவதது தத் பேஷஜம்"

(தைத்திரீயஸம்ஹிதை)

பேஷஜம் என்றால் மருந்தென்று அர்த்தம். உடம்பு வராமல் இருக்கும் மருந்து தர்மசாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது.

வைத்யனைப் பார்த்து நாம், "அவனுக்கு ஒருவித மருந்து, எனக்கு வேறுவித மருந்து ஏன்? அந்த ஊர் டாக்டர் செய்கிற சிகித்ஸை மாதிரி ஏன் செய்யக்கூடாது?" என்றால், அவன் "பேசாமலிரு. உனக்கொன்றும் தெரியாது" என்பான். எல்லாவற்றிற்கும் ஜலமே மருந்து என்று ஒருவர் சொல்லுகிறார். அது ஒரு வழி. அது இருக்கட்டும். மலையாளத்தில் நவரக்கழி என்று சொல்லுகிறார்கள். அதற்குக் கடுமையான பத்யங்கள் வேண்டியிருக்கின்றன. வைத்யன் சொல்லுகிறபடி நாம் பத்யம் இருக்க

வேண்டியது அவசியந்தான். ஒரு வைத்யனுக்கே வ்யாதி வந்துவிட்டால் அவன் மற்றொரு வைத்யனுடைய சொற்படி கேட்டு மருந்து சாப்பிடுகிறான். உடம்பு வைத்யத்திற்கே இப்படியானால், ஆத்மவைத்யத்தில் எவ்வளவு நம்பிக்கையும் அந்த வைத்யனிடத்தில் எவ்வளவு பக்தியும் இருக்க வேண்டும்?

மற்ற மதங்களில் உள்ள விதிகள் எல்லோருக்கும் பொதுவானவை. நமக்குள்ளும் அப்படிப் பொதுவான விதிகள் இருக்கின்றன. அவற்றைப் பொதுதர்மம் என்றும் ஸாமான்யதர்மம் என்றும் சொல்லுவோம். எல்லோரும் செய்யவேண்டியது ஸாமான்யதர்மம். தர்மசாஸ்திரத்தில் ஸாமான்யதர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மாவுக்கு ஏற்பட்ட வ்யாதி உடம்பு. அந்த ஆத்மவ்யாதியைப் போக்கும் வழிகளைச் சொல்லும் சாஸ்திரத்தில் எல்லா வ்யாதிஸ்தர்களுக்கும் பொதுவாகச் சில பத்யங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அப்படிச் சொல்லும் ஆத்மவைத்யர்களுள் மனு என்பவர் பெரிய வைத்யர்.

"அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் சௌசமிந்த்ரியநிக்ரஹ:
ஏதாநு தர்மாநு ஸமாஸேந சாதுர்வர்ணேப்ரவீன்மநு:"

(மனுஸ்ம்ருதி, X-63)

என்பது ஒரு ஸ்லோகம். இதில் நான்கு வர்ணங்கள் என்று சொல்லியிருந்தாலும் வ்யாக்யானக்காரர்கள் அதற்கு ஸகல ஜாதிகள் என்று அர்த்தம் சொல்லியிருக்கிறார்கள். சிலபேர் வேதத்தில் நான்கே ஜாதிகள் இருக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். அஃது உண்மை அல்ல. தர்மசாஸ்திரத்திலும் வேதத்திலும் உள்ள ஜாதிகள் இப்பொழுது காணப்படவில்லை. யஜுர்வேதத்தில் 3-வது அஷ்டகத்தில் 4-ம் ப்ரச்னத்தில் நரமேதப்ரகரணத்தில் நரமேதயாகத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறது. மனிதப் பிறவியிலுள்ள பல ஜாதிகள் அங்கே சொல்லப்படுகின்றன.

பிரதானமானவை நான்கு வர்ணங்கள். இவைகளுக்குள் சில கலப்பு விவாஹங்கள் சாஸ்திரங்களாலேயே அநுமதிக்கப்பட்டிருக்கின்றன; சில தடுக்கப்பட்டிருக்கின்றன. அநுமதிப்படி கலந்து உண்டான ஜாதியினர் அநுலோமர் எனப்படுவார்கள். விதியை மீறி உண்டானவர் ப்ரதிலோமர். ப்ரதிலோமர்களுக்கே தீட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி உண்டான பல ஜாதிகளுக்கும் தனித்தனியே தொழில்கள் அமைத்திருக்கிறார்கள். இஹலோகத்துக்கு உபயோகமாக அந்தத் தொழில்கள் வகுக்கப்பட்டன. ஆத்மக்ஷேமத்துக்காக அவர்களுக்கு உரிய மார்க்கங்களைத் தர்மசாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன.

ஸப்த ஸ்வரங்கள் பல வகையாகச் சேர்ந்து 72 மேளகர்த்தாக்களும் மற்ற இராகங்களும் உண்டானதுபோல நான்கு வர்ணங்கள் தமக்குள் கலந்து பெருகிய ஜாதிகள் பல. இவ்வளவு பிரிவுகளும் அவைகளுக்குரிய தர்மங்களும் கர்மகாண்டத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஞானகாண்டத்தில் ஒரு உயர்ந்த ஐக்ய நிலையை அடைந்தால் வேதமே வேதமில்லாமற் போகும்; தேவர் தேவரில்லாமற் போகிறார்கள் என்று



சொல்லப்படுகிறது. கூஜா, டம்ளர், செம்பு முதலிய பலவற்றில் உள்ள ஜலத்தைக் குளத்திற் கொண்டுபோய்க் கலந்துவிட்டால் வித்யாஸமின்றிக் கலந்துவிடுகிறது. அப்பொழுது கூஜா, டம்ளர் முதலிய வித்யாஸம் கிடையாது. கூஜா, டம்ளர் இவைகளைப் போன்றன காணும் உடல்கள்; ஜலத்தைப் போன்றது உள்ளிருக்கும் அறிவு; குளத்தைப் போன்றது பரம்பொருளென்னும் பேரறிவு; பேரறிவிற் கலந்தபோது வேற்றுமைகள் அற்றுப்போகின்றன.

ஞானநிலையில் வேதம் வேதமல்லாமற் போகிறது என்று உபநிஷத் சொல்லுகிறது. அந்த உயர்ந்த நிலையில் ப்ராம்மணன் ப்ராம்மணனில்லாமற் போகிறான்; சண்டாளன் சண்டாளனில்லாமற் போகிறான் என்று அந்த வேதமே சொல்லுகிறது.

முன்பு நான் கூறிய மனுஸ்ம்ருதியில் பொது தர்மங்கள் பல சொல்லப்படுகின்றன.

ஸத்யம் என்பது ஒரு சிறந்த பொது தர்மம். பொய்சொல்லக்கூடாது. தாயாரிடம் பக்தி, தகப்பனாரிடம் பக்தி, குருவினிடம் பக்தி, தெய்வத்தினிடம் பக்தி முதலியவைவேண்டும். பிறருக்கு நம்மாலான உபகாரங்களைச் செய்யவேண்டும். இந்த்ரியங்கள் போனவழி போகாமல் அவற்றை அடக்கவேண்டும். நமக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டும் செலவு செய்துகொண்டு மிச்சத்தை மற்றவர்களுக்காக உபயோகிக்கவேண்டும். இவைகள் ஸத்யம், ப்ரம்மசர்யம், அஹிம்சை, அஸ்தேயம், அபரிக்ரஹம் என்னும் பெயர்களாற் சொல்லப்படுகின்றன. நமக்கு வேஷ்டி வேண்டுமானால் இரண்டு ரூபாயில் ஒரு வேஷ்டி இருக்கிறபோது, 10 ரூபாயில் ஒருவேஷ்டி வாங்காமல், அந்த 2ரூபாய் வேஷ்டி வாங்கிக்கொண்டு 4 பேருக்கு 2 ரூ. வேஷ்டிகள் வாங்கிக் கொடுக்கவேண்டும். நாம் அதிக விலையுள்ள அன்னபானங்களை உபயோகிப்பதால் அதிகச் செலவு ஆகிறது. அந்தச் செலவில் கோதுமைக் கஞ்சி செய்து நாமும் சாப்பிட்டு மற்றவர்களுக்கும் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்வது அபரிக்ரஹமெனப்படும். இவற்றைப் போன்ற தர்மங்கள் ஸாமான்யதர்மம் என்று சொல்லப்படும்.

இவைகளைத்தவிர விசேஷ தர்மங்களென்று சில உண்டு. ஈச்வரன் நம்மை எந்த ஜாதியில் எந்தக் குடும்பத்தில் எந்தஇடத்தில் எந்தநிலையில் பிறப்பித்திருக்கின்றாரோ அதற்காகச் சில தர்மங்களுண்டு. அவைகளைத்தான் விசேஷ தர்மங்களென்று சொல்வார்கள். ப்ராம்மணனாகப் பிறந்ததற்காக அவன் செய்யவேண்டிய சில காரியங்கள் உண்டு. பறையனாகப் பிறந்ததற்காக அவன் செய்யவேண்டிய காரியங்கள் சில உண்டு. அவை வர்ணதருமம் என்று சொல்லப்படும். பொதுவாக உள்ள தர்மங்களுக்கு மேல் ஒவ்வொருவருக்கும் அதிகப்படியான சில தர்மங்கள் உண்டு. அந்தத் தர்மத்துக்காக அவர்களுக்குச் சில சௌகரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாருக்கும் எல்லாம் பொதுவானவை என்றால் கஷ்டம்தான் அதிகமாகும். நான் ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு ஸ்த்ரீ தரிசனத்துக்கு வந்தாள். வாசலில் இருந்தவன் உள்ளே போகக்கூடாது என்றான். 'அவர் உள்ளே போயிருக்கும்போது நான் ஏன்போகக்கூடாது? காங்கிரஸ்காரர்கள் பறையர்களைக் கூடக் கோயில்களிற் போகவேண்டும்

என்று சொல்லுகிற இந்தக்காலத்தில் இப்படிச் சொல்லுவது தப்பு. நான் போகத்தான் போவேன்" என்று சொல்லி உள்ளே வந்துவிட்டால், நான் என்னசெய்வது? நான் அநுஷ்டானம் செய்யும்பொழுது, 'ஸ்வாமிகள் எல்லோருக்கும் பொதுத்தானே? ஏன் நாம் இப்பொழுது போகக்கூடாது?'' என்று எல்லோரும் உள்ளே புகுந்துவிட்டால் நான் எப்படி அநுஷ்டானம் செய்வது! டிக்கட் கொடுக்கும் இடத்தில் எல்லாரும் புகுந்துவிட்டால் டிக்கட் கொடுப்பவன் என்ன செய்வான்? ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்யச் சில சௌகரியங்கள் இருக்கவேண்டும். ஒரு பொதுக் குடும்பத்தில் ஒருவருக்கு வ்யாதி உண்டானால் அவருக்குச் சில சௌகரியங்கள் செய்து கொடுக்கிறோம். மற்றவருக்கும் அப்படி வேண்டுமென்பது நியாயமா? தாயார் தூரமாக இருக்கிறாள். ஒரு தனி இடத்தில் அவள் இருக்கிறாள். "உனக்கு மட்டும் ஏன் தனியிடம்? நானும் வருகிறேன்" என்றால் அது சரியா? எல்லாருக்கும் பொதுவான தர்மங்களும் நம் மதத்தில் நிறைய இருக்கின்றன. கடமையைச் செய்வதற்குச் சில சௌகரியங்கள் வேண்டுமல்லவா? வாஸ்தவத்தில் அவைசௌகரியங்களல்ல. அவர்களுக்குள்ள அந்த விசேஷ தர்மத்தையும் அதற்குவேண்டிய சில ஸ்வதந்திரங்களையும் எல்லோரும் அங்கீகாரம் செய்யவேண்டும். ஏனென்றால், அவர்கள் செய்வது தங்களுக்காகமட்டுமல்ல; எல்லோருக்கும் சௌக்கியம் உண்டாவதற்காகவே அவர்கள் தங்கள் விசேஷதர்மங்களை அனுஷ்டிக்கிறார்கள்.

ஹ்ருதயத்தில் அன்பும் ஒற்றுமையும் இருக்கவேண்டும். சேர்ந்து சாப்பிடுவதால் மட்டும் ஒற்றுமை வந்துவிடாது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்து கொண்டு மற்றவர்களுடைய காரியங்களும் நடக்கும்படி செய்து மனதில் ஒற்றுமையாக இருக்கவேண்டும். சேர்ந்து சாப்பிடாவிட்டால் த்வேஷம் என்று நினைப்பது தவறு. மாமனாரிடம் மருமகள் பேசுவதில்லை; மரியாதைக்காக அப்படி இருக்கிறாள்; ஏதாவது த்வேஷம் உண்டா? ஒருவருக்கு ஏதாவது தீட்டு வந்துவிட்டால் அவரோடுசாப்பிடுவதில்லை; அவரைத் தொடுவதில்லை; அதனால் த்வேஷம் உண்டா? இந்த மாதிரி உள்ளவைகளை த்வேஷமென்று சொன்னால் சொல்பவர்பால் ஏதோ தோஷம் இருக்கும். நமக்குள்ள மனக் கலக்கத்தினால் நம்முடைய தர்மங்கள் தப்பாகத் தோற்றுகின்றன. எவ்வளவுக் கெவ்வளவு நியமங்கள் அதிகமாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு சௌக்கியம் அதிகம். பத்யம் கடுமையாக இருந்தால் வ்யாதி சீக்கிரம் குணமாகும்.

நம்முடைய விசேஷதர்மங்கள் அரசனில்லாமலே தேசம் நன்றாக இருக்க உபயோகப்பட்டு வந்தன. க்ராமப்பஞ்சாயத்தில் ஜாதிக்கட்டு குறையக் குறைய அக்ரமங்கள் அதிகமாகின்றன. அதனால் கலகம் உண்டாகிறது. ஜாதிக்கட்டுப்பாடு இருந்தபோது அக்ரமத்தில் பயம் இருந்தது. ஜாதிப்ரஷ்டம் பண்ணிவிடுவார்கள் என்பதனால் அந்தப்பயம் உண்டாகும். அதுகுறையவே குற்றங்கள் அதிகமாகின்றன. ஜாதிக் கட்டுப்பாட்டால் குற்றங்களே நடக்காமல் இருந்தன. அரசன் தண்டனை அதிகாரம் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல் இருந்தது. அவனுடைய வேலை மேன்மேலும் ச்ரேயஸை உண்டாக்குவதுதான். இப்பொழுது இவ்வளவு போலீஸ், ராணுவம், ஜெயில் முதலியவை இருப்பதற்குக் காரணம் என்ன? ஜாதிக்கட்டுப்பாடு போனதும் வர்ணாச்ரமதர்மத்தின் குறைவுமேயாகும்.



மற்ற மதங்களில் எல்லோருக்கும் ஒரே தர்மம் இருக்கின்றது அதனால்தான் அவைகள் அதிகப் பெருமை அடைந்திருக்கின்றன என்று நாம் நினைக்கலாம். அவை ஒரு சமயம் ஒரேபடியாக எறிகிற்தும்; ஒருசமயம் இருந்த இடம் தெரியாமற் போனாலும் போய்விடும்.

ஒரு பனைமரம் இருந்தது. அதன்மேல் ஓர் ஒணான்கொடி கிடுகிடென்று படர்ந்தது. சில மாதத்திற்குள் பனைமரத்திற்கு மேல் வளர்ந்து விட்டது. அப்பொழுது அந்த ஒணான்கொடி, 'சென்ற சில மாதமாக இந்தப் பனைமரம் ஓர் அங்குலம்கூட உயரவில்லையே! இது உபயோகம் இல்லாதது' என்று சொல்லிச் சிரித்தது. பனைமரம் சொல்லிற்று, 'நான் பிறந்து பதினாயிரம் ஒணான்கொடியைப் பார்த்திருக்கிறேன். நீ பதினாயிரத்து ஓராவது கொடி. ஒவ்வொருவரும் இப்படித்தான் கேட்கிறார்கள். எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை." இந்த மாதிரிதான் நம் மதமும் பிற மதங்களும் இருக்கின்றன. சரித்ரத்தைப் பார்த்தால் பிற மதங்கள் நம்முடைய தேசத்தில் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டுப் பரவியதாகத் தெரிகின்றது. பஞ்சகாலத்தில் ஆசை காட்டுவதால் சில மதங்கள் பரவுகின்றன. ஆகவே, அவைகளின் அடிப்படை தத்வமில்லாமற் போகிறது. யுத்த காலத்தில் கலவரத்தால் சில மதங்கள் பரவின. அதிக பலசாலி ஏற்பட்டால் அவை போக வேண்டியவைதான். இப்படி எல்லோருக்கும் ஒரே தர்மமாக இருக்கும் மதங்கள் வீழ்ந்தால் அடியோடே வீழ்ந்து விடும். தனித்தனி பிரிந்த தர்மங்கள் இருந்தால் அவைகள் தங்களுக்குள்ளே ஒன்றையொன்று காப்பாற்றிக்கொண்டு இருக்கும். ஆகாயக் கப்பல்களில் காற்றுப்பையை (Gas bag) ஒன்றாக அமைத்தார்கள். அப்பொழுது அதில் ஓர் ஓட்டை விழுந்து விட்டால் முழுவதும் கெட்டுவிடும். அதனால் பின்பு பல பைகளை வைத்தார்கள். ஒன்று ஓட்டையாகி விட்டாலும் மற்றவைகள் நன்றாக இருக்கும். அந்தப் பைகளெல்லாம் தனித்தனியே இருந்தாலும் ப்ரயோஜனம் இல்லை. எல்லாம் சேர்ந்து ஒரே இடத்தில் ஒன்றையே தாங்கிக்கொண்டே தனித்தனியாக இருக்கவேண்டும். அதுபோல நம்முடைய தர்மங்கள் தனித்தனியே இருந்தாலும் அவற்றுள் ஓர் ஒற்றுமை இருக்கவேண்டும்.

இப்படி ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேறு வேறு விதமான தர்மங்கள் இருந்தாலும் இந்தத் தர்மானுஷ்டானங்களில் எல்லோருக்கும் ஸமமான பலன்தான் உண்டாகின்றது.

ஒரு ஸமூஹத்தாரை ஒரே தர்மாநுஷ்டானத்தோடு இருவென்று புதிதாக ஒரு ராஜாங்கத்தாரால் ஏற்படுத்திவைக்க முடியாது. அப்படிச் செய்தால் அது நிலைத்துமிருக்காது. ஒருவரை உள்ளே வரக்கூடாது என்று பலகாலம் விலக்கிவைக்க முடியாது. ஒருவர் ஒருநாளில் செய்யாமல் தானே பிரிந்து பிரிந்து ஏற்பட்டிருப்பதனாலும், இந்தத் தர்மத்தால் இஹலோக பரலோகங்களில் க்ஷேமம் உண்டாவதாலும் அநாதிகாலந் தொடங்கி நமது தர்மம் நிலைத்திருக்கிறது. இதர மதங்களைப்போல எல்லோரும் ஒரே தர்மத்தை அநுஷ்டித்திருந்தாலும், அசட்டுத்தனமாகத் தனித்தனி வர்ணத்திற்கேற்பட்ட தர்மங்களை எல்லோரும் அநுஷ்டித்திருந்தாலும் நமது மதம் இவ்வளவு தீர்க்காயுஸாக இருந்திருக்க முடியாது.

ஒருவீட்டில் நான்கு ஸஹோதரர்கள் இருக்கிறார்கள். மூத்தவன் வீட்டில் இருந்துகொண்டு பூஜை செய்கிறான். அடுத்தவன் பணவரவு செலவுகளைக் கவனித்துக்கொள்கிறான். மற்றொருவன் வீட்டிற்கு வேண்டிய சாமான்களை வாங்கிப் போடுகிறான். கடைசி ஸஹோதரன் வயலுக்குப் போய் வ்யவஸாயத்தைக் கவனித்து வருகிறான். இப்படி வீட்டுக் காரியங்களைத் தனித்தனியே பிரித்து நடத்துதல் எல்லாருடைய க்ஷேமத்திற்காகவே. வீட்டுக்காரியங்களும் ஸுலபமாக நடக்கின்றன. இப்படி இல்லாமல் எல்லாரும் எல்லாம் செய்ய ஆரம்பித்தால் என்ன பிரயோஜனம்? வீணாகக் கஷ்டந்தான் உண்டாகும். குடும்பமே நன்றாக நடக்காது. ஒருவன் செய்வது எல்லோருக்கும் நன்மை தரும். சாதுர் வர்ண்யமும் இப்படித்தான் உள்ளன. ப்ராம்மணன் தன் கர்மாக்களைப் பண்ணுவது எல்லாரையும் உத்தேசித்துத்தான். பறையனுடைய குழந்தையின் க்ஷேமத்தையும் அவை குறித்தவைதான். க்ஷத்ரியன் அரசாள்வது எல்லாருடைய நன்மையின் பொருட்டே. வைச்யன் வ்யாபாரமும் இப்படியே. இந்த நியமத்தால் லோக வ்யவஹாரங்கள் ஸுலபமாக நடைபெறுகின்றன. க்ஷேமம் உண்டாகிறது. இது மாறினால் லோகக்ஷேமமும் மாறும். பூஜையும் கர்மாநுஷ்டானமும் பண்ணவேண்டிய ஜாதி அதிக நியமம் உடையது. அந்நியமத்தால் யாவரும் பயனை அடைகிறார்கள். மற்றவர்கள் ஒதுங்கி நிற்பது தங்களுக்கும் ஒரு ச்ரேயஸை உண்டாக்கத்தான். நாம் செய்யும் ச்ராத்தத்திற்கு ஒரு நிமந்த்ரண ப்ராம்மணன் மடியாக வந்தால், நாம் விழுப்பாக இருந்துகொண்டு, 'நீமட்டும் மடியாக இருப்பது என்ன? நான் உன்மேற் படுவேன்' என்றுசொல்லி அவ்வாறு செய்தால் யாருக்கு நஷ்டம்? இருவருக்குமல்லவா?

ஆகையால், ஒரே தர்மம் பலவகையாகப் பிரிந்து இருப்பதில் பல அநுகூலங்கள் இருக்கின்றன. நம்முடைய தர்மம் என்றும் சாவாமல் இருக்க முதலில் இதுவே ஒருகாரணமாக இருக்கிறது. தர்மங்களில் வேற்றுமையும் வேண்டும்; ஒற்றுமையும் வேண்டும். ஒரேபடியாகப் பிரிந்தே இருக்கக்கூடாது; ஒரேபடியாக ஒன்றாக இருக்கக்கூடாது. சிலர் ஒரேபடியாகப் பிரிக்கப் பார்க்கிறார்கள்; சிலர் ஒரேபடியாகச் சேர்க்கப் பார்க்கிறார்கள்; இவ்விதமாக இரண்டும் வேண்டாம் என்று தர்ம சாஸ்த்ரம் சொல்லுகிறது. நான் அதற்குப் ப்ரதிநிதியாக வந்திருக்கிறேன். அதனால்தான் வேற்றுமையும் வேண்டும், ஒற்றுமையும் வேண்டும், ஒரேபடியாக இரண்டும் கூடாதென்று சொல்லுகிறேன்.

தொடாமல் இருப்பது மரியாதையைக் காட்டுமேயொழிய த்வேஷத்தைக் காட்டாது. பலர் ஒன்றுசேர்ந்து சாப்பிடுவது அவசியமில்லையென்றும், ஜாதிவிட்டு வேறு ஜாதியில் கலப்புக் கல்யாணம் செய்வது அவசியமில்லையென்றும், இவைகள் இல்லாமலே ஜனங்கள் ஒற்றுமையாக இருக்கக் கூடுமென்றும் முக்கியமான ராஜீயவாதிகள் கூறுகிறார்கள். தொடுவதும் அவசியமில்லை என்று நான் சொல்லுகிறேன். ஒன்றாகச் சாப்பிட்டுக்கொண்டும், ஒன்றாகக் கல்யாணம் பண்ணிக்கொண்டும், ஒன்றாகத்தொட்டுக் கட்டிப் புரண்டு கொண்டும் இருக்கும் மேல்நாட்டு ஜாதிகளில் எவ்வளவு போட்டிகளும் சண்டைகளும் காணப்படுகின்றன?



உண்மையில் எவ்வளவு வேற்றுமையிருந்தாலும் அன்பிருந்தால் சாந்தம் இருக்கும். எவ்வளவு கூடியிருந்தாலும் அன்பு இல்லாவிட்டால் கலகம்தான் உண்டாகும். எல்லா ஜாதிகளிடத்திலும் ஒரே விதமான அன்பு இருக்கவேண்டும். நம்முடைய தாயினிடமும் குழந்தையினிடமும் எந்தவித அன்பு நமக்கு இருக்கிறதோ அத்தகைய அன்பு பறையர்களிடத்தும் இருக்கவேண்டும். என்ன விதமான கஷ்டங்களிருந்தாலும் அன்பை விடக்கூடாது. அந்த அன்பு தர்மமார்க்கத்துக்கு விரோதமில்லாமல் இருக்கவேண்டும். தரித்திரத்தை நிவர்த்தி செய்வதிலோ, துன்பத்தை நீக்குவதிலோ, மற்ற ஜாதியர்களிடத்து அன்பு வைத்து நம் சக்திக்கும் மீறிச் செய்தாவது அவ்வன்பை வளர்க்கவேண்டும். நம்முடைய புத்திக்குத் தோன்றுவதெல்லாம் சரியென்று சொல்ல முடியாது. ஒரு ஸமயத்தில் தோன்றுவது மற்றொரு ஸமயத்தில் தோன்றாது. ஆகையால், சாந்தமாகவும் உறுதியாகவும் இருந்து தர்மத்தைக் காப்பாற்றவேண்டும். இன்றைக்கு ஒன்று சொல்பவர்களே மறுபடி வேறொரு காலத்தில் மாறி வேறு சொல்லுவார்கள். கலப்புச் சாப்பாடு, கலப்புக் கல்யாணம் இவை அவசியமில்லையென்று ஒப்புக்கொண்டவனே, தொடுவதும் அநாவசியம் என்று சொல்லுங்காலம் வந்தாலும் வரும்.

நந்தனார் கோயிலுக்குள் வர மாட்டேன் என்றார். பிராம்மணர்கள் வரத்தான்வேண்டும் என்றார்கள். ஸ்வாமி நந்தியை விலகச் செய்து காட்சி கொடுத்தார். இம் மூன்றிலும் உள்ளடங்கியிருக்கும் தத்வந்தான் வர்ணாச்ரம தர்மம். நந்தனார் தான் அந்தத் தர்மத்தைக் காப்பாற்றினவர் என்று சொல்லலாம்.

எந்த ஜாதியினிடத்தும் உண்மையான அன்பு ஏற்பட்டால் சாந்தம் உண்டாகும். ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் வாய்க்கால் விஷயமாகச் சண்டை ஏற்படுகிறது. இந்தக் கிராமத்திலுள்ள பறையன் முதல் பிராம்மணர்கள் வரையில் எல்லோரும் ஒன்றாக இருப்பார்கள். அதேபோல அந்தக் கிராமத்திலும் ஒன்றாக இருப்பார்கள். இந்த ஊர்ப் பறையனும் அந்த ஊர்ப் பறையனும் ஜாதி ஒன்றுதானே யென்று நினைத்துச் சேர்ந்துகொள்ள மாட்டார்கள். ஒரு கிராமம் என்ற ஐக்கியமே இருக்கும். இந்த ஊர்ப் பறையன் அந்த ஊர்ப் பிராம்மணனோடு சண்டை போடுவான். எல்லோருக்கும் பொதுவான காரியமாதலால் இங்கே ஜாதி வேற்றுமை இல்லை. ஒவ்வொருவனும் கிராமத்திற்காகச் சண்டை செய்வான். அதுபோல மன ஒற்றுமை ஏற்படவேண்டும்.

பிராம்மணன் செய்யும் வைச்வதேவத்தில் சண்டாளபலி கொடுக்கவேண்டும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. அவனுக்காக இவன் செய்வதனால் இருவரிடமும் அன்பு உண்டு என்று தெரிகிறது. பழைய காலத்து கிராமங்களில் அன்பும் ஒற்றுமையும் இருந்துவந்தன. கால தேச வர்த்தமானங்களின் மாறுதலால் கிராம ஸமுதாயமும் மாறிவிட்டது. பணக்காரர்கள் பட்டணங்களுக்கு வந்துவிட்டார்கள். அங்கே ஒவ்வொருவரும் தனித்தனியே பற்றின்றி இருக்க ஆரம்பித்துவிட்டார்கள். கிராமத்தின் கட்டு விட்டுப்போய்விட்டது. இந்த ஸமயத்தில் அந்நிய மதஸ்தர்கள் புகுந்து உபதேசம் செய்தார்கள். அதனால் ஜாதிக் கட்டுப்பாடு போயிற்று.

அவர்கள் தரித்திரம் அதிகமாக இருந்த காலத்தில் தங்கள் மதப் பிரசாரம் செய்தார்கள். கிராமத்திலிருந்த ஏழை ஜனங்கள் மயங்கிவிட்டார்கள். அவர்களுடைய மதத்திற் சேர்ந்தார்கள். நம்முடைய மதத்திற் சேர்பவர்களுக்கும் மற்ற மதத்திற் சேர்பவர்களுக்கும் ஒரு பெரிய வித்தியாஸம் இருக்கின்றது. ஏழைகளும் கூலிக்காரர்களும் இந்த மதத்திலிருந்து வேறு மதங்களுக்குப் போகின்றார்கள். மற்ற மதத்தினர்களிலோ அதிகமாகத் தத்வ விசாரணை செய்தவர்கள்தாம் நம்முடைய மதத்திற்கு வருகிறார்கள்.

அந்நிய மதஸ்தர்கள் புகுந்தபொழுதே நாம் நமது மதத்தினர்களைக் காப்பாற்ற முயன்றிருக்க வேண்டும். அப்பொழுது செய்யாததனால் இப்பொழுது ஒற்றுமையிற் குறைவு ஏற்பட்டிருக்கிறது.

மேல்நாட்டு அந்நிய மதஸ்தர்களை நாம் ஏன் பின்பற்ற வேண்டும்? நடை யுடை பாவனைகளில் அவர்கள்தாம் நம்மைப்போல் இருக்கட்டுமே என்று தைரியமாக நம் நிலையிலேயே இருக்கவேண்டும். நம் மதத்தில் எல்லாருக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட தர்மங்களை நன்றாகச் செய்ய வேண்டும். வாஸ்தவமான அன்பு இருந்தால் கஷ்டங்கள் தாமே நிவர்த்தியாகும். தனித்தனியாக உள்ள தர்மங்களெல்லாம் ஒரு பொது மதத்துக்கு ஆதாரமாக இருக்கின்றன. எந்த ராஜாங்கம் வந்தாலும் எது எப்படியானாலும் நாம் தர்மத்தை அநுஷ்டித்து வரவேண்டும். ஜீவனத்தை உத்தேசித்துத் தர்மங்கள் கெட்டுப்போயின. அப்படிவிட்டிருக்கக்கூடாது. ஆபத்துக் காலங்களிலும் தர்மத்தில் ஒரு கண் இருக்கவேண்டும்; அநுஷ்டானங்களை விடக்கூடாது. ஒருவன் தன் வர்ணத்துக்குரிய அநுஷ்டானம் செய்வது பொதுவில் தேசத்துக்கே க்ஷேமத்தைத் தரும். பிராம்மணன் ஸ்நானம், ஸந்தியாவந்தனம், பூஜை முதலியவற்றைப் பறையனுடைய க்ஷேமத்தின்பொருட்டும் செய்யவேண்டும். நம்முடைய மதரக்ஷணத்திற்குச் சாஸ்திரந்தான் வழி காட்டுகிறது. தாபத்திற்கு அன்புதான் சமனம். உண்மையாக நம்மிடம் அன்பு இருந்தால் நாம் ஜயத்தை அடைவோம். பரஸ்பர ஸஹாயத்தை அன்புகொண்டு செய்யவேண்டும். எந்தக் காலத்திலும் அன்பு குறையக்கூடாது. கவலையை விரட்டி விடவேண்டும். என்ன விபரீதம் ஏற்பட்டாலும் அன்பைக் கைவிடக் கூடாது. நம்முடைய நல்ல பிரயத்தினங்களைச் செய்துகொண்டே இருக்க வேண்டும். பரோபகாரம் செய்யவேண்டும்.

லோகம் புரண்டுபோனாலும் நம்முடைய கடமைகளைச் செய்துகொண்டு பயமின்றி அன்புடன் ஸாமான்ய தர்மங்களை நன்றாக ரக்ஷித்து விசேஷ தர்மத்தைக் கூடியவரைக்கும் ரக்ஷிக்கவேண்டும். அதற்குரிய சக்தியைப் பகவான் அருள்வாராக!

---

தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரியவொழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும்; அறம்வளரப் பாவம் தேயும்; பாவந்தேய அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்தவநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன்மாலையவாய இம்மை மறுமை யின்பங்களினுவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும். அவை தோன்றவே ...... மெய்யுணர்வு பிறந்து வீடு கூடும்.

**பரிமேலழகர்.**

உ

# பண்டைத் தமிழ்நாடு.

கோநகர் திருவாளர் சு. மு. ஶ்யாமசுப்பிரமணியன் செட்டியார்.

(முற்றொடர்ச்சி: திங்கள்-சு, பக்கம்-238.)

திருநின்றவூர் காளத்தியப்ப முதலியார் என்பார், புலவர்க்கு வரையாது கொடுக்கும் வள்ளற்றன்மை வாய்ந்தவரா யிருந்ததால், அவரைக்காண வேண்டுமென்ற விருப்புடன், மதுரகவிராயர் என்ற புலவர் சென்று, அவ்வூர்ச் சத்திரத்தில் இரவு தங்கினார். அது காலை, அவருக்குப் பசியதிகரிக்க,

‘நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே
யின்றைக்கே சற்றே யிரு”

என்ற செய்யுளைப் பாடினார். புலவருக்கு, அளவுக்கு மிஞ்சிக் கொடுக்கிறாரென்ற பொறாமையால், பொருளையெல்லாம் அவ்வூரரசன் கவர்ந்துகொள்ள, அதனால் மிகக் களைப்புற்று அவ்விடத்தில் வந்து படுத்திருந்த காளத்தியப்பமுதலியார், இச்செய்யுளைக் கேட்டு உடனேசென்று புலவர்க்குக் கொடுக்க இயலாத நிலைமையில் இந்தச்சரீரம் இருந்தும் பயனில்லை என்று, உயிரை விடநினைத்துத் தன் வீட்டுக்குப் பின்புறமிருந்த ஓர் பாம்புப் புற்றில் கையை விட்டார். அப்புற்றிலிருந்த நாகம் வெளிக்கிளம்பி, அவர் கையில் நாகரத்தினத்தை யிட்டுப்போயிற்று. அதைப்பெற்ற முதலியார் மிக மகிழ்ச்சியடைந்து வந்த புலவருக்கு அதைக் கொடுத்தார். அவ் விரத்தினத்தைப் பெற்றபுலவர், அதனை விற்கும் பொருட்டு அவ்வூரரசன் சபைக்குச் சென்று விலைபேசினார். இரத்தினத்தைக் கண்ட அரசன் புலவரை நோக்கி, ‘இது உமக்கு ஏது?’ என்றுகேட்க, அவர் காளத்தியப்ப முதலியார் தந்ததாகக் கூறினார். உடனே அரசன் காளத்தியப்ப முதலியாரை அழைத்து, ‘உம்முடைய எல்லாப் பொருள்களையும் கள்வர்கவர்ந்துகொள்ள, இவ்விரத்தினத்தை மாத்திரம் எங்கு ஒளித்து வைத்திருந்தீர்? என்று கேட்டான். முதலியார் நடந்தவிஷயங்களைச் சொல்ல, அரசன் அவ்வாறாயின் அந்நாகத்தின் ஜீவரத்தினத்தை வாங்கிக்கொடு மென்று சொல்லி, அவரை அழைத்துக் கொண்டு புற்றினிடம் சென்றான். இவர்கள் சென்றவுடன் நாகம் புற்றிலிருந்தும்வெளிவந்து முதலியாரை வலம்வந்து வணங்கி, ஜீவரத்தினத்தையும் கொடுத்து, அவருடைய பாதத்தில் உயிர்விட்டது. இது கண்ட அரசன் மிகப்பயந்து தான் கவர்ந்தபொருளை யெல்லாம் திருப்பிக் கொடுத்தனன். முதலியார் புலவர்க்குக் கொடுக்கப் பொருளகப்பட்டதே என்ற சந்தோஷத்தோடு புலவர்க் கீந்து புகழ்பெற்று விளங்கினார்.

சத்திமுத்தப்புலவர் என்பார், மிக்கவறுமையுற்றுப் பாண்டியநாட்டையடைந்து, அங்கோர் சத்திரத்தில் இரவு தங்கியிருந்தார். பகலில், தன் ஆஸ்தான வித்வான்களிடம் நாரைவாய்க்கு உவமானங்கேட்க, அவர்கள்

மறுநாள் சொல்லுவதாகச் சொல்லி யிருந்த நிலைமையில், அவ்வூரரசன், நகர் சோதனை செய்துகொண்டு சத்திரத்தண்டை வந்தான். அதுபோழ்து, அங்குபடுத்திருந்த புலவர், இரண்டு நாரைகள் வடக்கு நோக்கிப் போவதுகண்டு, தன்னுடைய வறுமைதோன்ற,

நாராய்! நாராய்! செங்கா னாராய்!
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா னாராய்!
நீயுநின் மனைவியுந் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவி ராயின்
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே.

என்ற பாட்டைப்பாடினார். இதுகேட்ட அரசன், பகலெல்லாம் யோசித்தும், நாரையின் வாய்க்கு உவமை கூறத் தெரிந்திலரே. ஆஹா! எவ்வளவு பொருத்தமான உவமானங் கூறுகின்றாரிப்புலவர். அந்தோ! இத்தகைய பெரும்புலவர், வறுமையினால் வாடுகின்றாரே எனநினைத்து, அவரை அழைத்து அளவுகடந்த பொன் பரிசிலாகக் கொடுத்தான். இதனை,

வெறும்புற் கையுமரி தாங்கிள்ளை சோருமென் வீட்டில்வரும்
எறும்புக்கு மாப்பத மில்லைமுன் னாளென் னிருங்கலியாம்
குறும்பைத் தவிர்த்த குடிதாங் கியைச்சென்று கூடியபின்
தெறும்புற்கை யானை கவளங்கொள் ளாமல் தெவுட்டியதே.

எனக் கூறியபாட்டால் அறியலாம்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் பெருமானார், கரிகாற்பெருவளத்தான் என்னுஞ் சோழனது பராக்கிரமத்தைப் புகழ்ந்து, பட்டினப்பாலை என்னும் நூலைப் பாடி, பதினாறுலக்ஷம் பொன் பரிசுபெற்றார். இதனை,

தழுவு செந்தமிழ்ப் பரிசு வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்

என்ற கலிங்கத்துப்பரணி யடிகளால் அறிக. இப் பட்டினப்பாலையில்,

காடு கொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெ ருக்கிப்
பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்



கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇ

என்றுள்ளபகுதியில், 'கரிகாற்பெருவளத்தான், தன்னுடைய ஆட்சிக் காலத்தில் காடுகளை வெட்டி நாடு உண்டுபண்ணி, குளங்கள் தோண்டி, பழைய ஊர்களைப் புதுப்பித்துப் புதிதாக அநேக ஊர்கள் உண்டுபண்ணி, கோயிலமைத்து, தன்னுடைய இராஜதானியைச் சுற்றி மதிலெழுப்பித் தேசத்தைப் பாதுகாத்தான்' என்று கூறியிருத்தலால், அக்காலத் தரசர்கள் குடிகளுக்கு நன்மை செய்தலிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வந்திருக்கின்றார்களென்பது தெரிகின்றது. இவ் வரசனுக்குத் தலைநகராக இருந்தது காவிரிப்பூம்பட்டினம். இவன் சிறுவயதிலேயே பட்டத்திற்கு வர, இரு புலவர்கள் தம்முட் சண்டையிட்டு, வாதத்தைத் தீர்த்துக்கொள்ள அரசவை யேகினர். அங்கிருந்த சிறிய அரசனைக் கண்ட புலவர்கள், நம் வாதத்தைத் தீர்க்க இச் சிறு பிள்ளையால் இயலாது என்றனர். அது கேட்ட அரசன், உட்சென்று கிழப்பருவ வேட மணிந்து, முன்போல ஆசனத்திருந்து, புலவர் வழக்கைப் புகழுறத் தீர்த்தனர். இதனை,

உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்.

என்ற பழமொழிச் செய்யுள் வலியுறுத்தும்.

அக்காலத்துக் கப்பல்வியாபாரங்களும் மிகச் சிறப்புற்று விளங்கியிருந்தன. இதனை, "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங், காரின் வந்த கருங்கரி மூடையும்" என்பனவாதியாகவுள்ள அடிகளால் அறியலாம். அக்காலத்து, புகார், முசிரி, தொண்டி, கொற்கை முதலியன கப்பற் றுறைமுகப் பட்டினங்களாகச் சிறந்திருந்தன. கப்பல்கள் திசைமாறிப் போகாதிருத்தற்பொருட்டு, துறைமுகங்கடோறும் தீபஸ்தம்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. இதனை இப்பொழுது ஆங்கிலத்தில் (Light House) லயிட் ஹௌஸ் என்று சொல்லுவர். முற்காலத்திற் "கலங்கரை விளக்கம்" எனப் பெயரிட்டிருந்தனர். இதனை, "இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்" என்ற சிலப்பதிகார அடியிற் காண்க. துறைமுகங்கடோறும் பண்டகசாலை (Were House), வரிச்சாலை (Custom House)களும் இருந்தன. அன்னிய நாட்டிலிருந்துவரும் பொருள்களுக்குச் சுங்கம்கொள்ளுதல் வழக்கமாக இருந்திருக்கிறது. அதுவன்றி, நம்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களின்மீதும், அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களின்மீதும், துறைமுகப் பட்டினத்தரசர்களின் அடையாளங்களும் இடப்பட்டு வந்திருக்கின்றன. இதனை,

நிலத்தி னின்று நீர்ப ரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறி யாமைவந் தீண்டி
அருங்கடி பெருங்காப்பின்

வலியுடை வல்லணங் கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி

என்ற பட்டினப்பாலை அடிகளால் அறியலாம். முற்காலத்திலும் வியாபார நிமித்தம் அன்னியநாட்டார் நம் நாட்டுக்கும் நம் நாட்டார்அன்னியநாட்டுக்கும் வந்துபோயிருக்கிறார்களென்று தெரிகிறது. அக்காலத்திலும் அன்னியநாட்டுக்குச் செல்லும் ஆடவர் பெண்களை அழைத்துக்கொண்டு செல்லவில்லை என்பதை, "முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை" என்ற தொல்காப்பிய அடியும், "குலமட மாதரொடு கலமிசைச் சேறலும், பாசறைச் சேறலும் பழுதென மொழிப" என்ற நம்பியகப்பொருள் அடிகளும் உணர்த்தும்.

கைத்தொழிலிலும் நம் நாட்டார் சிறந்து விளங்கி வந்திருக்கிறார்களென்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. எலி மயிரினால் வஸ்திரம் நெய்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதனை,

நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்

என்ற சிலப்பதிகார அடிகளால் அறியலாம்.

இயந்திரங்களெல்லாம் இப்பொழுது அன்னிய நாட்டாரால் நுண்ணிதிற் காணப்பட்டன என்றும், நம் நாட்டார் எக்காலத்தும் அவைகள் செய்யும் விதத்தை அறிந்திலர் என்றும், ஒருசிலர் கூறுவர். அவர்கள் அங்ஙனம் கூறுதற்குக் காரணம் பண்டைநூல்களிற் பயிற்சியில்லாமையேயாம்.

செம்புருகு வெங்களிக ளுமிழ்வதிரிந் தெங்கும்
வெம்புரு குவட்டுமிழ்வ வெந்நெய்முகந் துமிழ்வ
வம்புமிழ்வ வேலுமிழ்வ கல்லுமிழ்வ வாகித்
தம்புலங்க ளால்யவனர் தாட்படுத்த பொறியே.

என்பனபோன்ற சிந்தாமணிச் செய்யுள்களாலும், "மழுக்கள் வீசுவன" என்ற செய்யுள் முதலாக "வெறிகொளைம் பொறியை" என்ற செய்யுள் வரை யுள்ள திருவிளையாடற்புராணச் செய்யுள்களாலும், "சினத்தயில் கொலைவாள்" என்ற கம்பராமாயணச் செய்யுளாலும், முற்காலத்து நம் நாட்டார் இயந்திரங்கள் செய்தலில் எவ்வளவு தேர்ச்சியடைந்திருந்தார்களென்பதை யறியலாம். ஆகாயவிமானம் செய்யும் விதத்தை நம் முன்னோர் வெகு காலத்திற்கு முன்னரே கண்டிருக்கிறார்கள். இதற்கு, சச்சந்தன் என்னும் அரசன் தச்சனைக்கூவி, இயந்திரவூர்தி இயற்றுமின் என, ஆகாய வழியாய்ப் பறந்துசெல்லக்கூடிய இயந்திரமொன்றைச் செய்யும்படி கட்டளையிட்டதாகவும்,

பல்கிழி யும்பயி னுந்துகி னூலொடு
நல்லரக் கும்மெழு குந்நலஞ் சான்றன
வல்லன வும்மமைத் தாங்கெழு நாளினுட்
செல்வதோர் மாமயில் செய்தன னன்றே.



என்றபடி மயிலுருவுடையதோ ரியந்திர மொன்றைச் செய்து கொடுத்ததாகவும், சிந்தாமணியிற் கூறப்பட்டுள்ள சரித்திரம் சான்றாம்.

அக்காலத்து மக்கள், மிகப் பெருங் கேட்டைத் தருவனவும், மனதை மயக்குவனவுமாகிய காப்பி முதலிய உணவுகளாற் பலமுடையவர்களாகவும், நீண்ட ஆயுளுடையவர்களாகவும் வாழவில்லை. வரகு முதலிய இனியவுணவுகளால் பலம் பொருந்தியவர்களாகவும், நீண்ட ஆயுளுடையவர்களாகவும் விளங்கினார்கள்.

இனி, அக்காலத்தரசர் முதலானோர், வெற்றி மிகுந்த வீரர்களாய் விளங்கினார்களென்பது, புறநானூறு முதலிய நூல்களால் அறியக்கிடக்கின்றது. வீரமாவது, அஞ்சத்தக்கவிடத்தும் அஞ்சாது எதிர்த்து நிற்றலேயாம். இதன்தன்மை, முரிந்த புருவத்தையும், சிவந்த கண்ணையும், பிடித்தவாளையும், கடித்தபல்லையும், மடித்த உதட்டையும், சுருட்டியநெற்றியையும், கடுமைபொருந்திய சொல்லையும் பகைவர்களைப் பொருளாக மதியாமையும், இன்னோரன்ன பலவற்றையுங் கொண்டிருத்தலாம். இதனை,

வீரச் சுவைவிந யம்விளம் புங்காலை
முரிந்த புருவமும் சிவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த எயிறும்
மடித்த உதடும் சுருட்டிய நுதலும்
துண்ணென உற்ற சொல்லும் பகைவரை
எண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவும்
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே.

என்பதால் அறிக. இத்தகைய வீரத்தன்மை யுடையார்க்கு எத்தகைய காரியங்களும் எளிதில் நிறைவேறும். இதனையே, 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்று கூறுவர் பெரியோர். இங்குசொல்லப்பட்ட வீரத்தன்மை வாய்த்த வீரர்களையுடைய அரசனே மேம்பட்டு விளங்குவான். தன்வேலை தன்னை எதிர்த்த யானையின்மேல் எறிந்து, வரும்போது தன்மார்பிற் பாய்ந்திருக்கின்ற வேலைப்பறித்து நகுதலும், தனக்குப் போரில் உற்ற காயத் தழும்புகளையே பெரிய ஆபரணமாக நினைத்தலும், தனக்குக் கழிந்த நாட்களையெண்ணி, அவற்றுள் போரில் தன்சரீரம் காயமுறாதநாட்களை அவமே கழிந்த நாட்களாக எண்ணுதலும், உயிரை மதியாது வீர சுவர்க்கத்தையே பெரிதாக மதித்தலும் முதலியவற்றை உடையவனே சுத்தவீரனாவான். நம் நாட்டார் போருக்குப் பசுக்கவர்தலையே முதன்மையாகக் கொண்டிருந்தனர். போருக்கு முன்னதாக அங்கிருக்கத் தகாதோரை யெல்லாம் அகற்றிவிடுவர். இருக்கத்தகாதோர், அந்தணர், பெண்கள், பசுக்கள் முதலியவர்களேயாம். தோற்றவன் நாட்டைத் தீக்கிரையாக்கிக் கழுதையால் உழுவித்து வரகு விளைவிப்பர். இவர்களிற் சிறந்த வீரர்களுக்கு ஏனாதி, காவிதி முதலிய பட்டங்கள் அளிப்பதுண்டு.

கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று
கைபோய்க் கணைபுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் னேறு.

என்றசெய்யுள் பரம்பரையாய் வீரவம்சத்திலுதித்த ஓர் தமிழ்ப்பெண்மணியின் வாக்கன்றோ?

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்பான், 'என்னுடன் போர் செய்வோர்கள் இருப்பீர்களேயானால், உங்களைப் பெண்டிராக மதிக்கின்றேன்' என்னுங்குறிப்புத் தோன்ற, மதிலிற் சிலம்பினையும் தழையையும் வைத்திருந்தானென்று கூறப்பட்டிருக்கிறது. சேரன் செங்குட்டுவ னென்பான்,

வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகில்
பொருகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுங்காது பயங்கெழு வைப்பில்
குடிநடுக் குறூஉங் கோலே னாகுக.

எனச் சபதஞ் செய்து, பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் வடிவத்தைச் செய்தற்குக் கற்கொண்டுவர இமயஞ்சென்று, ஆங்குத் தன்னுடன் எதிர்த்த உத்தரன், விசித்திரன் கனகவிசயன் முதலியவர்களை வென்று, அவர்கள் தலையிலேயே கற்களை ஏற்றிக்கொண்டு வந்தானென்பது, தமிழ்நாட்டார் வீரத்திற்குத் தக்க சான்றாகு மல்லவா?

இனி, வீரத்தாய் ஒருத்தியின் செய்கையைக் கவனியுங்கள்:

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினை இக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

என்னே! இப்பாட்டின் கருத்து. வீரம் மிகுந்த செந்தமிழ் நாட்டிடைப் பிறந்த பெண்ணொருத்தி, தன் மகனைப் போர்க்கனுப்ப, அவன்புறமுதுகிட்டு ஓடினானென்று சிலர் கூற, அங்ஙனமாயின் அவன் பாலுண்ட இத் தனத்தை அறுத்தெறிவேன் என்று சபதங்கூறி, கையில் வாளொடு போர்க்களஞ் சென்று ஆங்குள்ள பிணமலைகளைப் புரட்டி, ஓர்பால் தன் மகன்மார்பிற் பாய்ந்த வேலால் உயிர் துறந்திருக்கக் கண்டு, அவனைப்பெற்ற தினத்தில் அடைந்த மகிழ்ச்சியினும் பெரிதும் மகிழ்ந்தனளாம். அக்காலத்து, பிள்ளை பிறந்தால் அது போர்க்குச் செல்லுந் தகுதியுடையதாகவே யிருத்தல் வேண்டுமென்று எண்ணியிருக்கின்றனர். மக்களாய்ப் பிறந்தார் வேல்கொண்டு போர்க்களத்துக்கேகுதல் கடனெனக் கொண்டனர். இதனை,

ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே



வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளிருவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

என்ற புறநானூற்றுச் செய்யுள் வலியுறுத்தும்.

முற்காலத்துப் பெண்கள் கற்புநிலையை ஆராயின், அது மிக்க தூய்மையுடையதாகவே காணப்படுகிறது. "செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க் குரை" என்று சொல்லிய நாடு நம் தமிழ்நாடே யாகும். இதனாலன்றோ,

'முக்கணர்தண் டலைநாட்டிற் கற்புடைமங் கையர்மகிமை மொழியப்போமோ, வொக்குமெரி குளிரவைத்தா ளொருத்திவில்வே டனையெரித்தா ளொருத்தி மூவர், பக்கமுற வமுதளித்தா ளொருத்தியெழு பரிதடுத்தா ளொருத்தி பண்டு, கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா என்றொருத்தி கூறி னாளே.'

என்றார் படிக்காசுப் புலவர்.

இன்னும், இதுபற்றிப் பண்டை நூல்களைத் துருவிப் பார்க்க எழுதலாமாயினும், விரிவஞ்சி இஃதுடன் முடிக்கின்றேன்.

---

## ஓர் விண்ணப்பம்.

திருவிசைப்பா அருளிச்செய்த திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பிகள், கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பிகள், சேதிராயர், சேந்தனார் முதலியவர்களுடைய திவ்யசரித்திரங்களும், திருநட்சத்திரங்களும் அறிய விரும்பி, சைவமடாதிபதிகட்கும், சைவசித்தாந்தச் செல்வர்கட்கும் பலமுறை விண்ணப்பித்துக் கொண்டேன். இன்றுகாறும் அடியேனது விண்ணப்பத்தை ஒருவரும் செவிசாய்க்கவில்லை. யாழ்ப்பாணத்து வண்ணை நகர் உயர்திரு சுவாமிநாத பண்டிதரவர்கள், சிவநேசன் மூலமாய்ப் பூர்த்தி செய்துவைப்பார்க ளென்று திருவருளைச் சிந்திக்கின்றேன். தற்சமயம் இவர்கள் பூர்த்திசெய்யாவிடின் வேறு யாவர் செய்துவைக்கப்போகின்றனர்?

**நல். கன்னணப்ப முதலியார்.**

---

## வினா.

சிவாகமங்களில் வாஸ்து பிரமா எனவும், சோதிடத்தில் வாஸ்து புருஷன் எனவும் வரும் வாத்துமன்யார்? யாருடைய புதல்வன்? பிரமா என்னும் பட்டத்தின் காரணமென்ன? கோயில், மனை முதலியவை கட்டுங்கால், வாஸ்து எழுங்காலத்தைப் பார்ப்பதேன்? உற்சவம் பிரதிஷ்டாதி காரியங்களில் முதற்கிரியையாக வாஸ்துசாந்தி செய்யக் காரணம் யாது? பிரமாணங்காட்டி விடைதர வேண்டுகிறேன்.

**விடைவிரும்பி.**

---

உ

# மகாத்மாக்களும் ஆலய சேவையும்.

மூன்று வயதென்பது அதிபாலியம். எண்பது வயதென்பது அதிவிருத்தாப்பியம். இவ்விரு பருவங்களும் இடைவிடாத யாத்திரை செய்தற்குச் சிறிதும் யோக்கியமல்ல. இப் பருவங்களில் உடல் மிகவும் மென்மையுற்றிருக்கும். ஆகலின், தொடர்ந்த யாத்திரை பலப்பல நோய்களைத் தருதல் கூடும். ஆனால், திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் மூன்றாம் வயசு முதலும், திருநாவுக்கரசு சுவாமிகள் எண்பதாம் வயசுவரையும் தமிழ்நாடெங்கும் யாத்திரை செய்தார்கள். தமிழ்நாட்டை உய்வித்தல் வேண்டுமென்னும் பெருங்கருணைத்திறமே அக் குருமணிகளாக வடிவெடுத்தது. ஆகலின், அப் பெரியார்கள் நாடெங்குஞ் சுற்றுவதும், ஊர்தொறுஞ் சென்று சென்று ஏழைமக்கட் கெண்ணிறந்த திவ்வியப் பிரசங்கங்கள் பலவற்றைச் செய்வதுமாகவே தங்களது வாழ்வையெல்லாம் கழித்தார்கள். அவர்களது திருவாய் மலரினின்றும் பெருக்கெடுத்த பிரசங்காமிர்தத்தை யுண்டு தேக்கிய தமிழ்நாடு சிவனுலகென நாளிதுவரைச் சுகம்பெற்று வருகின்றது. அந்தப் பிரசங்காமிர்தமே யன்றோ தேவாரமென்பது. முல்லை, பாலைமுதலிய எல்லா நிலங்களிலும், கார், கூதிர் முதலிய எல்லாக் காலங்களிலும் சுற்றிச் சுற்றிப் பிரயாணமும் பிரசங்கமுஞ் செய்துவந்தும், ஜுரம், ஜலதோஷம், மார்புநோய் முதலிய எப்பிணியும் அப்புண்ணிய மூர்த்திகளை நண்ணிப் புண்ணுறுத்தவில்லை. 'விடா யாத்திரை, விடாப் பிரசங்கம், பெருஞ்சத்தங்களைக் காதாற் கேட்டல், அதிகசிந்தனை முதலியன உங்கள் உடல்நிலைக்கு ஓராண்டுவரைப் பொருந்தா. அவ்வளவுங் கடல் யாத்திரையே செய்து கடற்காற்றை உட்கொள்ளுவதே ஏற்றதாகும்' என்பனவாதிய சௌக்கிய சாத்திரோபதேசங்களையும், எந்த மருத்துவனும் அவர்களுக்குச் செய்ததில்லை. ஆகவே, லோகசம்ரக்ஷணார்த்தங் கங்கணங்கட்டி வெளிவந்து 'பிணியறியோம்' என்றுகூறி, ஏமாக்குமவர்களே யன்றோ மகாத்மா வென்னும் பதத்திற்கு உண்மையி லுரியவர்கள். உடைந்த மரக்கலம் பிறிதொரு மரக்கலத்தைக் கரையேற்றுவ தொருக்காலு மில்லை.

அம் மகாத்மாக்கள் தமிழ்நாடு முழுவதுஞ் சென்று செய்தருளிய ஆயிரக் கணக்கான பிரசங்கங்களில் "விபசாரி வீடுகளும் கோவில்களும் ஒன்று." என்று யாண்டுங் கூறியதில்லை. ஆன்மாக்களெல்லாந் துயர் நீங்கி வாழ்தற்கேற்புடைய ராச்சியம் சிவராச்சியமே. அதனை யவைகட்குப் பெறுவித்தல் வேண்டுமென்னும் அதியுன்னத சங்கற்பத்தோடு "அரன்நாமமே, சூழ்க வையகமுந் துயர் தீர்கவே" என்று உலகத்தை வாழ்த்திக் கொண்டே வாழ்ந்த அப் பெருமக்கள் திருவாயில் அப் பயனில்சொல் பிறவாது. அவ் விராச்சியத்தைப் பெறுதற்கும், பெற்றபின்னர் அதனை யிழந்துவிடாமற் பேணிக்கோடற்கும், கோவில்களே பரமசாதனமென்பது அவர்கள் கண்டவுண்மை. அஃது அநுபவசித்தமே. அவர்கள் தம் வாழ்நாளெல்லாம் ஆலய சேவைசெய்து வந்தமை அதற்குச் சான்றாகும். ஆகவே, சுயராச்சிய சாதன மெனப்படுங் கதர்ப் பெருக்கத்தின் கால்மாட்டில், சிவராச்சிய சாதனமாகிய ஆலயப் பெருக்கத்தைப் பலியிட்டுப் பாழாகாதிருப்பதே அறிவுடைமை. சாத்தியம் வேறாயிற் சாதனமும் வேறாதல் சொல்லாமே போதரும்.

'ஞான அரசு'



# கற்புங் கல்வியும்.

ஒரு பகுதியிற் பிறந்த பல சொற்கள் வழக்காற்றில் வெவ்வேறு பொருளைத் தரும். வேள் என்னும் ஒரு பகுதியில் உதித்தன வேட்கையும் வேள்வியும். ஆனால், வேட்கையாவது தாகம். வேள்வியாவது யாகம். நீர் வேட்கை, தக்கன் வேள்வி யென்பன காண்க. யாரும் பகுதிப்பொருள் ஒன்றுதானே யென்று புகல் காட்டி, நீர் வேள்வி–தக்கன் வேட்கையென மாறிக்கூறார். அப்படியே கற்பு கல்வி யென்னுஞ் சொற்கள் கல் என்னும் பகுதியடியாகப் பிறந்தவை. படிப்பு என்பது அவற்றின் பொருள். ஆயினும், கற்பு உணர்த்தும் படிப்பு வேறு. கல்வி உணர்த்தும் படிப்பு வேறு. ஒரு பெண் தன் வாழ்நாள் முழுவதிலும் எந்த ஆணோடும் புணரலாகாது: கலியாணமானால் நாயகனோடு மட்டும் புணரலாம்: எந்தக் காரணங்கொண்டும் இரண்டாவது மணத்துக்கு இசையவே கூடாது என்னுந் திண்மைதான் கற்பு உணர்த்தும் படிப்பு. இப் படிப்புப் பெண்கட்கே யுரியது. இலக்கணம், இலக்கியம், தருக்கம், தத்துவம் முதலியவெல்லாம் கல்வி உணர்த்தும் படிப்பு. இப் படிப்பு இருபாலார்க்கு முரியது. இவ்வேறுபாட்டையும் அச்சொற்களின் வழக்காற்றால் அறிய வேண்டும். கற்புடைப் பெண்களைக் கல்வியுடைப் பெண்களென்றால் பொருள் விளங்கவேமாட்டாது. இலக்கணக் கல்வி, இலக்கியக் கல்வி, தருக்கக் கல்வி, தத்துவக் கல்வி யென வழங்குவரே யன்றி, இலக்கணக் கற்பு, இலக்கியக் கற்பு, தருக்கக் கற்பு, தத்துவக் கற்பு என வழங்கார் மேலோர்.

மங்கலியம் மஞ்சட்கயிறாலும் மணிக் கலனிலும் மாண்புடைத்தாகும். பெண்கட்குக் கற்பு மங்கலியம் போல்வது. கல்வி மற்றைக் கலன் போல்வது. இந்நாட்டு விழுக்குல மங்கையர் கல்வியிலாரென்று பெயரெடுக்க அஞ்சார்; கற்பிலாரென்று பெயரெடுக்க ஐயையோ! நடுநடுங்குவர். கற்பு அவர்க்குக் கல்வியால் வந்த

தன்று; குடிப்பிறப்பால் வந்தது. கல்வி கற்பைக் காவுஞ் செய்யும். வினைவயத்தாற் கெடுக்கவுஞ் செய்யும். கற்போ கல்வியை மணக்கவே வைக்கும்; கெடுப்பதே யில்லை. ஆகலின், பெண்கட்கு முதலில் வேண்டுவது கற்பே. கல்வி அடுத்தபடிதான்.

ஆனால், இக்காலைச் சிலர் கற்பு கல்விகளது பகுதிப் பொருள் ஒன்றாயிருப்பதுகண்டு கற்பையுங் கல்வியாக்கி அதன் வழக்காற்றுப் பொருளை எல்லார்க்கும் மறக்கடிக்கப் பார்க்கின்றனர். அதனால், ஆங்காங்குக் காணப்படுஞ் சில கல்வியுடைப் பெண்கள் மதிப்படையலாயினர். ஆனால், வழக்காற்றுப் பொருளையுடைய கற்புக்குக் களஞ்சியங்களாகிய கண்ணகிகள், பூதப்பாண்டியன் தேவிகள், திலகவதிகள், புனிதவதிகள் முதலியோர்க்கு இப்போது இந் நாட்டிடையிருக்கும் மதிப்பு எப்படிப் பட்டது? கல்வியிலாரென்று அன்னார் இகழப்படுவதுதான் கண்ட பலன். கல்வியுடைப் பெண்டிரைக் கற்புடைப் பெண்டிர் அநுசரிக்க வேண்டுமாம். தமிழகத்தில் காலத்தின் கோலம் அப்படியாயிற்று.

ஆ. சுப்ரமண்யம்.

---

# பூனாஒப்பந்தத்தில் ஆலயப்ரவேசம் அடங்கவில்லை.

“ஜாதி ஹிந்துக்களே! பூனா ஒப்பந்தத்தால் நீங்கள் கட்டுப்பட்டிருக்கிறீர்கள். ஆகையால், தீண்டாதார்களுக்கு ஆலயங்களைத் திறந்துவிடுங்கள்’ என்று காந்திஜி சொல்லுகிறார். இந்தப்படி வேண்டுதல் சரியா? என்று விசாரிக்கவேண்டும்.

செப்டம்பர்மீ 19உ சில ஜாதிப்ரமுகர்களும், தாழ்ந்த வகுப்பினர் தலைவர்களும் பூனாவில் கூடினார்கள். 20உ காந்திஜி பட்டினிகிடக்க ஆரம்பித்தார். 17உ யன்று ஸ்ரீமான் ராசகோபாலாச்சாரியார் விடுத்த அறிக்கையில், ‘காந்திஜியின் இப்போதைய தேகஸ்திதியையும், வயதையும் கவனித்தால் முன்னொரு சமயம் பட்டினிகிடந்து தாங்கின அளவு இப்போது தாங்க இயலாது; உடனே ஏதாவது பரிஹாரம் ஏற்படாமல் அவருக்குஹானி வருமாயின் உலகம் சஹிக்க முடியாத சம்பவங்கள் நேரிடக்கூடும்’ என்று எல்லாருக்கும் திகில் கொடுக்கும்படி தெரிவித்தார். 24உ யன்று மற்றொரு அறிக்கையில், சாகுந்தருவாயில் இருக்கும் மஹாத்மாஜி ஜனங்களை வேண்டிக்கொள்வதாகச் சொன்னார். 22உ பண்டிட் மாளவியாஜி, ‘இரண்டுநாள் பட்டினியால் காந்திஜி மிகவும் களைத்திருக்கிறார். இநுமாதிரி அதிகமாய்த் தாங்காது. ஆகையால், ஏதாவது முடிவு உடனே செய்யவேண்டும்’ என்று கவலை பெருக்கும் எச்சரிக்கையிட்டார். பிறகு 24உ யன்று பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது.

மேற்சொல்லிய விதம், கொட்டுவாயான நெருக்கடியில் பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் கையெழுத் திட்டவர்கள் (‘ஹிந்து’ பேபரில்



பேர்கள் குறித்திருக்கிறபடி) ஜாதி ஹிந்துக்கள் நாலுபேர்: பண்டிட் மாளவியாஜி, டாக்டர் ஸோலாங்கி, ஸர் டேஸ் பஹதூர் ஸப்ரு, ஸ்ரீமான் ஜயேகர். இதரர்கள் ஐந்துபேர்.—டாக்டர் அம்பேத்கர், ராவ்பஹதூர் ஸ்ரீநிவாசன், ராவ் பஹதூர் எம். ஸி. ராஜா, பி. பாலூ, ஸ்ரீமான் ராஜபோஜ் என். சிவராஜ்.

இவர்கள் கையெழுத்திட்டது எட்டு நிபந்தனைகள். அது ‘ஹிந்து’ பத்திரிகையில் (25—9—32ல்) வெளிவந்திருக்கிறது. அவைகளில் ஆலயப்ரவேசத்தைப்பற்றி ஒரு எழுத்துக்கூட இல்லை. ஹிந்து மதத்தைச் சீர்திருத்த பிரவர்த்தித் திருப்பதாய் ஒரு அர்த்தமும் அதில் அடங்கியிருக்கவில்லை. அனுமானத்தால்கூட இவ்வித விஷயத்தை அதில் பூட்டும்படியாக இல்லை.

இந்த ஸ்திதியில் காந்திஜீ தீண்டாமை விஷயமாய் 5-11-32வுள்ள அறிக்கையில், ‘பூனா ஒப்பந்தத்தில் கட்டுப்பட்ட ஜாதி ஹிந்துக்கள் தீண்டாதார்களைத் தங்கள் கோயில்களுக்குள்ளும், வீடுகளுக்குள்ளும், பள்ளிக்கூடங்களுக்குள்ளும் அழைத்துக்கொள்ள வேண்டும்’ என்று என்ன ஆதாரத்தால் கேட்கிறார் என்று விளங்கவில்லை.

காந்திஜி பட்டினி தொடங்கினது தனித்தொகுதிகளைத் தொலைப்பதற்காக. அது ராஜீய விஷயம். காந்திஜிக்கு மரணம் நேரிட்டால் உலகந்தாங்கமுடியாத அநர்த்தமுண்டாகும் என்று நடுக்கங்கொண்ட பீதியுடன் பூனாவில் கூடியிருந்த சிலபேர்கள் கையெழுத்திட்டார்கள். ஸ்வஸ்தமான நிலைமையில், மனதொப்பி ஏற்பட்ட ஒப்பந்தமல்ல பூனா உடன்படிக்கை. அவசரத்திலும், அளவுகடந்த நிர்ப்பந்தத்திலும், சம்பந்தப்பட்ட பேர்களிடம் கலக்காமலும், தெளிவாக முன்னதிகாரம் பெறாமலும் அது ஏற்பட்டது. ஸ்ரீமான்கள் ஸப்ருவும், ஜயேகரும், ஹிந்து மதாசாரங்கள்—ஜாதி வ்யவஸ்தைகளை மீறிப்போனவர்கள். டாக்டர் ஸோலாங்கியோ நாம் முன்னும் பின்னும் கேட்டறியாதவர். இந்த நாலுபேர்கள் மதவிஷயத்தைத் தொடக்கூடிய எந்த நிபந்தனையிலும் கோடிக்கணக்கான ஜாதி ஹிந்துக்களைக் கட்டுப்படுத்தும்படியாகக் கையெழுத்திட எவ்வித அதிகாரமும் கிடையாது. வேதங்கள், சாஸ்திரங்கள், மதாசாரங்கள், ஜாதி வ்யவஸ்தைகள், அநாதிகாலம் தொட்டு வழங்கிவரும் நம்பிக்கைகள், நடவடிக்கைகள் எல்லாவற்றையம் பாதிக்கும்படியான ஒரு புது விஷயத்தைக் கிளப்பிவிட்டு, அதுவும் பூனா ஒப்பந்தத்தில் அடங்கியுள்ளது என்று ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் தென்னிந்தியா ப்ரசாரப்பேச்சுகளில் வாய்விட்டுச் சொன்னார். அவ்விதம் சொல்லுவதற்கு ஆதாரம் இல்லை. பூனா ஒப்பந்தத்தில் அது வெளிப்படையர்கவுமில்லை; மறைந்தும் இல்லை. இதேமாதிரி காந்திஜி அவர்களும்கூடத் தம் முதலாவது அறிக்கையில் சொல்லியிருப்பது ஆச்சரியத்தையும், தாபத்தையும் உண்டுபண்ணுகிறது. காந்திஜியின் வாதம் தவறென்று பூனா உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ராவ்பகதூர் ஆர். ஸ்ரீநிவாசன் சொல்லாலேயே வெளியாகிறது. 20—11—32 ல் திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீநிவாசன் பேசியதில், ‘பூனா ஒப்பந்தத்துக்குப் பிறகு ஆலயப்ரவேச சீர்திருத்தம் தீர்மானிக்கப்பட்டது” என்று சொல்லியிருக்கிறார்.

---

உ

# ஆஸ்திகர்களே!

1. இப்பொழுது காந்திஜீ முதலியவர்களுடைய கிளர்ச்சியினால் நீண்ட காலமாக நமது நாட்டிலிருந்துவரும் வர்ணாசிரம தர்மத்திற்குப் பெருத்த அபாயங்கள் விளைகின்றன. ஆஸ்திக பக்தர்கள் எல்லோரும், வர்ணாசிரம தர்மத்தை இரக்ஷித்துவரும் பகவானை, இந்த அபாயங்கள் சீக்கிரம் நீங்கி விடவேண்டுமென்று கைகூப்பிப் பிரார்த்திப்போம்.

2. இந்தப் பாரத நாட்டில் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக எல்லா சாதியாரும் தங்கள் தங்களுக்குரிய தர்மங்களை வரன்முறைப்படி நடத்திக் கொண்டு ஒருவருக்கொருவர் அன்புடனும், உபகாரத்துடனும் சந்தோஷமாக இருந்து வருகிறோம். இப்பொழுதும் அநேக கிராமங்களில் ஜனங்கள் நவீனக் கிளர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் வரன் முறைப்படி இருந்து வருகிறார்கள். இப்படி வர்ணாசிரம தர்மப் பிரகாரம் நடந்து வரும் கிராமவாழ்க்கைக்கு ஒரு முக்கிய அங்கமாக ஒவ்வொரு கிராமத்திய ஆலயங்களும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நமது வைதிக முறைப் பிரகாரமும் ஆகமசாஸ்திரப் பிரகாரமும் ஏற்பட்டு நான்குவர்ணத்தார்களும் அவரவர்களுக்குரிய ஸ்தானங்களிலிருந்து ஈசுவர தரிசனம் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறார்கள். பஞ்சமர்களும் ஆலயத்திற்கு வெளியிலிருந்து கோபுரவிமான தரிசனம் செய்துகொண்டு ரதோத்சவம் முதலான சமயங்களில் ஈசுவரகைங்கரியம் செய்துகொண்டு ஆனந்தமாக இருந்துவந்திருக்கிறார்கள்.

3. அந்நிய நாகரிக முறைமையில் தங்கள் வாழ்நாளைக் கழித்துவரும் சிலர் அந்நியக் கல்விகளைக் கற்று அதனால் தம் மனம் கலங்கி பல கிளர்ச்சிகளைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஜாதி முறைமை தவறிச் சேர்ந்து உண்பதும், கலியாணங்களைச் செய்துகொள்வதும், அவரவர்கள் தர்மத்தை மீறி மற்றொருவர் தர்மத்தை நாம் ஏன் செய்யக்கூடாது? என்று ஆக்ஷேபிப்பதும், இவையெல்லாம் ஒற்றுமைக்கு ஸாதனம் என்று நினைத்துப் பெரும் கூக்குரலிடுகிறார்கள்.

4. அந்நிய தேசங்களில் நடப்பதைப் பார்த்தோமானால் இந்த விதமான அந்நிய மதஸ்தர்களின் நாகரீகங்கள் ஜனங்களுக்குள் எவ்வளவு சண்டைகளை உண்டாக்குகின்றன. ஒருவகைத் தொழிலாளர்களை மற்ற வகையார் பகைப்பதும், முதலாளிகள் தொழிலாளர்கள் இவர்களுக்குள் பெருத்த சண்டைகள் ஏற்படுவதும் நமக்குத்தெரியும். சேர்ந்து மணந்துகொண்டும், சேர்ந்து சாப்பிட்டுக்கொண்டுமிருக்கிற ஐரோப்பியர்களுக்குள் இங்கிலீஷ்காரர், பிரெஞ்சுக்காரர், ஜர்மானியர் என்று வைத்துக்கொண்டு, அவர்களுக்குள் எவ்வளவு நூற்றாண்டுகளாகப்போட்டிகளும் சண்டைகளும் உண்டாயின வென்றும் நமக்கு நன்றாகத் தெரியும். இவையெல்லாம் சரியான ஒற்றுமைக்கு ஸாதனங்கள் அல்ல. அதிகமான சண்டையும் வேறுபாட்டையும் உண்டு பண்ணுமே யொழிய வேறில்லை.

5. ஆகையால், ஆஸ்திகர்களே! பல ஆயிரக் கணக்கான வருஷங்களாக நம்முடைய ஜாதிகளுக்குள் ஏற்பட்ட ஒற்றுமையை இந்தக் கிளர்ச்சிக்குப் பயந்து இழந்துவிடாதீர்கள். தைரியத்துடனும் சந்தோஷத்துடனும் நம்முடைய வேதசாஸ்திரங்களை நம்பி நடந்துகொண்டு, வர்ணாச்சிரம தர்மப் பிரகாரம் அவரவர்களுக் குரிய தர்மங்களை நடத்திக்கொண்டு அன்புடன் வாழ்ந்து வருவோமானால், எல்லா அபாயங்களும் ஸ்ரீ கிருஷ்ணபகவானின் கருணையினால் நீங்கிவிடும்.



## பஞ்சமர்களே!

6. இதுகாறும் பொதுவாய்ச் சொல்லிவந்ததைத் தவிர உங்களுக்கென தனியாய் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லுகிறோம்.

நீங்கள் வெகு காலமாக உங்களுக்குரிய வேலைகளையும் தர்மங்களையும் செய்துகொண்டு எல்லா சமூகத்தாருடன் வாழ்ந்து வந்தீர்கள். ஏதோ சில புதிதான அபிப்பிராயங்களை உங்களுக்குப் பாத்தியம் என்ற சப்தத்தினால் சொல்லி நன்மை செய்வதாய்ச் சிலர் உபதேசிக்கிறார்கள். உங்களுடைய முறையை இழந்து இதர குலத்தவர் செய்கிறமாதிரி நீங்கள் செய்வது உங்களுக்கு யாதொரு நன்மையையும் விளைவிக்காது. வெகுகாலமாக உங்களுடைய பெரியோர்கள் எல்லோரும் இந்த ஆலயப்பிரவேசம் தங்களுக்கு நன்மையை விளைவிக்காதென்ற சாஸ்திரத்தை நம்பியே இருந்திருக்கிறார்கள். நந்தனார்போன்ற பெரிய மஹான்கள் ஆலயத்திற்குள் அழைத்தாலும் போகக்கூடாது என்ற கொள்கையையே கைப்பற்றி வந்திருக்கிறார்கள். எந்தக் குலத்தவர்கள் எந்த இடத்திலிருந்து தியானம் செய்தால் அருள்புரிவதாகச் சாஸ்திர மூலமாய்ப் பகவான் வாக்குக் கொடுத்திருக்கிறாரோ, அந்த இட வரைமுறைகளை மீறினால் நமக்குப்பகவானின் அருள் ஏற்படுமா? இதுவரையில் சாஸ்திரமுறைப்படி கோயிலுக்கு வெளியில் நின்று மனமுருகித்தரிசனம் செய்துகொண்டிருந்த உங்கள் முன்னோர்களில் ஒருவரும் மோக்ஷத்திற்குப் போகவே இல்லையா? சாஸ்திரங்களை மீறிப் போகக்கூடாத இடத்திற்குப் போனால்தான் மோக்ஷம் என்று நினைப்பது நியாயமில்லையே. ஹிந்து மதத்தினராக இருந்துகொண்டு ஹிந்து சாஸ்திரங்களையும் அநுஷ்டானங்களையும் மீறுவதில் என்ன புண்யம்? நவீனர்களின் கிளர்ச்சிப்படி ஆலயப்பிரவேசம் உங்களுக்கு நன்மையை விளைவிக்காது என்று நம்பி அபசாரத்திற்குக் காரணமான இதை விட்டு பகவானுடைய கருணைக்குப் பாத்திரராகி இகலோகத்திலும் பரலோகத்திலும்க்ஷேமங்களை அடையுங்கள்.

**மதராஸ் ப்ராந்தீய வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கத்தார்.**

---

## ஸ்ரீமான் காந்தியின் பத்துக் கேள்விக்கும் பதில்.

(கிரமத்தை மாற்றிக் கேட்டிருப்பதால் அதை அனுசரித்து எழுதப்படுகிறது.)

1. கேள்வி:— சாஸ்திரங்களிலுள்ளபடி தீண்டாமையை விளக்குக?

2. சாஸ்திரங்களில் தீண்டாதாரைப்பற்றிக் கூறியிருப்பவை, தற்சமயம் தீண்டாதார் என்று அழைக்கப்படுகிறவர்களுக்குப் பொருந்துமா?

பதில்:— சாந்தோக்யம் முதலிய உபநிஷத்துக்களில், ஸ்வபசன், எனச் சொல்லி, அவர்கள் ஸமீபத்திலும், அவர்கள் குடியிருக்கும் சேரிக்கு ஸமீபத்திலும் போகக் கூடாது. ஏனென்றால், அவர்கள் முன் ஜன்மத்

தில் கொடிய பாபத்தால் ஏற்பட்ட ஜாதியென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை யனுஸரித்த ஸ்ம்ருதி புராண ஆகமங்களில் அவர்கள் கீழானவர்களிடமிருந்து மேலான ஸ்திரீகளுக்கு மறைவாய்ப் பிறந்தவர்களும், அவ் வகுப்பினில் பிறந்தவர்களுமாயிருப்பவர்கள். அவர்களில் இன்னாருக்கு இத்தனை யடி தூரம் விலகவேண்டும்; இன்னாருக்கு இத்தனை யடி தூரம் விலகவேண்டும். இன்னின்னாருக்கு இன்னவிதம் நடை உடை ஆபரணம் தொழில் என்றும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றது. அவ் விதமே கிராமாந்திரங்களில் நாளிதுவரை நடந்து வருபவரையே தற்சமயம் தீண்டாதாரென் றழைக்கின்றன ரென்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

3. தீண்டாதாரின்மீது சாஸ்திரங்கள் விதித்துள்ள தடைகள் யாவை?

பதில்:— அவர்களுக்கு ஆகாரம், ஸ்வஜாதியில் புத்திரோத்பத்தி, முதயவைகளில் விதிவிலக்கு ஒன்றுமே கிடையாது. மேலான ஜாதியாருடன் வ்யவஹரிப்பதில் அவர்களுக்கேற்பட்ட வரையைச் சற்றேனும் மீறக்கூடாதென்பதான ஒரே தடையே யுளது.

4. ஒருவன் தீண்டாமையில் இருந்து தனது ஆயுளுக்குள் விடுதலை பெறக்கூடுமா?

பதில்:— ஜாதியால் ஏற்பட்ட தீண்டாமை மேல்ஜாதியில் பிறந்த பிறகுதான் போகும்.

5. மேல்ஜாதியார் தீண்டாதார்பால் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும்?

பதில்:— மேல்ஜாதியார் தீண்டாதாரைத் தங்கள் நிலத்திற்கு உழவராக வைத்துக்கொள்ளுகிறார்கள். அவர்களும் அந்த நிலங்களைத் தங்கள் சொந்த நிலமாய்ப் பாவித்து உழவு முதலியன செய்து பயிர் இடுகின்றனர். அவர்களில் ஒருவன் உழும் வயல் தண்ணீரை அடுத்த வயல் உழவன் திறந்து தான் உழும் வயலில் அடைத்தால், என் வயல் தண்ணீரை நீ உன் வயலுக்கு எவ்விதம் பெருக்கிக்கொள்ளலாமென்று சண்டைபோட்டு நிலக்காரரிடம் வந்து, நம்முடைய வயல் தண்ணீரை அடுத்த வயல் உழவன் தன் வயலுக்குப் பெருக்கிக்கொண்டு விட்டானென்று புகார் சொல்லுகிறான். உம்முடைய வயல் தண்ணீரை என்றாவது, அடுத்த நிலக்காரன் வயலில் என்றாவது சொல்வதில்லை. அப் புகாரைக்கேட்ட நிலஸ்வானும் நம் வயல் தண்ணீரையா? அடுத்த வயற்காரனா? என்று கூச்சல் போடுகிறானே தவிர, என் வயல் தண்ணீரையா? அடுத்த வயல் உழவனா? என்றும் சொல்வதில்லை. நிலத்தில் விளைந்த தான்யத்தில் 10ல் ஒன்று உழவனுங்கு நிலஸ்வான் கொடுக்கின்றான். விவஸாயச் செலவுக்கு $3\frac{1}{2}$ பாகமும், ஸர்க்கார் தீர்வைக்கு $2\frac{1}{2}$ பாகமும் போக, மீதமுள்ள 3 பாகம் நிலக்காரனுக்குக் கிடைக்கின்றது. அது நிலத்தின் கிரயத் தொகைக்கு வருஷம் 1-க்கு ரூ. 100-க்கு $1\frac{1}{2}$ ரூபாய் வட்டி ஆகிறது. ராஜீகமாகவாவது தெய்வீகமாகவாவது நஷ்டமேற்பட்டால் நிலஸ்வானைச் சேர்ந்தது. நஷ்டகாலத்திலும் தனதான்யங்களைக் கொடுத்து உழவர்களை ரக்ஷிக்கின்றனர். உழவன் மாறிக் கொடுத்தால் வாங்கிக் கொள்கிறார்கள். இல்லாவிட்டால் தள்ளிவிடுகின்றனர். தேவாலய உத்ஸவங்களில் வீதியுள்ள பட்டணங்களில் எல்லோரும் சேர்ந்து நின்றே உத்ஸவமூர்த்தியை தரிசிக்கின்றனர். சேர்ந்தே தேர் இழுக்கின்றனர். கோபுர வாசல் வரை பஞ்சமர்



வந்து தரிசிக்க ஸம்மதித்திருக்கின்றனர். அவர்களும் சாஸ்திரங்களுக்குப் பயந்து கோபுர வாயிலில் இருந்தே தரிசித்து வருகின்றனர். இவ்விதம் கள்ளம் கபடம் இல்லாமல் மிக்க ஸ்நேகத்துடன் நாளிதுவரை ஒத்து வாழ்ந்து வருகின்றனர்.

6. தீண்டாதாரை சாஸ்திரம் எவ்வித காரணத்தைக்கொண்டு ஆலயங்களுக்குட் போக அனுமதி தரும்?

பதில்:— கோபுர வாசலில் இருந்து ஸேவிக்க அனுமதித்து இருப்பதால், ஒருவித காரணத்தைக்கொண்டும் உட்புகுந்து ஸேவிக்க அனுமதி தராது.

7. சாஸ்திரங்கள் என்றால் என்ன?

பதில்:— எல்லா மனிதர்களும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைய அவரவர்கள் யோக்யதையை அனுசரித்து அவைகளின் உபாயங்கள் விதிப்பதும், கொடுமையான நரகத்தை அடையாமலிருக்குமாறு கெட்ட காரியங்களிலிருந்து அவர்களைத் தடுப்பதுமான சுருதி, ஸ்மிருதி, புராணம், ஆகமம், சாஸ்திரங்களெனப்படும்.

8. சாஸ்திரங்களின் அதிகாரத்தை ருஜுசெய்வது எவ்விதம்?

பதில்:— பூர்வோத்தர மிமாம்ஸைகளால் ருஜுசெய்யப்பட்டாய் விட்டது.

9. அவைகளின் மாறுபாடான அபிப்பிராயங்களை முடிவுசெய்வது எவ்வாறு?

பதில்:— மாறுபாடான அபிப்பிராயமே கிடையாது. மாறுபாடு போல்தோன்றும் தோற்றமும் முற்கூறிய மீமாம்ஸைகளாலேயே நிவிருத்தி செய்யப்பட்டு விட்டது.

10. தீண்டாதார் விஷயத்தில் தங்கள் அபிப்பிராயம் யாது?.

பதில்:— சாஸ்திரத்தின் கருத்தே எங்கள் கருத்தும்.

ராகத்வேஷமற்று கருணையே குடிகொண்ட விசாலமான மனமுற்று ஏழை பங்காள மகாத்மா என எண்ணப்பட்ட காந்தி அவர்களுக்கு எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது என்னவென்றால், தங்கள் அபிப்பிராயமே எங்கள் அபிப்பிராயம்.

அஃதெங்ஙனமெனில்:—தங்கள் பத்திரிகையில் காணப்பட்டவிஷயமெல்லாம் தாங்கள் அபிப்பிராயப்பட்டிருக்கும் விஷயமாகவே ஆகுமல்லவா? அப்பத்திரிகையில் வைதீகர்களைச் சண்டாள வைதீகர்களென்று நிந்தித்திருக்கிறது. ஸாமவேதோபநிஷத்தில் முன் ஜன்மத்தில் செய்த கொடிய பாபத்தால், ச்வா, ஸூகரம், சண்டாளராகப் பிறக்கின்றனரென்று சொல்லப்பட்டிருக்கின்றது. உலகத்திலும் தீய காரியத்தைச் செய்தவனை அவ்வித சப்தங்களைச்சொல்லி நிந்திப்பதைக் கேட்கின்றோம். ஆகையால், அது கொடிய பாப ஜாதியென்றும், அது இப்பொழுதும் இருக்கிறதாயும் தீண்டக்கூடாத ஜாதியென்றும் தங்கள் அபிப்பிராயம் வெளியாகிறது. ஆகையால், அந்த ஜாதி சண்டாளர்கள் வரைகடந்து கொடிய பாபத்திற்கு ஆளாகாமலும், இந்து வைதீகர்கள் அவர்களுடன் சாஸ்திரீய வ்யவஹாரத்

186924

தில் கலந்து சண்டாளர்கள் ஆகாமல் இருக்கும்படியும், நமது ஹிந்துக்களில் ஓர் வகுப்பினரான ஜாதிச் சண்டாளர்களுக்குத் தாங்கள் நன்மையை உபதேசிக்கவேண்டுமென்பது எங்கள் அபிப்பிராயம்.

இது விஷயத்தில் சுமார் 25 வருஷத்திற்கு முன்பு நடந்த ஒரு சரிதம் எழுதப்படுகிறது. தாமிரபரணி தீரத்தில் ஓர் கிராமத்தில் சுப்பிரமணியக் குடும்பனென்ற பஞ்சமன் இருந்தான். அவன் உழவன். அவன் தனது 16வது வயதில் ஓர் வைதீக பிராம்மணரை நோக்கி எனக்கு நன்மையைச் சொல்லவேண்டுமென்று கேட்டான். அதற்கு அவர் அவனை நோக்கிச் சந்தோஷத்துடன் சொன்னதாவது:—

நீ 10-வயது முதல் சுத்தமாய்க் குளித்து வெள்ளை வேஷ்டிகட்டித் திருநீறுபூசிக்கொண்டிருப்பதை நான் பார்த்து வருகிறேன். இனி நீ என்ன செய்யவெண்டுமென்றால், ஓடுகின்ற சிறுவாய்க்காலில் சரீரசுத்தி செய்து பல் விளக்கிவிட்டு சூரியோதயம் ஆனதும் தாமிரபரணியில் ஒதுக்கமாகப்போய் ஸ்நாநம்செய்து வெள்ளை வேஷ்டியுடுத்துத் திருநீறு தரித்துச் சூரியனைநோக்கிப் பத்து நமஸ்காரம் செய்யவேண்டும். எப்போதும் சிவசுப்ரமண்யா! சிவசுப்ரமண்யா! என்று சொல்லவேண்டும். படிக்கத் தெரிந்தால் தமிழ்க் காந்தபுராணத்தைப் படிக்கவேண்டும். சில விஷ்ணுவாலயங்களின் வாயிலில் தூரத்தில் இருந்து 5 நமஸ்காரத்துக்குக் குறையாமல் செய்யவேண்டும். மாதந்தோறும் கடைசி சுக்ரவாரத்தில் திருச்செந்தூர் போய் ஒதுக்கமாய் ஸமுத்திரத்தில் ஸ்நானம் செய்து கோபுரவாயிலிருந்து சுப்பிரமணியக் கடவுளைத் தெரிசித்து, ராத்திரிவெளி வலம் வரும் சுப்பிரமணிய உத்ஸவ மூர்த்தியை நன்றாகத் தெரிசித்து வரவேண்டும். பொய் சொல்லக்கூடாது. பிராணிகளை ஹிம்சிக்கக் கூடாதென்று உபதேசித்தார். அவனும் அப்படியே எழுபதுவயதுவரை நடந்து வந்தான். கடைசியில் ஆவணிமூலத் திருநாளுக்குத் திருச்செந்தூருக்குப் போய் ஏழாவது உத்ஸவத்தில் வெளியில் வரும் அதி சுந்தரமான ஷண்முக மூர்த்தியைத் தரிசித்து சன்னிதியில் நின்று பக்தியால் பரவசமாகிக் கண்ணீர் வடித்து மயிர் சிலிர்த்து, ஷண்முகா! ஷண்முகா! என்று கதறினான். சரீரத்தில் கம்பம் உண்டாகிக் கீழே விழுந்து விட்டான். கூடப் போனவர்கள் வண்டியில் அவனை ஊருக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். வந்தவுடன் அப்படியே திருநீறுபூசிக்கொண்டு ஷண்முகா! ஷண்முகா! என்று சொல்லிக்கொண்டு காலம் சென்று விட்டான். இது விஷயத்தையும் தாங்கள் இப்பொழுது இருக்கும் பஞ்சமர்களுக்கு உபதேசிக்கக் கேட்டுக்கொள்கிறோம். அவதார புருஷர்களான சில மகான்கள் ஒரு காரணத்தை முன்னிட்டு ஒரு காரியத்தைச் செய்து அதற்குப் பரிஹாரமும் செய்தார்களென்று ஜன வதந்தியைக்கேட்டு நாமும் தர்மத்திற்கு விரோதமாக ஒரு காரியத்தைச் செய்வது உசிதமல்ல என்பது தங்களுக்குத் தெரிந்த விஷயமே. ஈசுவரன் விஷத்தை அருந்தியதுபோல் மற்றவர்களும் விஷத்தைப் புசித்தால் பிழைப்பார்களா? ஆகையால், எவ்வித கெடுதலும் வராமல் இருக்கும்படி தாங்கள் செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

ஆரியதர்மம்.

உ

# என்னே! துயிலின் பரிசு.

(திருவாளர் க. ராஜமாணிக்கப் பிள்ளை அவர்கள்.)

சைவம் வைஷ்ணவம் ஸ்மார்த்தம் மத்வம் என்பன பிரசித்த சமயங்கள். மத்வத்தைப் பார்ப்பனரே ஆசரிக்கின்றனர். ஸ்மார்த்தத்தை ஆசரிப்பவருட் பெரும்பாலார் பார்ப்பனர். சிலர் அல்லாரிலுமுளர். வைஷ்ணவத்தை ஆசரிப்பவருட் பார்ப்பனரும் அல்லாரும் அநேகமாய்ச் சமமாகவே யிருப்பர். சைவத்தை ஆசரிப்பவருள் மிகப் பெரும் பகுதியினர் பார்ப்பனரல்லார் பார்ப்பனரிற் பதினாயிரவர்க் கொருவர்தானும் ஆகப்படுவது அருமை. இது தமிழகக் கணக்கு.

சிவாலயங்கள் சைவத்துக்குச் சொந்தம். விஷ்ணுவாலயங்கள் வைஷ்ணவத்துக்குச் சொந்தம். ஸ்மார்த்தமும் மத்வமுங் கோயிலற்றன. அவ்விரு மதஸ்தருஞ் சைவ வைஷ்ணவக் கோயில்களில் வந்து வணங்கிப் போவர். எல்லாச் சைவக் கோயில்களுஞ் சிவாகமங்களிற் கண்டவாறு கட்டப்பட்டுள்ளன. எல்லா வைஷ்ணவக் கோயில்களும் பாஞ்சராத்திர வைகானஸங்களென்னும் விஷ்ணுவாகமங்களிற் கண்டவாறு கட்டப்பட்டுள்ளன. சைவம் சிவாகமங்களைச் சிவவாக்கெனக் கொள்ளும். வைஷ்ணவம் விஷ்ணுவாகமங்களை விஷ்ணுவாக்கெனக் கொள்ளும். ஸ்மார்த்த மத்வங்கள் அவ்விருவகை யாகமங்களையும் மனிதவாக்கெனத் தள்ளும். ஆகவே, சிவாலய பரிபாலனம் சைவத்துக்கும், விஷ்ணுவாலயபரிபாலனம் வைஷ்ணவத்துக்குமே பொறுப்பாதல் காண்க.

ஆனால், அவ்விரு மதஸ்தரும் அந்தப் பொறுப்பை எந்த அளவுக்கு வகிக்கின்றாரென்பது தெரியவேண்டும். அதற்கு ஒரு சோதனைக் காலம் இது. தீண்டப்படாதாரது ஆலயப் பிரவேசக் கிளர்ச்சி தீவிரமாய் நடக்கின்றது. கோவிற் பகைவராகிய பிரமசமாசிகள், ஆரிய சமாசிகள், நாஸ்திகர் முதலியோர் அக்கிளர்ச்சியின் தலைவர். சைவர் வைஷ்ணவர் முதலியவரிலும் அதற்கநுசரணையாவார் இல்லாமற் போகவில்லை. இரண்டொருவர் இருக்கத்தான் செய்கின்றனர். அவரும் அத்தலைவர்க்குத் துணைவர்தான். ஆனால், வைஷ்ணவரிடமிருந்து வெளிப்படும் அக்கிளர்ச்சிக் கண்டனமும் சாமானியமன்று. வைஷ்ணவப் பிரபலஸ்தர் பலர் ரஸமான கண்டனங்களை வாரியிறைத்துக் கிளர்ச்சிக்காரரைக் கிடுகிடென நடுங்க வைக்கின்றனர். கிளர்ச்சியுரைகள் யுக்தியளவில் நிற்பன. கண்டன வியாசங்களோ சுருதி யுக்தி யநுபவ மாகிய மூன்றிலும் நிற்பன. ஆகலின், அக்கண்டன வியாசங்கள் கொண்டு மிளிரும் வேதாதி சாஸ்திரப் பிரமாணங்கட்குக் கணக்கு வழக்கில்லை. சுதேசமித்திரன் போன்ற

பத்திரிகைகளைப் பத்துநாட் படித்தாலே மேலுண்மை விளங்கும். ஆனால், பண்டிதோத்தமராகிய அக்கண்டனகர்த்தாக்கள் அநேகமாய் எல்லாரும் பார்ப்பனரே. ஆயினுமென்? பார்ப்பனரல்லாத வைஷ்ணவர் பார்ப்பன வைஷ்ணவரை மதவிஷயத்தில் அநுசரித்தே நடப்பர். ஆகலின், அப் பார்ப்பனரல்லாருங் கண்டனங்கள் வெளிப்படுத்தாமை அவரைப் பொறுப்புணராதவரெனக் காட்டாது.

இனி, ஸ்மார்த்த மத்வர்களுக்கு வேறு சதாசாரங்கள் பலவுள. ஸ்மிருதி முதலிய சாத்திரங்களை அவர் அவலம்பிப்பவர். அவற்றிற் சொல்லியபடி பிராதக்கால ஸ்நானம், சந்தியாவந்தனம், அக்னிஹோத்திரம், வேதபாராயணம், பரிசுத்தாகாரம் முதலியன அவராசாரங்கள். ஆலயசேவை ஞானிகளுக்கு அநாவசியமென்னு மபிப்பிராய முடையவராயினும் கீழ்ப்படியினர்க்கு வேண்டுமென அவர் கொள்வர். ஆகலின், கோயிலுக்குப் போய்வரும் நியமத்தையும் அவர் விடுகிலர். தீண்டப்படாதார்க்குக் கோயில் நுழைவு கிடைத்துவிடின் அவ் வாசாரங்கள் பங்கமடையாவா? ஆகையால், ஸ்மார்த்த மத்வரும் அப் பிரவேசத்தை எதிர்க்கலாயினர். அவ் வெதிர்ப்புக்கள் தான் சாமானியமா? கிளர்ச்சிக்காரரது குலை குலையுமாறு அவையும் பத்திரிகைகளை அலங்கரிக்கின்றன.

சரி: சைவர் தமது பொறுப்புணருமாற்றையும் சிறிது பார்க்க வேண்டாமா? பார்ப்பனரல்லாரிலேயே சைவர் பலருளரென மேற் சொல்லப்பட்டது. ஆகலின், இங்குப் பார்ப்பனரல்லாரென விவகரித்தாலும் சைவரெனவே கொள்க. வைஷ்ணவ ஸ்மார்த்த மத்வர்க்குப் பிரமாணசாத்திரம், சிஷ்டாசாரம் எவ்வளவுஉண்டோ, சைவர்க்கும் அவை அவ்வளவு உண்டு. சிவதீக்ஷை, சிவபூஜை, சிவாலய சேவை, தேவார பாராயணம், சிவ விரதானுஷ்டானம், குருபூஜை, மாகேசுரபூஜை, பரிசுத்தாகாரம் முதலியன சைவாசாரங்கள். தென்னாட்டு வேளாளரிடம் அவற்றை இன்றும் ஒன்றும் விடாமற் பார்க்கலாம். பார்ப்பனரைக் கண்டு அவை படிக்கப்பட்டனவுமல்ல. அவரிடமே அவற்றில் அநேகம் சூனியம். அவர்ணருக்கு ஆலயப் பிரவேசம் அளிக்கலாகாதென்பது ஆகம விதி. பார்ப்பனரல்லார் நாளிதுவரை அவ் விதிக் கடங்கி ஆலய சீலத்தைக் காத்து வந்திருக்கின்றனர். இந்தச் சோதனைக் காலத்திலும் ஒன்றிரண்டு பேரே கட்டுக் கடங்காமல் திரியலாயினர். கட்டுக்கடங்கிய சைவர்க்குக் கதியாவார் யார்? பார்ப்பனரல்லாச் சைவ பண்டிதரேயன்றோ? அக்கிளர்ச்சியைப் போக்கடிக்க இப் பண்டிதர் என்ன செய்கின்றனர்? பத்திரிகைகளில் பார்ப்பனரல்லார் பெயரால் வரும் வியாசங்களெல்லாம் ஆலயப்பிரவேசத்தை ஆதரிப்பனவாகவே யிருக்கின்றன. அவர் கூட்டுங் கூட்டங்களும் அப்படித்தான். அவர் அதிபராயிருந்து நடத்தும் பத்திரிகைகளெல்லாங் கெதானுகெதிக நியாயத்தையே கொண்



டன. அவரது கண்டன வியாசம் ஒன்றையேனும் சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளில் இதுவரைக் கண்டனர் யார்? இந்தப் பஞ்சத்துக்குக் காரணம் என்ன? ஆழ்ந்து ஆராய்வார்க்கு இரண்டே புலப்படும். ஒன்று: பார்ப்பனரல்லாப் பண்டிதர்க்கு வேதாகமாதி விதிவிலக்கு நூலாராய்ச்சி யில்லையென்பது. இன்னொன்று: எல்லாச் சைவ பண்டிதருமே ஆலயப் பிரவேசத்தை ஆதரிப்பவரென்பது. ஆனால், பின்னையதை முழுமூடனும் நம்பமாட்டான். முன்னையதே வாஸ்தவம்.

## ஏ! சைவ பண்டிதர்காள்!

சைவசமயத்துக்கு வரம்பாகவுள்ள பிரமாணசாத்திரங்கள் இவையென்றுதானுந் தெரிந்து கொள்ளாதவர் உங்களில் எத்தனை பேர்? வேதமென்பாரொருவன். ஆகமமென்பாரொருவன். தேவாரமென்பாரொருவன். திருக்குறளென்பாரொருவன். தொல்காப்பியமென்பாரொருவன். சித்தர் நூலென்பாரொருவன். இத்தனையுமென்பாரொருவன். இவை யனைத்திலும் வேறென்பாரொருவன். என்னே! உங்களது பிளந்த நிலை? பிரமாணசாத்திரம் இன்னது என ஒருதலையாற் றுணிந்துகொள்ள வகையற்ற உங்கள் படிப்பும் ஒரு படிப்பா? போகூழ் சைவசமூகத்தைத் தற்சமயம் உங்கள் கையிற் காட்டிக் கொடுத்ததே! யாரிட்ட சாபமோ? தெரியவில்லை. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள், ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரவர்கள்; மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள், ஸ்ரீலஸ்ரீ பாம்பன் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ சோளங்கிபுரம் சிவ. அருணகிரி முதலியாரவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய ஆகம சாஸ்திர பாரங்கதர்கள் திக்விஜயமூலம் சைவஸ்தாபனஞ் செய்து சைவசமூகத்தின் மதிப்பிற்கிலக்காய் விளங்கினார்கள். அவர்களும் நேற்றைப் பண்டிதர்கள்தான். அவர்களது பெருமை தங்கிய வாழ்வும் அருமை தங்கிய செயலும் இன்னும் பழங்கதை யாகவில்லை. அவர்கள் மட்டும் இப்போது இருந்திருந்தால், ஸி. ராஜகோபாலாச்சாரி, டி. எஸ். எஸ். ராஜன், எஸ். எஸ். பாரதி, டாக்டர் சுப்பராயன், இவர்களால் அழைக்கப்பட்டு இங்கு வந்து அவைதிகப் பிரசங்கங்கள் புரிந்து கொண்டு ஊரூராய்த் திரியும் வடநாட்ட சைவர்கள் முதலியோர் தலைதூக்குவாரென்று, ஏ! இன்றைப் புலவர்காள்! நீங்கள் நினைக்கிறீர்களா? ஐயோ! உங்கள் பாண்டித்தியத்தால் சைவத்துக்கு இம்மிப் பிரயோசனமுமில்லையே. அறுதலிக்கும் விபசாரிக்கும் அகமுடையானைத் தேடிக் கொடுப்பதிற்றானே நீங்கள் பண்டிதராயிருக்கிறீர்கள்? தனது சதாசாரத்துக்குப் பெருங் கேடுவரவிருப்பதைக் கண்டு சைவசமூகம், ஆஹா! துடிதுடிக்கின்றது. மிலேச்சாசாரத்தையும் பற்றுங்காலம் வந்து விடுமோஎன்ற அதன் ஏக்கத்தை

அம்மம்ம! என்னென்பது? அச்சமூகத்துக்கு அபயங் கொடுக்குங் கடமை உங்களுக்கன்றி வேறு யாருக்குண்டு?

ஏ! பார்ப்பனரல்லாப் பண்டிதர்காள்! ஆலயப் பிரவேச கண்டன விஷயமாய் அகிலபாரத ஸநாதன பண்டித மகாநாடுகள் ஆங்காங்கு அநேகங்கூடின. உங்களது மகாநாடுகள் எத்தனை கூடின? இதுகாறுங் கூடின கண்டன மகா நாடுகளில் முக்கியமானவை இரண்டே. ஒன்று எரவாடாச் சிறையில் காந்தி முன்னிலையில் நடந்த வாதசபை. மற்றது குருவாயூரில் நடந்த மகாநாடு. உங்களில் யார் யார் அச்சபைகளுக்குச் சைவப் பிரதிநிதிகளாய்ச் சென்றனர்? உங்களைப் பொருட்படுத்தியாவது யாரேனும் அழைத்தனரா? அகிலபாரத பாக்கிய மாகிய வைதிக சைவத்தைப் பாரம்பரியமாய் உயிரினும் ஓம்பிவருஞ் சமூகத்தின் கௌரவம் உங்களால் அந்தோ! நாசமாய்ப் போகின்றதே. சைவசமயத்தை உருக்குலைக்க நீங்கள் எப்படித் துணிந்தீர்கள்? யாரேனும் ஆசங்கை கிளப்பாத வரையிலுமே நீங்கள் ஆசரிக்கும் ஆசாரங்கள் உங்களிடம் நிலைபெறுகின்றன. "சிவதீக்ஷை யில்லாவிட்டால் மோக்ஷங் கிடையாதா? அழுக்குப் போக முழுகிவிட்டு மீண்டும் அழுக்குப்படச் சாம்பலைப் பூசுவது பைத்தியமல்லவா? சிராத்தத்தில் புரோகிதனுக்குக் கொடுக்கப்படுந் திரவியங்கள் பிதுர்க்களுக்குப் போய்ச்சேருமென்பது மதியா? பாலைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதை விட்டுக் குழவிக் கல்லின் தலையிற் கொண்டு போய்க் கொட்டலாமா? கோயிலில் மகமதியருங் கிறிஸ்தவரும் நுழையலாம்: ஆதித்திராவிடர் மட்டும் ஏன் நுழையக் கூடாது?" என்பனவாய ஆசங்கைகளைக் கேட்டமாத்திரத்தில், அந்த ஆசாரங்களெல்லாம் உங்களை விட்டுப் பறந்து போகின்றன. அவைகளுக்குத் தக்கவிடை கூறமாட்டாமல் நீங்கள் விழிப்பதைக் கண்டு சைவ சமூகம் தலையிலடித்துக் கொள்ளுகின்றது. இப்போது ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியோ அமளிகுமளியாயிருக்கிறது. சைவசமூகமோ ஆகமாசாரத்தைப் பாதுகாக்க வேண்டுமே யென்று அலமருகின்றது. நீங்களோ பண்டித பட்டத்தை இடுகுறியாகக் கொண்டவர்போல் திரிகிறீர்கள். ஆன்றோராசாரம் எப்படிப் பாதுகாக்கப்படுமோ? ஈசுரனுக்கே வெளிச்சம்.

---

## ஓர் வேண்டுகோள்.

"சிவநேசன்" தைத் திங்களில் திருவாளர் க. ராஜமாணிக்கப் பிள்ளையவர்கள் எழுதிய "காந்தியும் சமயமும்" என்னும் கட்டுரையைக் கண்டு களிபேருவகை யுற்றனம். முடிவில் "இவ் வாராய்ச்சி இன்னும் நீளும். சைவர்களுக்கு இதனாலேயே புத்துணர்ச்சி யேற்படலாம். மற்றவை பின்னர் ஆராயப்படும்." எனத் தெரிவித்துள்ளார்கள். எம்போன்றவர்களும், காந்தியின் சூழ்ச்சியி லகப்பட் டுழலும் சைவர்களும் உய்திபெற, முற்றும் வெளியிட வேண்டுகின்றேன்.

**நல். நல்லணப்ப முதலியார்.**



163. பொருமருங்கு லாவுடைய பூங்கொம் பனையாள்
ஒருமருங்கு பச்சை யொளியான்—இருமருங்கும்

164. ஆடகநீள் குன்றத் தகல்வா னளக்குமணி
மாடநெடு வீதியின்கண் வந்திடலும்—கூடிமணிப்

165. பந்துகழங் காடாது பாடாது பைங்தொடியார்
வந்து வணங்க வணங்கினாள்—எந்தை

166. வடிந்த திருக்குழையும் வண்பவளச் செங்கேழ்
படிந்த வடிவழகும் பார்த்தாள்—அடர்ந்தசடை

167. சூட்டுநதித் தண்ணந் துறையினிலென் பாவையையநீர்
ஆட்டு மெனலு மணங்கனையார்—நாட்டமுற்ற

168. பங்கை யகலாப் பராசத்தி போலுமொரு
மங்கையவ ளென்று மறுத்துரைத்துச்—செங்கையணைத்

169, தாற்று பொழுதிலெங்கோ னம்பொனெடுந் தேர்செலலும்
ஏற்றுசிலை நாண்வே ளிறக்கினான்—தோற்றவிற்

பெதும்பை.

170. கூர்க்கும் பொதுநோக்கங் கூர்த்துங்கூ றாததும்போற்
பார்க்கும் பெதும்பைப் பருவத்தாள்—சேர்க்குமங்கை

171. தண்ணிசையாழ் வாங்கித் தனியன்றி மாதருடன்
பண்ணிசையப் பாடாப் பசுங்கிள்ளை—பெண்ணொருபால்

172. தந்தவரை யோடும்மைத் தாங்கும் வரைக்கினமாய்
வந்தகிளை யென்று வரம்பெற்று—வெந்திறலால்

173. அன்று சிறையை யடுவெம் பகைமுடித்தும்
என்று நெடுவா னெழுந்தோங்கிச்—சென்றுதெறற்

---

164. ஆடகநீள் குன்றத்து - மேருமலையைப்போலவே.
167. நதித்துறை - கங்கைத் துறையில்
168. பராசத்தி - ஆவுடைய நாயகியை. அவள் - அந்தக் கங்கை.
169. தோற்றவில் - தோற்றத்தில்.
170. கூர்த்தல் - கூர்மையுறுதல், மிகுதல். 171-4. நகில் வருணனை.
171-2. பெண்ணொருபாலைத் தந்தவரை - இமயமலை. தாங்கும் வரை - வெள்ளிமலை.
173. அடுவெம்பகை - இந்திரனை.
172-3. சென்று தெறற்கு வரம் பெற்று.

174. கன்ன வரைகளிரண் டாரவரை யாமுளைத்த
என்ன வரும்பு மிளமுலையாள்—துன்னும்

175. இருசுடரும் போக்கா விருளென் றிருட்கார்
மருவிய தன்னகுழல் வாய்ப்பாள்—பெருகினெமைத்

176. தாங்குங்கொ லென்றுமுலை தாமரும்பிப் பார்ப்பதுகண்
டேங்குந் துடிநே ரிடையினாள்—நீங்கரிய

177. நாண மொடுகலனு நன்னித் திலவடமும்
பூண மனஞ்சிறிது பூணுவாள்—மாணிழையார்

178. ஆயமு மாமயிலு மன்னத் திளம்பெடையும்
தாய மடமானுஞ் சூழ்போதச்—சேயிழையாள்

179. வட்டம் பெறும்பளிக்கு மண்டபத்து வந்திருப்ப
இட்டம் பெறவிணங்கு மேந்திழையார்—கட்டழகி

180. சங்கம் பகுந்தகுழைச் சங்கரர் சங்கரியார்க்
கங்கம் பகுந்த வருள்பாடிச்—செங்கை

---

174. அன்ன - மேற்கூறிய.

172-4. தேவரீருக்குரிய இமயமலைக்கும், வெள்ளிமலைக்கும் நாங்கள் இனங்கள். எங்களை மதியாமல் எம்முடைய சிறகுகளை அறுத்த இந்திரனை வெல்லுதற்கு வரந் தரவேண்டுமென்று மலைகளெல்லாம் தவஞ்செய்து பரமசிவனிடத்தே வரம்பெற்று இரண்டு மலைகளின் வடிவமாக முளைத்து மேல்நோக்கி யெழுந்தாற்போன்ற நகில்கள்.

175. வாய்ப்பாள் - பொருந்தியிருக்கப்பெற்றவள்; "வரையர மாதரின் வாய்ப்பாள்" குலோத். உலா. 189.

176. அரும்பி - தோன்றி. துடி - உடுக்கையை.

177. நல் நித்தில வடமும்.

176-7. நீங்கரிய நாணம்: "பெண்பா லவர்கட் கணியாய்ப்பிரி யாத நாணும்" சீவக. 1961.

178. ஆயம் - மகளிர்கூட்டம்.

179. பெதும்பை வந்திருப்ப. இட்டம் - இஷ்டம். கட்டழகி: ஈளி.

180. சங்கத்தை வகிர்ந்து அமைத்த குழையை யுடைய. அங்கம் பகுந்த - திருமேனியைப் பகிர்ந்துகொடுத்த; "பாகம் பகுந்து பரையிருப்ப வேள் பகழிக், காகம் பகுந்தன் றளித்ததுவும்" (243), "பரிந்திடுநங் கவிதைக ளிற் பாதி பகுந்து", "தாங்கருமன் பொடுபகுந்து சாத்தினர் தமிழ்மாலை". திருவால. காரியார் நாரியார். 12, 14.



181. மணிக்கழங் காடுக மென்ன வயங்கும்
அணிக்கிணங்கு கொங்கைமல ரன்னம்—பணிக்குமுக்கண்

182. மாமருந்து புற்றிடத்து மண்மருந்தா லெப்பிணியும்
போமருந்து மென்றான் புகழ்பாடித்—தாமத்

183. தசைந்த மணிக்குழைக ளங்குமிங்கு மாட
இசைந்த மணிக்கழங்கா டெல்லை—பசந்தகொடி

184. பங்கோன்கைச் சூலப் படையோன் வாராசை
எங்கோன் மணிமறுகி லெய்துதலும்—அங்குக்

185. கழங்காடல் விட்டுக் கரும்பனையா ரோடும்
வழங்காடல் வேற்கண் வணங்கிச்—செழுங்குதலை

186. மானனையீர் பங்கில் வனிதையெவள் செஞ்சடைமேற்
றேனனைய கோதையெவள் செப்புமென—மேனிவந்த

187. வேதத் தனிமுதல்வன் வீதி தனைக்கடந்து
போதத் தொடைமடக்கிப் போயினன்வேள்—வேதன்

மங்கை.

188. படியெடுப்பா வைத்துப் படைப்பவழ கெல்லாம்
வடிவெடுத்து வந்ததொரு மங்கை—தொடிவளைக்கைக்

---

181. கழங்கு ஆடுகம் - கழற்சிக்காயை ஆடுவோம். அன்னம் - பெதும்பை. பணிக்கும் - கட்டளையிடும்.

181-2. முக்கண்மாமருந்து - சிவபெருமான். எப்பிணியும் போம்; அருந்துங்கள். தாமம் - ஒளி. 184. வாராசை - இத் தலத்தின் பெயர்.

185-6. கரும்பை அனையார். வழங்கு ஆடல் வேல்கண் - ஆள் வழங்கு தலை வெற்றிகொள்ளுகின்ற வேல்போன்ற கண்; "ஆள்வழக் கொழிய நீண்ட வணிமலர்த் தடங்கண்" (சீவக 461.); "ஆள்வழக் கறுத்திடு நெடுங்க, ணம்பரத்தியர்" (திருநாகைக். அதிபத்த. 10.) பங்கில் வனிதை எவள் - பங்கிலுள்ள இந்தப் பெண் யார்?

187. போத - செல்ல. வேள் போயினன்.

188. படியெடுப்பு - பிரதியை எடுத்தல்; படி - பிரதி. "படிச்சந்த மாக்கும் படமுள வோதும் பரிசகத்தே" (திருச்சிற். 78.) படியெடுப்பாய்...... மங்கை: "தெரிவை மார்க்கொரு கட்டளை யெனச்செய்த திருவே", "சட்டகந் தன்னை நோக்கி யாரையுஞ் சமைக்கத் தக்காள்" (கம்ப. சித்திரகூட 33, நாடவிட்ட. 38.) தொடி - கங்கணம். வளை - வளையல்.

189. காவிக் கிளையைவென்ற கண்ணி யரவிந்தத்
தேவிக் கிளைய செழும்பூவை—தாவும்
190. முரசளிக்கும் வேலைமதன் மூவுலகும் வெல்ல
அரசளிக்க வந்தமட வன்னம்—விரைகமழ்பைந்
191. தாட்கொண்ட கஞ்சமுகை தன்னைவென்று வாரணிய
நாட்கொண்ட வட்ட நகிலத்தாள்—வேட்கைபொர
192. வாளை மருட்டி வடிபூங் குழைதாவி
வேளை மருட்டும் விழியினாள்—நீளும்
193. படியிருந்த வேலை படிந்தமுகில் வந்து
குடியிருந்த தன்ன குழலாள்—தொடியின்
194. கழைபோற் றிரண்டு கவினுமருந் தோளாள்
இழைபோ லுடங்கு மிடையாள்—உழைவிழியார்
195. தண்ணென் மதிசூழ்வெண் டாரகைபோற் பாங்குவரப்
பெண்ணமுத மன்னாள் பெரிதுவந்து—வண்ணம்
196. பொருத்துநவ ரத்தினம் பொற்பா லிலங்கத்
திருத்துந் திருவூசல் சேர்ந்தாள்—வசித்தடங்

189. காவிக் கிளை - கருங்குவளை மலரின் இனங்களை.

189-90. தாவும்வேலை - கடல். அளிக்கும் வேலையை முரசாக உடைய மதன்.

191. தாள் - தண்டு. கஞ்சமுகை - தாமரையரும்பு. வேட்கை - விருப்பம்.

192. வேளை - மன்மதனை.

193. வேலை படிந்த முகில் - கடலிற் படிந்த மேகம்; எழுவாய்.

193-4. தொடியின் கழை - பூணையுடைய மூங்கில்; தொடி, தோள்வளைக்கு உவமை.

194. உழை - மான்.

195. தாரகை - நட்சத்திரம்.

194-5. உழைவிழியார் பாங்குவர. மங்கைக்கு மதியும், தோழியர்க்கு நட்சத்திரமும் உவமை; "ஒண்ணுதன் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண்மதிபோலச் செல்வாளென்பது" இறை. சூ. 2, உரை.

196. ஊசலைச் சேர்ந்தாள்.



197. கண்ணொளி பாயக் கதிர்நீல வூசலென
நண்ணா லு நோக்கி நகைமுகிழ்த்தாள்—வெண்ணிலவின்
198. அந்தண் ணகையொளிபாய்ந் தவ்வூச லாரநிரை
தந்தமணி யூசலெனத் தான்விளங்க—வந்துமறிந்
199. தோடியிரு கண்க ளொளிர்குழை யூசலிருந்
தாடி யசையவசைந் தாடுதலும்—பேடைமயில்
200. அன்னம்போன் மின்னா ரமையு மமையுமெனப்
பொன்னஞ் சிலம்பிரங்கல் போதாதோ—நின்னாகக்
201 காட்டுப் பொறிவண்டுங் கைவண்டும் போதுமெனக்
கேட்டுப் புலம்புவது கேளாதோ—வேட்டாடல்
202. இங்கொழிக வென்ன விசைந்தா டலையொழிந்தாள்
அங்குமகிழ் தந்திருக்கு மவ்வளவில்—பொங்குததி
203. மண்ணிடந்த மாலும் வனசரனு மெய்யன்பாற்
கண்ணிடந்து சாத்தவருள் கண்ணுதலோன்—எண்ணில்
204. சுரராசைப் பொற்பமைந்த தொன்னகர மன்ன
வரராசைப் புன்னை வனத்தான்—முரசவொலி
205. ஆர்ப்பவனி யெங்கு மதிர வதத்தூண்டும்
தேர்ப்பவனி சென்று தெரிசித்தான்—கூர்ப்பக்
206. கலையாய் வளைநிறைநாண் கைவிட்டாள் செம்பொற்
சிலையான் மறுவீதி சென்றான்—உலையார்ந்த

197. பாய - பாய்தலால். 198. ஆர நிரை - முத்தின் வரிசை.

200. அமையும் - போதும். என - என்று. 201. கை வண்டு - வளை.

202. என்ன - என்று தோழிமார் சொல்ல. மகிழ்தந்து - மகிழ்ந்து. பொங்கு உததி - கடல்.

203. மண் இடந்த - மண்ணைப் பெயர்த்தெடுத்த. வனசரன் - வேடராகிய கண்ணப்பர்.

204. சுரர் ஆசை பொற்பு - தேவர்களுடைய ஆசைக் கிடமாகிய அழகமைந்த. தொன்னகரம் - அமராவதி. வரராசையாகிய புன்னைவனம்.

204-5. முரசவொலியாகிய ஆர்ப்பு. அவனி எங்கும்.

206. கலையையும் ஆராயப்பட்ட வளையையும் நிறையையும் நாணையும் கைவிட்டாள்; ஆய் - ஆராய்ந்த; நிறை - "நிறையெனப் படுவது மறை பிறரறியாமை"(கலி. 133:12)என்பர். செம்பொற்சிலை - மேருமலையாகிய வில்.

207. வெங்கனலி விட்ட மெழுகா மெனவெதும்பி
அங்க முருகி யயர்வுற்றாள்—வங்கத்

மடந்தை.

208. தெழுவாரி வையத் தெவர்க்கு மதனூல்
வழுவாம லோது மடந்தை—முழுதும்

209. வடிவுபெறு மன்று மதன்சூட்ட வைத்த
முடியைநிக ரான முலையாள்—படிமிசையோர்

210. ஆவிதனை யுண்ணாத வம்பொருநான் கல்லாத
காவிதனை வென்றகருங் கண்ணினாள்—பூவலருங்

211. கொத்துத் தொடையல் குவலயத்தோ ராவியொடு
வைத்துச் செருகு மலர்க்குழலாள்—உத்தரியப்

212. பொற்றனவெற் பன்ன புணர்முலையைத் தாங்குதலால்
மற்றுளதென் றோது மருங்குலாள்—சிற்றிடை

---

207. அங்கம் - உடம்பு. வங்கத்து - கப்பலை யுடையதாய்.

208. மதனூல் - மன்மதனுக்குரிய நூல்; "சாற்று மதனூ றலைகண்டும்", "மதனூல் விருத்தி" (சோக்க உலா. 394, 449); "வெஞ்சிலை யனங்க வேத முறைமையான் மேவி னாரே" (வி. பா. சம்பவச். 97); "கணிகையர் முகத்திற் கூறுங் காமனூ கமங்கள்" திருக்குற்றலப். மந்தமாருதச். 41.

210. காவி - கருங்குவளைமலர்; காவிமலர் ஆவியை யுண்ணுமென்பது, "முழுநீலங், கொல்லுமத னம்பின் குணம்" (இரத்தினச். 11) என்பதனாலும் விளங்கும்.

211. தொடையல் - மாலை; தொடையலை ஆவியொடு வைத்துச் செருகுங் குழல்; "செக்கச் சிவந்த கழுநீருஞ் செகத்தி லிளைஞ ராருயிரும், ஒக்கச் செருகுங் குழன்மடவீர்" (கலிங்கத். 54); "உருகுஞ்சா ருயிருண்டன வுணர்வுண்டன வொழுகத், திருகுங்குழ லரமங்கையர் திறமின்கடை திறமின்" தக்க. 13.

212. உத்தரியம் - உத்தரீயம். பொன் தனவெற்பு - மேருவை. மற்று: அசைநிலை. தாங்குதலால் உளதென்று கூறப்படு மருங்குல்; "கலைக்கீ ழகலல்குற் பாரம தாரங்கண் ணார்ந்திலங்கும், முலைக்கீழ்ச் சிறிதின்றி நிற்றன் முற்றாது" திருச்சிற். 59.



213. மின்னொத்த நல்யாழ் விறலியரும் பாங்கியரும்
தன்னொத்த வஞ்சியருந் தற்சூழ—முன்னூற்று

214. மூந்திருக்குங் காணாத முக்கட் பசுந்தேறல்
வந்திருக்கும் புன்னை வனத்தெய்தி—இந்துநுதற்

215. பாங்கி யொருத்திதரப் பண்ணிசையப் பாடுதற்கு
வாங்கி மகரயாழ் வாசித்தாள்—பாங்கிருந்த

216. பூவைபசுங் கிள்ளையுடன் புட்குலங்க ளாமிருந்த
காவை யகன்று கலந்துறையப்—பாவையும்

217. தம்மின மென்று தழீஇக்கொண் டனவென்ன
மைம்மலிவேற் கண்ணார் மறுத்துரைத்தச்—செம்மை

218. மகரயா ழின்னிசைக்கு வந்தன வென்று
பகர மனங்கனிந்து பைந்தேன்—நிகரின்றி

219. இன்னிசையாழ் பின்னு மிசைத்தா ளிசைப்பளவில்
முன்னிருவர் காணா முடிவிலான்—பொன்னிதழி

220. எந்துமிரு நான்குபுயத் தெம்மான் மணிமறுகிற்
போந்த பவனியெதிர் போய்ப்பணிந்தாள்—பாய்ந்தபொறிப்

221. பையா டரவப் பணியான் மழுவிருந்த
கையான் மணித்தேர் கடாவினான்—பெய்வளைக்கை

222. அஞ்சொலிளங் கிள்ளை யயர்ந்தா ளதுகண்டு
விஞ்சுகொடி மாட மிசைக்கொடுபோய்—வஞ்சியராப்

---

213. விறலியர் - விறல்பட ஆடும் மகளிர்; விறல் - மெய்ப்பாடு.

214. இருக்கும் - வேதமும். தேறலிருக்கும் புன்னைவனமென்பது ஒரு நயம்.

216. பூவை - நாகணவாய்ப்புள். காவை - சோலையை. புட்குலங்கள் கலந்துறைய. பாவை - மடந்தை.

215-6. பாங்கிருந்த பூவையுடன், பாங்கிருந்த கிள்ளையுடன்.

217. என்ன - என்று மடந்தை கூற.

217-8. வேற்கண்ணார் பகர.

219. இதழி - கொன்றை.

222. [illegible] மடந்தை. வஞ்சியர் தோழிமார்.

223. போதுதழல் கீழ்விரித்தாற் போன்ற மலரமளி
மீது கிடந்த வெதும்பினாள்—சீதக்

அரிவை.

224. குமுத மனையவிதழ்க் கோதைதிரை வேலை
அமுத மனைய வரிவை—திமிரமென

225. நெய்த்துச் சுருண்டு நெறித்துக் கடைகுழன்று
மைத்துத் திரண்ட மலர்க்குழலாள்—முத்த

226. வடங்கொண்டு கச்சறப் பூரித்து மார்பத்
திடங்கொண்ட கொங்கை யிணையாள்—விடங்கொண்டு

227. சேலைத் துரந்து திகழ்பூங் குழைதடவி
வேலைத் துரந்த விழியினாள்—தாலமிசைத்

228. தேசழகு பெற்றமணித் தேர்த்தட்டுஞ் சேரிளைஞர்
ஆசையும் போலகன்ற வல்குலாள்—வாசமலர்ப்

229. பொன்னைநிக ராக்கிப் புயலோ டியங்கியொளிர்
மின்னையுருக் கொண்டனைய மேனியாள்—பொன்னிலத்து

230. மாமகளிர் சூழ்ந்ததரு மங்கையென வாரிதிப்
பூமகளிர் சூழப் பொலிந்திருப்பாள்—காமர்

231. ஒருகமல மீதிலிரண் டுற்பலமுந் தேறல்
வருகுமுத மும்பூத்த வல்லி—திருவுருவம்

232. வாடாத செவ்வி மகளிரொடும் பூங்காவில்
ஏடார் மலர்கொய்ப வேகுதலும்—கோடிய

---

224. கோதை - மாலைபோல்வாள்; "கோடலெதிர்முகைப் பசுவீ முல்லை, நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ, ஐதுதொடை மாண்ட கோதை போல, நறிய நல்லோள்" (குறுந்தொகை, 62.) திமிரம் - இருட்டு.

225. கடைகுழன்று - கடை சுருண்டு. மைத்து - கறுத்து.

227. துரந்து - செலுத்தி. தாலம் - பூமி.

228. தேசு - ஒளி; இயற்கை யழகுமாம். பரி. 12:21.

228-9. மலர்ப்பொன்னை - திருமகளை. 230. தரு மங்கை - இந்திராணி.

231. கமலம் முகத்திற்கும், இரண்டு உற்பலம் கண்களுக்கும், குமுதம் வாய்க்கும் உவமைகள்; உற்பலம் - கருங்குவளை; குமுதம் - செவ்வல்லி.

232. ஏடு - பூவிதழ். கோடிய - வளைந்த.

# செய்தித் திரட்டு.

**தமிழ்நாட்டு ஆகமசபை அறிக்கை:**—1932 டிசம்பர் 27, 28, 29உ களில் குருவாயூரில்நடந்த மஹா சம்மேளனத்திற்குத் தேவகோட்டை அட்வகேட் எஸ். சுப்பிரமணியஐயர் அவர்களும், மற்றும் சில வக்கீல்களும் பல பண்டிதர்களுமாக 10 பேர்களுக்கு மேலும் இதாஜில்லாக் களிலிருந்தும், பம்பாய், காசி, கற்கத்தா, அமதாபாத் முதலான பல இடங்களிலிருந்தும் பல பண்டிதர்களும், அட்வகேட்களும், கனதனவான் களும் வந்திருந்தார்கள்.

வல்லபமடம், சங்கேசுவரமடம், ஜெகனுதமடம், ப்ரபாஸ்மடம், உடுப்பிமடம் முதலிய ஏழு மடாதிபதிகளும், காஞ்சி காமகோடி, சிருங்க கிரி, புஷ்பகிரி, கூடலி, அஹோபலம், வானமாமலை முதலான மடங்களி லிருந்து பிரதிநிதிகளும், கற்கத்தாவிலிருந்து பஞ்சானனன் தர்க்கரத்னம் முதலான சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்த அநேகம் பண்டிதர்களும், கொல் லங்கோடு ராஜா, புன்னத்தூர் ராஜா, ஸாமொரின் இளைய ராஜா, வலிய ராஜாக்களும், அநேகம் நம்பூத்ரி வித்வான்களும், பல ஊர்களிலிருந்து சுமார் 80 பண்டிதர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ முகங்களும் வந்தன.

குருவாயூர் மஹா சம்மேளனத்தில் ஜாதிமதஆசாரங்களைக் காப்பாற்று வதில் தீவிர நோக்கமுற்ற இரண்டாயிரத்து (2000)க்கு அதிகமான ஆஸ் திகர்கள் கூடியிருந்தார்கள்.

வல்லபமடம் ஆசாரியரான கோகுல்நாத்ஜிமஹாராஜ்அவர்கள் அக்ராச னம் வகித்தார்கள். சென்னை அட்வகேட் திவான் பகதூர் டி. ஆர். இராமச் சந்திரஐயர் அவர்கள் வரவேற்புக் கமிட்டி அக்கிராசனம் வகித்தார்கள். கோ குலநாத்ஜி மிகுந்த ஊக்கத்துடன் ஷை ஸம்மேளனத்தை நடத்தி வைத்த தும் தவிர, ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றுவதற்கு வேண்டியகாரியங் களைச் செய்வதற்கு எப்பொழுதும் தயாராகவுமிருக்கிறார்.

பஞ்சமர்கள் ஆலயப்பிரவேசம் செய்யக்கூடாதென்றும், ஸகபோஜ னம் கலப்புவிவாகம் முதலிய அதர்மமான காரியங்களைச் செய்யக்கூடா தென்றும், புராதன தர்மங்களையும் ஆசாரங்களையும் எவ்விதத்திலும் காப் பாற்றவேண்டியது நம்முடைய கடமையென்றும், வேறுபல முக்கிய தீர் மானங்களும் முடிவுசெய்து நிறைவேறின. குருவாயூர் ஆலயத்தைக் காப் பாற்றுவதற்காக 1000 தர்மவீரர்கள் சேர்க்கவும் தீர்மானித்து அவர்களின் செலவுக்காக ரூபாய் 5,000 க்கு மேல் அரைமணி நேரத்திற்குள் கொடுத் தார்கள்.' எனக்கூறுகின்றது.

**திருநீலகண்ட நாயனர் திருவிழா:**—சிதம்பரம் இளமை யாக்கினர் கோயிலில் ஷை தேவஸ்தான உரிமையாளர்களான, காரைக்குடி மெ. ப. பழநியப்ப செட்டியார், சோமசுந்தரம் செட்டியார் ஆகிய திருவாளர்களால் தை—௨, அவ்வுகளில் சிறப்பாக நடத்தப்பெற்றது.

**ஆத்தங்குடி ஸநாதனதர்ம மகாசபை:**—தை ௧௮௨ மாலை, ௨. சிறுவயற் பொன்னழகி சன்னிதி அலங்காரக் கொட்டகையிற் கூடியது. தேவகோட்டை சிவநேசச் செல்வர் கரு. கி. சொர்ணநாதன் செட்டியார் தலைமை வகித்தார்கள். மறைத்திருவாளர் இராமாயண சக்கரவர்த்தி ஐயங்காரும் தமிழ்மறைவாணர் தண்டபாணி தேசிகரும் கடவுள் வாழ்த்துக் கூறினர். தலைவர் பிரேரணையும் சபையின் பெருமையும், தற்காலநிலை, சாஸ்திரத்தின் கருத்து, கலியின்வலிமை, வைதீகலௌகீகம், காங்கிரசும் சுயராஜ்யமும் என்பனபற்றி முறையே ஸநாதன தார்மிகளான:—ஆத்தங்குடி வித்துவான் முத்துச்சாமி ஐயங்கார் (இச்சபை நிரந்தர தலைவர்), தேவகோட்டை வக்கீல் நாகரத்ன சாஸ்திரியார், குறிச்சி தர்க்கவித்துவான் இராமபத்திராச்சாரியார், ஆத்தங்குடி வேதபாடகசாலை கல்யாணசுந்தர கனபாடிகள், சிவநேசன் இராமசாமி செட்டியார், ஆத்தங்குடி சு. வீர. கதிரேசச்செட்டியர் (இச்சபை உபதலைவர்) ஆகியவர்கள் பிரசங்கிக்க ஆத்தங்குடி சோதிட மணவாளையங்கார் வந்தனங் கூற இனிது நிறைவேறியது.

அவ்வூர்த் தனவணிக நகரத்தார்கள் கண்ணியமாக வரவேற்றுக் கூட்டங்கூட்டி உணவாதிகள் உபசரித்தமை போற்றத்தக்கது என சபைக்காரியதரிசி மு. திருவேங்கடமையங்கார் தெரிவிக்கிறார்.

இச்சபை குன்றக்குடியிற் கூடியபோது, ஆத்தங்குடி செ. கா. வகையார் தங்கள் அன்னசத்திரத்தில் இனிது உபசரித்தார்கள்.

**கோநகர்:**—இவ்வருட ஆருத்திரா தெரிசனத்திற்கு, ஸ்ரீ நடராஜப்பெருமானும் சிவகாமி அம்மையாரும் திருவுலாவந்தபோது, இவ்வூர்க் கற்பகவிநாயக கலாசாலை மாணவர்களால், தேவார திருவாசக திருப்புகழ்க் கோஷ்டி இன்னிசைக் கருவிகளுடன் நடத்தப்பெற்றது. மாணவர்களுள் 8, 9, வயதுச் சிறுவர்களாகிய சு. வேங்கடசுப்ரமணியன், ந. முத்துச்சாமி, சு. ஜெயலட்சுமி, சா. காவேரி என்ற மாணவர்களுக்கும், இன்னிசையுடன் பாசுரங்களைப் புகட்டி, அம்மாணவர்களை யாவரும் புகழும்படிசெய்த தேவார ஆசிரியர் திரு.ம.க. சரவணப்பெருமாள் ஓதுவாரவர்களின் திறமை பெரிதும் போற்றற்குரியதாம்.

**கோட்டையூர்:**—திருவாளர் க. வீ. அன. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள், திருப்புத்தூர் தாலூகா போர்டுத் தலைவரானமைக்கு, தை ௨௪௨ மாலை, மெ. கி. மாளிகையில், திவான்பகதூர் அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்கள் தலைமையில் கூட்டங்கூடி தாலூகா போர்டு தலைவரவர்கட்கு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்து, ஒரு சிற்றுண்டி விருந்தும் கோட்டையூர்த் தனவணிக நகரத்தார்களால் நடத்தப்பெற்றது.

**அரசாங்க அறிக்கை:**—பிரிட்டிஷ் இந்தியன் பாஸ்போர்ட்டுகளைப் புதிப்பிப்பதற்கு விதிக்கப்பட்டுவந்த கட்டணம் இரண்டுரூபாவை 15-1-33 முதல் ஒரு ரூபாவாகக் கவர்ன்மெண்டார் குறைத்துள்ளார்கள் என்று கூறுகின்றது.

**காரைக்குடித் தமிழ்ச்சங்கம்:**—இருபத்திரண்டாவது ஆண்டுவிழா, சுவாமி விபுலானந்தர் தலைமையில், புலவர் பெருமக்களின் விரிவுரைகளுடன், தை—௧, ௰௨களில் நன்கு நடைபெற்றது.



**மாமக சைவசித்தாந்த மகாசமாஜம்:**—இம்மதி ௨௭௨ வரும் மாமக வைபவ காலத்தில், தருமபுர ஆதீன வித்வசிகாமணி உயர்திரு சுவாமிநாத பண்டிதர் அவர்கள், முன்னைய மாமகத்தில் சமாஜங்கூட்டி சைவப் பிரசங்கங்கள் செய்தவாறே, இம் மாமகதினத்தின் முன்மூன்று தினங்கள் பிரசங்கங்கள் நிகழ்த்துவிக்கவும், தீண்டாதார் ஆலயப்பிரவேசஞ் செய்ய விடுத்தலோ தடுத்தலோ, அவர்க்கும் பிறர்க்கும் பெருநன்மையாக, சுருதியுக்தியநுபவங் கொண்டு நிலைநாட்டவும், வரும் வித்துவான்களுக்கு உண்டியும் உறையுளும் உதவி வழிச்செலவு முதலியன கொடுக்கவும், தருமையாதீன மகாசந்நிதானம் அவர்கள் முன்மாமகத்தில் உதவியவாறே உதவ இசைந்த தொகையையும், பிறருதவியையும் கொண்டு, திருவருளும் குருபாதமும் துணைப்பற்றி விஞ்ஞாபன பத்திரம் வெளியிட்டு முன்வந்துள்ளார்கள்.

**மங்களாம்பிகை நகர்:**—கும்பகோணத்தில் 10—3—1933 ல் நடைபெறும் மகாமகத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்குத் தகுந்த உறையுள் வசதியும், பிறவசதிகளும் செய்துகொடுக்க, மாமகக் குளத்துக்கும் புகைவண்டி நிலயத்துக்கும் அணிமையாக நல்ல சுகாதாரம் பொருந்திய மைதானத்தில் பெரிய வட்டாரத்துள், வீதிவீதிகளாகப் பல அறைகள் கொண்ட கொட்டகையாய் விளங்குவது. கட்டணவிகிதம் முதலியவற்றுடன் ஒரு பாரங் கொண்ட சிறுபுத்தகம் அச்சிட்டு வழங்கப் பெற்றுள்ளது. வேண்டும் சாதி இந்துக்கள், “P. சிவகுருநாத பிள்ளை, ஆர்கனைசர், மங்களாம்பிகை நகர், கொரநாட்டுக் கருப்பூர், கும்பகோணம்.” என்ற விலாசத்துக்கு எழுதிக் கொள்ளலாம்.

**சிவகங்கை:**—கோகலே ஹாலில், 31—1—1933 ல் சப்கோர்ட் நீதிபதி மகா-ள-ளஸ்ரீ ஆர். ரெங்கசாமி ஐயங்கார் அவர்கள் தலைமையில், சிவகங்கை தாலுகா போர்டுத் தலைவரான மகா-ள-ளஸ்ரீ சுப. க. அ. இராமநாதன் செட்டியாரவர்களுக்குப் பாராட்டுரைகளும், தோட்டக்கச்சேரிசங்கீதக்கச்சேரிகளும் தெற்குவட்டகை நகரத்தார்களால் நடைபெற்றன.

**உருவப்படத் திறப்புவிழா:**—சிவகங்கை தாலூகா போர்டின் முந்தின தலைவர் அலவாக்கோட்டை திருவாளர் பி. நா. சொக்கலிங்கம் செட்டியாரவர்களின் உருவச் சித்திரப் படாத்தை டை தாலூகாபோர்டு ஆபீசில் 16—1—33 ல், சிவகங்கை சப்கோர்ட் நீதிபதி அவர்கள் திறந்துவைத்தார்கள். பலகன தனவான்கள் விஜயமாயினர். செட்டியாரவர்களின் குணவன் நிருவாகத்திறனுதிய புகழ்ந்து பேசப்பெற்றன.

**சென்னை சைவசமய பக்தஜன சபை:**—சபையினரது பிரார்த்தனைக்கு இரங்கி, கும்பகோணம் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகள் தைமீ 4௨ மாலை 4 மணிக்கு சென்னை தங்கசாலை வீதி 1/488 வது எண்ணுள்ள கட்டிடத்தில் 1904 வது வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ‘சைவசமய பக்தஜன சபை’ க்கு விஜயஞ்செய்தார்கள். சபையின் நிர்வாக அங்கத்தினர்கள் சபையின் நோக்கத்தையும், மதக்கருத்தையும் சன்னிதானத்தில் தெரிவித்ததில் மிகவும் சந்தோஷித்து அதன் அறிகுறியாக சுவாமிகள் தம்முடைய ஆசீர்வாதங்களும் ஒரு திருமுகமும் ரூபா நூற்றெட்டும் (Rs 108—0—0) தந்து உபகரித்தார்கள். சுவாமிகளை இச் சபையினர் தலையும் தடக்கையும் தாழ்த்தி வணங்குகிறார்கள்.

**குமாரராஜா:**—சென்னை நகர கார்பொரேஷன் தலைவர் செட்டிநாட்டுக் குமாரராஜா அவர்கள் **மேயர்** என்னும் கௌரவப் பெயர் பெற்றுள்ளார்கள்.

**பினாங்கு:**—குமாரக்கடவுள் தை உஎ தஞ்சமாநகரிலிருந்து தண்ணீர் மாமலைக்கு வெள்ளிரதாரூடராய் எழுந்தருளி, உஅ மகரபுஷ்ய மகோற்சவம் கொண்டு, மாகேசுவர பூசை யுவந்து, இரவு திருவுலாக்காக்ஷி தந்து, உகூ சர்க்கரைக் காவடிகளின் வைபவங்களுடன் அபிஷேகாதிகள் உவந்து, ௩௰ மாலை திருவுலாக்கொண்டு, வாணக்காக்ஷிகண்டு தமது இருக்கை சேர்ந்தருளினர்என, பினாங்கு நகரத்தாரிடமிருந்து கிடைத்த மகோற்சவப் பத்திரிகையால் தெரிகிறது.

**சபைத் தாபகர் குருபூஜை:**—சென்னையிலும், பிறவிடங்களிலும் வேதாகமோக்த சைவசித்தாந்த சபைகளைத் தாபித்து,சுமார் நூறு சத்கிரந்தங்களை யியற்றி, இராமநாதபுரம் சேதுசமஸ்தான பாஸ்கர சேதுபதி மன்னரவர்களால் 'வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்' என்னும் பட்டம் வகித்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களின் குருபூஜை, திருவல்லிக்கேணி வேதாகமோக்த சைவசித்தாந்த சபையில் இம்மதி கசூ ரேவதி நாளில் நடைபெறும். பன்னிரு திருமுறைகட்கு அபிடேக ஆராதனையுடன் மாலை சமயாசாரியர் நால்வர் முத்தித் திருப்பதிகங்களும், ஆசிரியரவர்கள் அருளிச்செய்த ஆசார்ய ஸ்தவப் பதிகங்களும் இனிது ஓதப்பெறும்.

**திருமயிலை:**—செங்குந்த வாலிப சங்கத்தின் ஐந்தாவதாண்டு அறிக்கை வரப்பெற்றோம். இலகுவான சந்தாவருவாயைக் கொண்டு, சிக்கனமான செலவில் காரியங்களைச் சிரத்தையுடன் காரியதரிசிகள் நடத்துகின்றார்கள். குலநலம், தெய்வநம்பிக்கை, சமய வொழுக்க மாதிய பிரசங்கங்கள் நிகழ்கின்றன. இதில் பலரும் வந்து படித்தற்கு ஏதுவாகப் புத்தகங்கள் பத்திரிகைகள் தொகுத்து வாசகசாலை வைக்கப்பெற்று மிருக்கிறது.

**அநுமதிக்கவில்லை:**—டாக்டர் சுப்பராயன் சென்னை சட்டசபைக்குக் கொண்டுவர விரும்பிய ஆலயப்பிரவேச மசோதாவை இராஜப்பிரதிநிதி அவர்கள் அநுமதிக்கவில்லை.

**தண்டனை:**—தீண்டாதார் ஆலய நுழைவுக்கு ஆதரவாகப் பிடிவாதம் செய்த டாக்டர் சரவணமுத்தும் சிலரும் சிறைவாசம் விதிக்கப்பட்டபின் வழக்குத்தொடர்ந்த போலீஸ் பரிசோதகரை நிர்மூடர் என்னுங் கருத்துப்படச் சரவணமுத்து ஏசினர் என கொழும்பு போலீஸ் நீதிஸ்தலத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு, அவருக்கு 50 ரூ அபராதமும் 3 மாதக் கடுங்காவற்றண்டனையும் விதிக்கப்பட்டது.

**அடிவைக்கப்படாது:**—லெனின் முதலான பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களைப்பற்றி புதுச்சேரியிற் பேசியதாகப் போலீஸ் கமிஷனர் ரிப்போர்ஸ்தின்பேரில், அக் கவர்ன்மெண்டார் பிறப்பித்திருக்கிற கட்டளைப்படி, போலிச் சுயமரியாதை வீரராகிய பொன்னம்பலனார், இனி பிரஞ்சு இந்தியாவில் தலைநீட்டி அடிவைக்கப்படாதாம்.

---

# செய்தித் திரட்டு.

---

**ஆத்தங்குடி:**—இவ்வூர்ச் சிவாலயத்திற்குத் தனவணிக நகரத்தார்கள் ரூபா நாற்பதினாயிரத்துக்கு மேற் செலவிட்டு, ஓர் அழகிய வெள்ளிரதம் செய்து முடித்து, தை உசஉ காலை வெள்ளோட்டமும், மாலை வெள்ளிரதம்—வெள்ளிக் கேடகங்கள்—வெள்ளி மூடிகம்—வெள்ளி ரிடபம் ஆகியவைகளில் ஐம்பெருங்கடவுளர் திருவுலாப் போந்தருளவும் செய்தனர். மிகச்சிறப்பாக இருந்தது.

அன்று மாலை 3 மணிமுதல் தேவகோட்டை அட்வகேட் மகாா-ா-ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் தலைமையில் ஸநாதன தர்ம மகாசபை கூடியது. ஸநாதன தர்ம சீலர்களான— முத்துச்சாமி ஐயங்கார்—மணவாளையங்கார்—சக்கரவர்த்தி ஐயங்கார்—இராமபத்திராச்சாரியார்—சு. வீர. கதிரேசச் செட்டியார்—தேவகோட்டை வக்கீல் நாகரத்ன சாஸ்திரியார்—சிவநேசன் இராமசாமி செட்டியார் ஆகிய திருவாளர்கள் சொற்பொழிவாற்றினர்.

சுதர்மவிரோதிகளுள் ஒருவராகிய ஜகதீச ஐயர் சிலவினாக்க ளெழுப்பினர். இன்னுஞ் சிலர் கடுகடுத்தனர்; படபடத்தனர்; முணுமுணுத்தனர். அவற்றையெல்லாம் அடக்கித் தலைவர் தக்கமுறை விடைகள் பகர்ந்து, காந்தியாரின் ஆலயவிரோதக் கொள்கையை ஆடிக்காற்றிற் பஞ்செனப் பறக்கடித்து, அருக ரல்லாதார் ஆலய நுழைவு கூடாதென ஆணித்தரமாக நிலை நாட்டினர்.

சுதர்மவிரோதிகளும் டாக்டர் சுப்பிரமணியையர் தலைமையில் கூடி ஏறுமாறாகப் பேசினார்கள்.

**ஆ. முத்துப்பட்டணம்:**—உலகநாயகியம்மன் கோயிலில், தை உஎ அஷ்டபந்தன மருந்துசாத்திக் கும்பாபிடேகமும் திருவுலாவும் நடைபெற்றன.

**திருநெல்வேலி:**—தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் 11, 12 வது ஆண்டு நிறைவுவிழா மகிபாலப்பதி பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில், திருநெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் தை உரு, உசு—ம் நாட்களிற் பல அரியபெரிய விரிவுரைகளுடன் இனிது நிறைவேறியது.

**சிதம்பரம்:**—10—2—1933 காலை 8 மணிக்கு, கல்வி இலாகா மந்திரி ஹானரபிள் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் B. A. B. L அவர்களால், ராஜா அண்ணாமலை ஹால் திறப்புவிழாவும், அன்னார் தலைமையில் அன்று மாலை 4 மணிக்கு அண்ணாமலைநகர் சர்வகலாசாலை ஸ்தாபகரினக்கொண்டாட்டமும் மிகக் குதூகலமாக நடைபெற்றதுடன், தலைவரவர்கட்கு உவகைப்பத்திரம் வழங்கி ஓர் சிற்றுண்டி விருந்தும் செய்யப்பெற்றது.

**வடலூர்:**—தை உஅ பூசத் திருவிழாவும், அதுமுதல் ௩௰ வரை தஞ்சை பருவ பூஜா கைங்கரிய திருவருட் பிரகாச ஞான சபையாரால் அன்னதானமும் இனிது நிறைவேறின.

**மதிப்புரை:**—வரப்பெற்ற புத்தகங்கள், யாழ்ப்பாணப் பஞ்சாங்கங்களுக்கெல்லாம் பங்குனி எஉ வரும்.

ஆளுடையார்கோயில்:—திருவாதிரை உற்சவம் இவ்வாண்டில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சிவபெருமான் குருசிரியாராகக் குருந்தமரநீழலில் எழுந்தருளி மாணிக்கவாசகப் பெருமானுக்கு உபதேசஞ்செய்தருளிய திருவிளையாடல் நடத்தப்பெற்ற காட்சி பெரிதும் போற்றத்தக்கது. காலந்தவறாது உரியகாலத்திலேயே உபதேசம் முதலான யாவும் நடைபெற்றமை மகிழ்தற் குரியதாக இருந்தது.

சைதாப்பேட்டை:—சண்முகசுப்பிரமணிய திருப்புகழ்ச் சபையின் ஆதரவில் தை உகூ இரவு 8 மணிக்கு செங்குந்த கோட்டத்தில் திருப்புகழ்விருத்தியுரை ஆசிரியர் பிரம்மஸ்ரீ P. S. சுப்பிரமணிய ஐயர் M. A. தலைமையில்திருவாளர் S. கணபதி முதலியார் B. A. "அழுது அடியடைந்த அன்பர்" என்னும் சொற்பொழிவு ஆற்றினர்.

சிவசுப்பிரமணியக் கடவுளுக்குப் பிர்மோற்சவம், இம்மதி கஎ உ தொடங்கி கூஉயுடன் நிறைவேறும். அவ்வுற்சவங்களில் ஷை திருப்புகழ்ச் சபையினரால் திருப்புகழ்ப் பாராயணம் நடைபெறும்.

புத்தகவரவு:—மகான்—வண்ணச் சரபம்—உயர்திரு தண்டபாணிசுவாமிகளருளிய 'சத்தியசூத்திரம்—சத்தியவாசகம்' —உயர்திரு இராமாநந்த சுவாமிகள் இயற்றிய 'தியானமுறை நீதிவாக்கியம்' —சிரவணபுரம், திருவாமாத்தூர்க் கௌமார மடாலயங்களின் அடியவராகிய அருட்டிருவாளர்கள் மூவர் இயற்றிய 'கீரநத்தம் தோத்திரத்திரட்டு' —கந்தசாமி சுவாமிகளியற்றிய 'வண்ணத்திரட்டு —மருதமலைப் பிரபந்தத் திரட்டு' —அவர்களும் சுந்தரசுவாமிகளும் இயற்றிய 'இரத்திநசலக்கடவுள் பிரபந்தத் திரட்டு' —இரங்கசாமிக் கவுண்டன் புதூர் 'தண்டபாணித் தோத்திரத் திரட்டு" ஆகியவைகளை எமக்குஇலவசமாக அனுப்பித்தந்த ஷை கௌமார மடாலயத்தார்க்கு, எமது நன்றியும் வந்தனமும் உரியதாகுக. ப—ர்

---


# "சிவநேசன்"

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமய உண்மை தமிழின் இனிமை சாதிய வொழுக்கங்களின் நன்மையாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2 4 0 | அதற்கு மூலதனம் | ரூ 30 0 0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3 0 0 | அதற்கு மூலதனம் | ரூ 40 0 0 |

தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0
நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## சிவநேசன் அச்சுக்கூடம்.

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லாவித அச்சு வேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர் மனதிற்குகந்த வண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.


---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில் பத்திராதிபர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெ[illegible]